KALKI 19.12.93

ரூ. 3.00

கல்கி



கலாநிதியுடன் ஒரு கலகல சந்திப்பு



சிரிகமபதநி

சிறப்பிதழ்

“ராமதாஸுக்குத் தொலைநோக்குப் பார்வை கிடையாது!”

“வன்னியர்கள், ஏழைகள். ஒரு மாபெரும் நம்பிக்கையுடன் அவர்கள் பா.ம.க.வில் இணைந்திருக்கிறார்கள். அவர்களுக்கு மட்டுமல்லாமல், சமுதாயத்தில் மற்ற பிரிவைச் சார்ந்தவர்களுக்கும் இயக்கத்தை விரிவுபடுத்திச் சேவை செய்யலாம் என்ற ஆசையால்தான் பா.ம.க.வில் சேர்ந்தேன். ஆனால் டாக்டர் ராமதாஸை வைத்துக் கொண்டு ஒன்றும் செய்ய முடியாது என்பதைப் பின்னர்தான் உணர்ந்தேன். ஒரு கட்சியில் உள்ள தொண்டர்களுக்கு, சிறு சிறு வெற்றிகள்தான் உற்சாகமளிக்கும் டானிக். ஆனால் தொடர்ந்து ஓர் இயக்கம் தோல்விகளைத் தழுவுமானின் தொண்டர்கள் சோர்ந்து போய், இயக்கம் வலுவிழக்கும்

"தனித்துப் போட்டியிட்டு வெற்றி பெறக்கூடிய அளவுக்கு பா.ம.கவுக்குச் செல்வாக்குக் கிடையாது. ஆகவே, இதர எதிர்க்கட்சிகளோடு கூட்டணி வைத்துப் போட்டியிட வேண்டுமென்று வற்புறுத்தினோம். டாக்டருக்கு அது பிடிக்கவில்லை. இதைச் சொன்னதற்காக எங்களைக் குற்றவாளி போல் விசாரிப்பதாகச் சொல்கிறார். கருத்துச் சொல்லக் கூட உரிமை கிடையாதா? ராணிப்பேட்டையில் தனித்துப் போட்டியிட்டதன் மூலம் வோட்டுக்களைப் பிரித்து ஜெயலலிதாவுக்குத் தான் உதவினோம். பழனி தேர்தலில் வேட்பாளரை நிறுத்தாவிடினும் யாருக்கு வோட்டுப் போடச் சொல்வது என்று குழப்பம். காங்கிரஸுக்கு வோட்டு போடச் சொல்லலாம் என்று சொன்ன நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி மீது பாய்ச்சல்! இத்தனைக்கும் செயற்குழுவில் 90 சதவீதம் பேர் இதர எதிர்க்கட்சிகளோடு கூட்டணி வைத்துக் கொள்ள வேண்டும் என்றார்கள். ஆனால் சர்வாதிகாரமாகச் செயல்படும் டாக்டர் அதைப் பற்றிக் கவலைப்படாமல் தனியாகவே தேர்தலில் போட்டியிட வேண்டுமென்று முடிவு செய்து செயல்பட்டார்.

"என்னைப் போல் அரசியல் அனுபவம் நிறைந்தவர்கள் கட்சியில் இருந்தாலும் அவர்களைப் பயன்படுத்திக் கொள்ளாமல் இருந்தார். இதற்குக் காரணம், நிர்வாகப் பதவிகளைத் தங்கள்வசம் வைத்துக் கொண்டுள்ள சிறு குழுதான். அந்த குழுவைச் சேர்ந்தவர்கள், அடிப்படையில் மார்க்ஸிய - லெனினியவாதிகள். ஒரு வலுவான இயக்கத்தில் ஊடுருவி அதைக் கைப்பற்றி, தங்கள் எண்ணங்களுக்கேற்ப அதனைப் பயன்படுத்துவது அவர்கள் உத்தி. இது டாக்டருக்குப் புரியாமல் அவர்களை நம்புகிறார். டாக்டருக்குத் தொலைநோக்குப் பார்வையும் கிடையாது. ஆகவேதான் இப்போது கட்சி என்னைத் தலைவராகத் தேர்ந்தெடுத்திருக்கிறது. ஆனாலும் கட்சியின் நிறுவனர் ராமதாஸ்தான்."




"பா.ம.க. வேட்பாளராக நின்றுதான் எம்.எல்.ஏ.வாகத் தேர்ந்தெடுக்கப்பட்டீர்கள். அந்த அடிப்படையில் நீங்கள் பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் என்று டாக்டர் ராமதாஸ் சொல்கிறாரே?"

"என்னைத் தேர்ந்தெடுத்த மக்களைத் தவிர யாருக்கும் என்னை ராஜினாமா செய்யச் சொல்லும் உரிமை கிடையாது. 1967 முதல் நான் தேர்தலில் நிற்கும்போதெல்லாம் வெற்றி பெறும் தொகுதி பண்ருட்டி தொகுதி. உண்மையைச் சொல்லப் போனால், டாக்டர் ராமதாஸ் என்னை ஆதரித்ததால், வழக்கமாக எனக்கு வோட்டுப் போடும் பிற சமுதாயத்தினர் இந்த முறை போடவில்லை. மீண்டும் தேர்தல் வரும்; அப்போது பார்க்கலாம் யாருக்குச் செல்வாக்கென்று! இப்போது நான் ராஜினாமா செய்தால் ஜெயலலிதாவுக்குத் தான் லாபம். அதைத்தான் விரும்புகிறாரா ராமதாஸ்?"

- இப்படிச் சொல்லும் பண்ருட்டி ராமச்சந்திரன், வரும் ஜூன் மாதத்திற்குள், தமிழகம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்து, தம் தலைமையின் கீழ் இருக்கும் பா.ம.க.விற்காகப் பத்து லட்சம் உறுப்பினர்களைச் சேர்க்க இருக்கிறாராம்.

சந்திப்பு : ப்ரியன்

வருகிறார்கள் இளம் கலைஞர்கள்; வழி விட்டு நில்லுங்கள்!



கலகல கார்த்திக்

திருவல்லிக்கேணி எல்லையம்மன் கோயிலில் உத்ஸவம் நடந்த சமயம். அம்மன் வீதி உலா வந்து கொண்டிருந்தாள். கன்னத்தில் போட்டுக் கொண்டு, கற்பூரத்தை ஒற்றிக் கொண்டு வீட்டுக்குள் திரும்பினால்... குழந்தையைக் காணோம்!

''கார்த்திக், கா....ர்த்திக்'' - வீடு முழுக்கத் தேடி, அக்கம் பக்கம் அலைந்து, கவலை மேலிட வீதியில் இறங்கித் தேடினார்கள் பெற்றோர்.

அம்மன் வீதி உலாவுடன் வந்த மேள இசைக் குழுவால் கவரப்பட்டு, தானும் உலா போயிருந்தான் பொடியன் கார்த்திக். தாள வாத்தியங்களில் அவனுக்கு இருந்த ஈடுபாடு அன்று உதயமாக, அருகே இருந்த 'ஜெய் கணேஷ் தாள வித்யாலயா'வில் சேர்த்துவிட முடிவு செய்தனர் பெற்றோர்.

பையன், விநாயகர் பக்தன்; விநாயகராமின் விசிறி. பானை வயிற்றன் மேல் பக்தியிருந்ததால் கடம் வாசிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று கார்த்திக்குக்குப் பேராவல். எனினும் ''என்ன கத்துக் கறே....?'' என்று தாள வித்யாலயாவில் கேட்டபோது, ''நீங்க எது கத்துக் குடுத்தாலும் சரி'' என்று சொல்லிவிட்டான்.

ஆசிரியர்கள் மிருதங்கத்தையும், கடத்தையும் தட்டிப் பார்க்கச் சொல்ல, பையனின் 'கை' கடத்துக்கு ஏற்றது என்று தீர்ப்பாயிற்று. பிடிபடாத சந்தோஷத்துடன் கார்த்திக் பாடங்களை ஆரம்பித்தான். டி.எச். விநாயகராம் மற்றும் அவர் சகோதரர் டி.எச். சுபாஷ்சந்திரன் இருவருமே அவனுக்குப் பாடம் நடத்தினார்கள்.

இரட்டை குருநாதர்கள் வாய்த்த அதிர்ஷ்டத்தாலும் இயல்பான ஆர்வத்தாலும் ஐந்தாறு வருடங்களில் கச்சேரி வாசிக்கும் அளவுக்கு வளர்ந்து விட்டான்.


இன்று கார்த்திக் முன்னணி கடம் வித்வான். வயது 22 தான்! 'சமஸ்கிருத இலக்கியங்களில் தாளவாத்தியங்கள்' குறித்து எம்.ஃபில் படிப்புக்கு ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார். அனேகமாய் அத்தனை பாடகர்களுக்கும், மிருதங்க வித்வான்களுக்கும் ஈடுகொடுத்து, மேடையில் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார்.



• [illegible]

''ஒவ்வொரு கச்சேரியும் பரீட்சை தான்'' என்று பலமுறை மேடையேறிய பிறகும் கூறும் இவர், கடம் வாசிப்பை எவ்வளவு சீரியஸ்ஸாக எடுத்துக் கொள்கிறார் என்பதற்கு இன்னொரு உதாரணம் :

• கார்த்திக்



கச்சேரி அன்று, மெயின் ஆர்டிஸ்டுக்கு போன் செய்தோ, நேரில் சென்றோ அவர் என்ன கருதி வைத்துக் கொள்ளப் போகிறார் என்பதைக் காதில் வாங்கிக் கொள்கிறார். பிறகு அதற்கு ஏற்ற கடத்தைக் கவனமாகத் தேர்ந்தெடுத்துச் செல்கிறார்.

தாள வாத்தியங்களை இசைவாக வாசித்து, ஒன்றுடன் ஒன்று இழையச் செய்து ஃப்யூஷன் நிகழ்ச்சி தயாரிக்கும்

திட்டமெல்லாம் வைத்திருக்கும் கார்த்திக் ஓவியம் வரைவதிலும் எக்ஸ்பர்ட். வாங்கியுள்ள பரிசுகள் ஏராளம். ஃபர்ஸ்ட் லவ் கடம்தான். வாசித்து வாசித்துக் கைகள் நிரந்தர மாகக் காய்த்துப் போயிருப்பதைச் சற்றே பெருமையுடன் காட்டுகிறார்.

''எனக்கு நல்ல சாப்பாடு பிடிக் கும். நண்பர்களின் கம்பெனி ரொம்ப பிடிக்கும்...'' - கடம் என்றதும் படு சீரியஸ்ஸாகிவிடும் கார்த்திக் மற்ற நேரங்களில் 'கல கல கார்த்திக்'தான்!



● நித்யஸ்ரீ

மின்னலாக மேடையில்....!

ஜ்யோத்ஸ்னாவைப் பார்க்கும் போதே தெரிகிறது அவர் ஒரு டான்ஸர். சிரிக்கும் கண்கள். கொலுசு ஒலிக்க, நளினமான நடை, ஒடிசலான உடல்வாகு.... மேடையேறிவிட்டாலோ மின்னல் போல் பிரகாசிக்கிறார். கலாக்ஷேத்ரா மாணவி என்பது ஆட்டத்தில் மட்டும் அல்ல அலங்காரத்திலும் பளிச்.



● பிரசன்னா

இந்த ஜ்யோத்ஸ்னா 'எனக்கு நாட்டியம் வராது' என்று அழுதார் என்றால் நம்புவது கஷ்டமாக இருக்கிறது.

''.... ஆமாம், அழுதேன், என் ஆசிரியைகள் சமாதானம் சொல்வார்கள். ஆனால் ஆட்டத்தில் செய்யும் தப்பு நேராகும் வரை விடமாட்டார்கள்....'' என்று இப்போது சிரிக்கிறார் ஜ்யோத்ஸ்னா. ''அதனால் இன்று என் மாணவிகள் அழும் போது அவர்களுடைய உணர்ச்சிகளை நன்றாகப் புரிந்து கொள்ள முடிகிறது...'' என்கிறார். 19 வயதில் டிப்ளோமா வாங்கி, இருபதாவது வயதில் கலாக்ஷேத்ரா ஆசிரியை ஆகிவிட்டார்.

மீனாட்சி விஜயம் நாட்டிய நாடகத்தில் பால மீனாட்சியாகத் தோன்றுவதற்கு ருக்மிணி தேவி தேர்ந்தெடுத்த குழந்தை ஜ்யோத்ஸ்னா. கலாக்ஷேத்ராவுடன் ஏற்பட்ட தொடர்பு வலுப் பெற்றது. முழுக்க முழுக்க ஸ்காலர்ஷிப் பெற்றுப் படித்தார்.

''டான்ஸர் என்றால் மாதம் ஓரிரு நிகழ்ச்சிகளாவது கொடுக்கணும், சொந்தமாக நிகழ்ச்சிகளை இயற்றி அமைக்கணும் என்றெல்லாம் ஆசை இருக்காதா...? இப்படி ஒரு ஸ்தாபனத்துக்குக் கட்டுப்பட்டு, மற்றவர்களுக்கும் சொல்லித் தருவதிலேயே அதிக நேரம் செலவிடுவது இழப்பாகத் தோன்றவில்லையா....?''

- கேள்வியால் பாதிக்கப் படாமல் பதிலளிக்கிறார் ஜ்யோத்ஸ்னா.

''ஆரம்பத்தில் சற்று ஆதங்கம் இருந்தது. ஆடணும் ஆடணும் என்று தோன்றிக் கொண்டேயிருந்தது. அப்புறம் இங்கேயும் நிகழ்ச்சி வாய்ப்புக்கள் கிடைக்க ஆரம்பித்தன. இப்போது மனம் சமனப் பட்டுப் போய், கற்றுக் கொடுப்பதும் திருப்தி தருகிறது.''

கலாக்ஷேத்ரா ஆல மரத்து நிழலின் மகிமை போலும் - வயதைக் கடந்த விவேகத்துடன் பேசுகிறார். ''என்ன இருந்தாலும், ஒரு பத்மா, சித்ரா போல் உங்களுக்கென்று பெயர் இருக்காதே...?'' விடாமல் கேள்வியால் நாம் துரத்த,

''உங்களுக்கே தெரியும். இன்றைய சூழ்நிலையில் சபா நிகழ்ச்சிகள் நாட்டியக் கலைஞர்களைத் தேடி வருவதில்லை. பணம் பெரிய பங்கு வகிக்கிறது. அப்படியிருக்க, எங்களுக்கு ஒரு ஸ்தாபனத்தின் ஆதரவு இருக்கிறதே. எப்போதும் ஆரோக்கியமான, கலை செழிக்கும் சூழ்நிலை இருக்கிறதே...''

- அழுத்தம் திருத்தமான சொல்லுக் கட்டு!

பிறந்ததிலிருந்தே பாட்டு....!

வாரிசுப் பிரச்னை எதையும் கிளப்ப முடியாத ஒரு துறை கலைத் துறை. பிறந்ததிலிருந்தே பாட்டுக் கேட்டபடி வளரும் குழந்தைகளையும் சமையலறையில் கூட சங்கீதம் ஒலிக்கும் வீடுகளில் உருவாகும் குட்டி

வித்வான்களையும் வாசிக பிரச்னையில் சவால், சண்டைக்கு இழுக்க முடியா தல்லவா!

அப்படியொரு சூழலில் வளர்ந்தவர் தான் நித்யஸ்ரீ. இன்று மேடைகளிலும் கேஸட்களிலும் களை கட்டியிருக்கும் இளம் பாடகர்கள் வரிசையில் அசைக்க முடியாத இடம் பிடித்துள்ளவர்.

நித்யஸ்ரீயின் தந்தை வழிப் பாட்டி டி.கே. பட்டம்மாள்; அம்மா லலிதா சிவகுமார், மறைந்த பாலக்காடு மணி அய்யரின் மகள்; சிறந்த பாடகி. நித்யஸ்ரீக்கு ஒன்பது வயதிலேயே கச்சேரி செய்ய ஆசை வந்ததாம்.

''மற்ற குழந்தைகள் பாட்டு டீச்சர்களிடம் கற்றுக் கொள்வது போல் சீரியஸ்ஸாக உட்கார்ந்து கற்றுக் கொள்வீர்களா...?''

''ஆமாம். ஆனால் ஒரு சில சமயங்களில் கோபம் வந்து எழுந்து போயிருக்கிறேன். அப்போது குழந்தைதானே என்று விட்டுப் பிடிப்பார்கள். அப்புறமாக விட்டுப் போனதைப் பாடிக் காட்டச் சொல்வார்கள்....''

''இந்த சௌகரியங்களும் குடும்பப் பின்னணியும் இல்லாமல் நித்யஸ்ரீ ஒரு பாடகியாகியிருக்க முடியுமா...?''

''முடியும். நித்யஸ்ரீ மட்டும் இல்லை; யாராயிருந்தாலும் ஆர்வமும் திறமையும் இருந்தால் முன்னுக்கு வரக்கூடிய ஆரோக்கியமான சூழ்நிலை இன்றைக்கு நிலவுகிறது. எத்தனை இளைஞர்கள் கச்சேரி மேடைகளில்....!''

''அதற்கு இணையான இளம் ரசிகர் பட்டாளம் வளர்ந்திருக்கிறதா....? பத்து வருடங்கள் கழித்தும் இதே அளவு கூட்டம் கச்சேரிக்கு வருமா?''

யோசிக்கிறார் நித்யஸ்ரீ.... ''உறுதியாகச் சொல்வது ரொம்ப கஷ்டம். பள்ளிகளில் இந்திய இசையை அறிமுகப்படுத்துவது நல்லது என்று நினைக்கிறேன். மிஸஸ் ஒய்.ஜி.பி. இதைச் சிறப்பாகச் செய்து வருகிறார்....''

பி.காம் பட்டதாரியான நித்யஸ்ரீ எம்.காம் படிப்பை இடையில் விட்டு விட்டார். - எல்லாம் பாட்டுக்காகத்தான்.

''முழு நேரமும் பாடிக்கொண்டே இருக்கணும். இசையின் தாள நுணுக்கங்களையெல்லாம் கூர்மையாத் தெரிஞ்சுக்கணும்...'' கண்கள் பளபளக்க அடுக்கிக் கொண்டே போகிறார் நித்யஸ்ரீ.

ஆல் தி பெஸ்ட்!

கப்பல் படிப்பு; கிடார் வாசிப்பு!

கிடார் - மேற்கத்திய இசைக் கருவி. 'ட்வாங் ட்வாங்' என்ற அலறல் பாட்டுக்களைத்தான் அதில் இசைக்க முடியும் - நம் வீட்டுப் பையன்களும் பெண்களும் இரண்டுங்கெட்டான் வயதில் கதவைச் சாத்திக் கொண்டு கேட்கும் கெட்ட சங்கீதம்.... - இப்படியெல்லாம் கிடாரைப் பற்றிய மதிப்பீடுகள் 'ஆசாரமான' வட்டங்களில் இருக்கிறது.

இவை அத்தனையையும் உடைத்தெறியும் இளைஞர் பிரசன்னா.

''ஒட்டுமொத்தமாக எந்த இசையையும் தப்பு என்றோ நன்றாக இல்லை என்றோ ஒதுக்குவதை என்னால் ஏற்கவே முடியாது. அப்படி ஒதுக்குகிறவர்கள் எப்படி சிறந்த கலைஞராகவோ ரசிகராகவோ இருக்க முடியும்....?'' - ஆச்சரியத்துடன் கேட்கும் பிரசன்னா, கிடாரில் - கர்நாடக இசை வழங்கும் அபூர்வ கலைஞர்.

மேற்கத்திய இசையைத்தான் முதலில் கற்றுக் கொண்டார் பிரசன்னா. சகோதரி வீணை கற்றுக் கொண்டிருந்தாள், திரு


கல்யாணமாக கல்கி சொன்ன வழி!

மதுரை மணிஐயரின் சிஷ்யர் சேதுராமன் சைதாப்பேட்டையில் ஒரு சங்கீத வித்யாலயம் நடத்திக் கொண்டிருந்தார். ஆண்டு விழாவுக்கு கல்கி வந்திருந்தார். வரவேற்புரையில் பிரின்ஸிபல் தம் வித்யாலய மாணவிகள் எல்லாம் நன்றாகக் கல்யாணமாகி குழந்தை குட்டிகளுடன் சௌக்கியமாய் இருப்பதாகக் குறிப்பிட்டார்.



கல்கி பேசும் போது தமக்கே உரிய நகைச்சுவையோடு குறிப்பிட்டார், 'பெற்றவர்கள் இனிமேல் தங்கள் பெண்களுக்குக் கல்யாணம் ஆகவில்லையே என்று கஷ்டப்பட வேண்டாம். இந்த சங்கீத வித்யாலயத்தில் உங்கள் பெண்ணைச் சேர்த்துவிடுங்கள். கவலையே இல்லை. பாட்டு வந்தாலும் வராவிட்டாலும் கல்யாணமாகி, உங்கள் பெண்கள் சந்தோஷமாக இருப்பார்கள் அல்லவா!'

தகவல் : ஆர்.பி. சாரதி.



வாரூர் பாலசுப்ரமணியத்திடம். பிரசன்னா அதே குருவிடம் போய் வாய்ப்பாட்டு கற்றுக் கொண்டார். அதை அப்படியே கிடாரில் வாசிக்க ஆரம்பித்தார். மெள்ள மெள்ள வாத்தியம் படிந்து வந்தது. சங்கதிகளும் கமகமும் குழைவுடன் வெளிப்பட ஆரம்பித்தன.

பிரசன்னா '89 இல் கிடாருடன் மேடையேறி கர்நாடக இசைக் கச்சேரி செய்தார். இப்போது வாய்ப்புகள் தேடித் தேடி வருகின்றன. காஸெட் பதிவுகள் வேறு சுறுசுறுப்பாக நடக்கிறது.

''ஐ.ஐ.டி.க்குத்தான் நான் நன்றி சொல்ல வேண்டும்'' என்கிறார் பிரசன்னா... ''அங்குதான் எத்தனையோ விதமான இசையைக் கேட்கும் வாய்ப்புக் கிடைத்தது. எல்லா இசையையும் ஏற்கும், ரசிக்கும் பக்குவம் வந்தது. இப்போதும் நான் உலகத்தின் மூலை முடுக்குகளைச் சேர்ந்த விதவிதமான இசைப் பதிவுகளைச் சேகரித்துக் கேட்டு ரசிக்கிறேன்...''

ஐ.ஐ.டி.யில் பிரசன்னா படித்தது Naval Architecture. (கப்பல் கட்டும் தொழில் நுட்பம்). இப்போது வேலை செய்வது Software Engineer ஆக (கம்ப்யூட்டர் நிறுவனத்தில்). சீக்கிரமே போக இருப்பது அமெரிக்க பெர்க்லீ இசைக் கல்லூரிக்கு - ஜாஸ் இசை படிக்க....!

''இசை அடி மனசிலிருந்து அகலுவதேயில்லை. எந்தப் பாட்டைக் கேட்டாலும் அதை கிடாரில் எப்படி வாசிக்கலாம் என்று மனத் திரையில் கற்பனை செய்து பார்ப்பேன். எந்த இடத்தில் அழுத்தம் கொடுத்தால் என்ன ஒலி எழும் என்று தெரியுமல்லவா. அப்படியே மனசுக்குள் வாசிக்க வேண்டியதுதான். நேரம் கிடைக்கும்போது கிடாருடன் உட்கார்ந்து வாசித்துப் பார்த்து விடுவேன்....''

- மிக எளிமையாகச் சொல்கிறார்.

பிரசன்னா லைட் மியூசிக் மற்றும் ஜாஸ் நிகழ்ச்சிகளுக்கும் வாசிக்கிறார். அப்போதெல்லாம் கர்நாடக இசையைக் கலந்து புகுத்தும் பரிசோதனை முயற்சிகள் வெற்றி அளித்துள்ளன.

'ரிவர்ஸ்' பரிசோதனையைக் கர்நாடக சங்கீத மேடைகளில் செய்துவிட முடியாது என்பதிலும் மிகத் தெளிவான உறுதியுடன் இருக்கிறார்.

பிரசன்னா வெளியிட்ட மற்றொரு அதிசயமான உண்மை - வயலின் வித்வான் கன்யாகுமரி அற்புதமாகப் பாடுவார் என்பது. ஆமாம்! கன்யாகுமரிதான் இப்போது பிரசன்னாவின் குரு. அவர் பாட, பிரசன்னா வாசிக்க, நேரம் காலம் மறந்து வகுப்புகள் நீடிக்குமாம்!

- சீதா ரவி.

படங்கள் : கோபிநாத்.



புருஷ லட்சணம்

தாலி சென்டிமெண்ட், வேப்பிலைப் பாடல் என்று விரவிக்கிடந்தாலும் (கதை வாசுவுடையதாம்) விறுவிறுப்புக்குப் பஞ்சமில்லை.

மலையாள ஜெயராமுக்கு கொஞ்சம் சந்தோஷப்படுவதும், நிறைய சந்தேகப்படுவதுமான கேரக்டர். மனுஷன் என்னமாய் சுருபம் காட்டுகிறார்? குஷ்பு அவரைத் தூக்கித் தூக்கிக் காதலிக்க முயலும் போதெல்லாம், இஞ்சி தின்ற குரங்கு போல அவர் முகம் காட்டும் அஷ்ட கோணல் ஒன்று போதுமே!

குஷ்பு கொஞ்சம் நடிக்க முயன்றிருக்கிறார். முன்பாதியில் கலகலத்தாலும் பின்பாதியில் அனாவசிய மூக்கு சிந்தும் காட்சிகள் காரணமாகக் களையிழக்கிறார்... வில்லனுக்குப் புதுசாக ஒரு டெக்னிக் கிடைக்காதோ? ஓல்ட் இஸ் கோல்ட் என்று டைரக்டர் நினைத்திருப்பார் போலும் - ஸீன் போல்ட்!

மலையாள போட்டோகிராஃபராக ஓர் இடைச்செருகல் ரோலில் டைரக்டர். அனாயாச நடிப்பு. அவரது டைரக்ஷன் உத்திகளும் வெளிப்பாடுகளும் ஆரோக்கியமானதாகவே தெரிகின்றன.

ஓட்டை சென்டிமெண்டுகளை ஒதுக்கி விட முடியுமானால் சிவப்புக் கம்பள வரவேற்புத்தான்!



போலீஸ் லாக்கப்

விஜயசாந்திக்கு இரட்டை வேடம். ஒருவர் சி.பி.ஐ. 'வில் வில்' என்று கத்துகிறார். காலை ஆள் உயரத்திற்குத் தூக்கிச் சண்டை போடுகிறார்!

கதையெல்லாம் வேண்டுமா? அரசியல் அராஜகம், ஸ்லோமோஷன் வீரம், கொஞ்சம் சென்டிமெண்ட், சாஸ்திரத்திற்கு இரண்டு பாட்டு. வாகவமான எடிட்டிங். இது போதும். தாராளமாய் மூன்று மணி நேரம் இழுக்கலாம்.

கோணங்கி வில்லன். கேடித்தனமான அஸிஸ்டெண்ட். சோப்ளாங்கி அடியாட்கள். தகரக் குரலில் டயலாக்குகள். டப்பிங் படமென்பதை உரித்துக் காட்டுகிறார்கள்.

திணிக்கப்பட்ட சென்டிமெண்டுக்கு இரண்டாவது விஜயசாந்தி. பிள்ளைக்காக ஏங்கும் அப்பாவி. கடுப்படிக்கச் செய்கிறார்கள்.

பொறுமையோடு படம் பார்க்கிறவரைத் தான் பாராட்ட வேண்டும்!

சபாஷ் பாபு



மனநோயாளியான தாய். நிறைய சொத்து. அபகரிக்க ஒரு கும்பல். ஹீரோ சிலம்பரசன். அப்புறம் கதை தெரிந்ததுதானே?

வசனங்கள் எல்.கே.ஜி. என்றால் நடிப்பு pre. கே.ஜி.!

சிலம்பரசனுக்கு நிறைய லோலோ டயலாக்குகள். காமிரா பார்த்தே பேசுகிறான். காமிராமேனுக்கு ஜாலி. காமிராவை ஓட விட்டு விட்டு, சிங்கிள் டீ குடித்து வரலாம்.

செந்தில், வெ.ஆ. மூர்த்தி. காணாமல் போன இளவரசி. எல்லோரும் மொத்தமாய்க் காணாமல் போய் விட்டார்கள்.

வேப்பிலைப் பாட்டும் உண்டு. இறுதி ஃபைட், காடு, மலையெல்லாம் சுற்றி, அம்மன் கோயிலில் முடிகிறது. தன் வினை தன்னைச் சுடும். வில்லன் போடும் கத்தி அவனையே குத்தும்!

கூடவே நமது ரசனை உணர்வும் குளோஸ்!

சின்ன ஜமீன்

குடுகுடுப்பைக்காரன் சட்டை மாதிரி ஒட்டுப் போட்ட கதை. யுகம் யுகமாகச் சொல்லப்பட்டுவரும் அதே சொத்து அபகரித்தல், அப்பாவி ஹீரோ, ஹீரோயின்.

அப்பாவி என்றால் சப்பாணியாகத்தான் இருக்க வேண்டும் என்பது சினிமா விதி. லோ, கார்த்திக் உருவில் கமலஹாசன். வாயில் என்னத்தையோ அடக்கிக் கொண்டு பேசுவது போலான அவரது பாஷை ஒரு கட்டத்துக்குமேல் பல்லை நறநறக்க வைக்கிறது. மாறாக, சுகன்யாவின் சுத்தத் தமிழ். தன் பணியைச் செவ்வனே செய்கிறார். ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம்.

ஃபினாஷ்பேக்கில் ஒரு ஆட்டுக்காரி செத்துப் போவது, சும்மா 'ரீலை நகர்த்த' என்று நினைத்தால் அதற்குள்ளும் ஒரு கதை. 'அவள் அனாதை ஆட்டுக்காரி அல்ல; என் அக்காவாக்கும்' என்று சுகன்யா ஒரு நீள அழுகையின் முடிவில் சஸ்பென்ஸ் வைப்பது நல்ல தமாஷ்.

பாலாபிஷேகம் பண்ணிக் கொல்லும் வில்லனுக்கு ஜே! அவரது வக்கிர லீலைகள் எல்லாம், டைரக்டருக்கு வாக படங்களின் மேலுள்ள காதலைப் பறைசாற்றுபவை.

போகட்டும்; அத்தனை கொடூரமாகப் படம் நெடுகக் கார்த்திக்கை மாற்றி மாற்றி அடிக்கும் வில்லன்கள், அதே கார்த்திக் குருட்டு தைரியத்தில் வீட்டில் புகுந்து கலாட்டா பண்ணும் போது, பாத்து நடுங்குவது ஹிஹி சமாசாரம். அதுகூடத் தேவலை. க்ளைமாக்ஸில் சும்மா தேங்காய் சீவுவது போல அநேகரைச் சீவித் தள்ளிவிட்டு, (காட்டாவிட்டாலும்) ஜெயிலுக்குப் போய், ஏழே வருஷத்தில் திரும்பி வருகிறாராம். இ.பி.கோ. என்ன, இஷ்டம் போல மாறிக் கொள்ளுமோ?

ஏராள பாடல்களில் இரண்டு மட்டும் ஒட்டிக் கொள்கின்றன. வழக்கம் போல் காமெடிப் பஞ்சத்தில் கௌண்டமணியும் செந்திலும். திரைக்கதை மட்டும் கொஞ்சம் தளர்த்திருந்தால் ஊரில் உள்ள அத்தனை சனமும் தியேட்டரில் தான் இருக்கும்.

— ஆர்.பி.ஆர்., துளசி



பக்கவாத்யமாகும் புல்லாங்குழல்!

இந்த வருஷம் என்ன ஸ்பெஷல்?

ஜெ.வின் அறுபது அடி உயர கட்-அவுட். வழிநெடுக ஆளுயர போஸ்டர்கள். தோரணங்கள். அண்ணாமலை மன்ற சுற்றுவட்டாரத்தில் இதை எல்லாம் பார்த்தால் ஆச்சரியப்பட வேண்டாம். தமிழிசைச் சங்கத்தில் ஜெ. தலைமை. (வை.கோ.வைக் கூப்பிடாமல் விட்டார்களே என்று கோபாலபுரம் வட்டாரத்தில் ஒரு சின்ன மகிழ்ச்சியாம்.)

முதல்வர், போன வருடம் தமிழிசைச் சங்கப் பொன் விழாவுக்கே வந்திருக்க வேண்டியது.. கடைசியில் முடியாமல் போய் விட்டது. குறை இந்த வருடம் தீரும்?

ஷேக் சின்ன மௌலானா சாஹிபுக்கு இரட்டை யோகம். தமிழிசையில் 'இசைப் பேரறிஞர்' பட்டம். மைலாப்பூர் ஃபைன் ஆர்ட்ஸில் 'சங்கீத கலா நிபுண' விருது. இடது கைக்கு ஒன்று; வலது கைக்கு ஒன்று.

நாரதகான சபாவில், கே.வி.என்.னுக்கு, டி.கே.மூர்த்தியும், அவர் சீடன் ஜே. வைத்தியநாதனுமாக இரட்டை மிருதங்கம். (இடையேயாவது கே.வி.என். குரல் கேட்டால் சரி.) கங்கை அமரனின், 'சினிமாப் பாடலில் கர்நாடக இசை'க்குக் கூட்டம் வரலாம். வழக்கமான சேஷ்டைகள் இல்லாது போனால் மகிழ்ச்சி. அம்ஜத் அலிகான், மகன்கள் அமான், அயான் இருவருடனும் சேர்ந்து சரோட் வாசிக்கிறார். அம்ஜத் சுருதி சேர்க்கவே அரை நாள் ஆகி விடும். இப்போது மூன்று சரோடுகளுக்குச் சுருதி சேர்க்கணுமே என்று எண்ணினால் இப்போதே கவலையாயிருக்கிறது.

இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸ் தலைமை இந்த வருஷம் டி.என். கிருஷ்ணனுக்கு. மனுஷர் தலைமை உரையையாவது தாமே வாசிக்கட்டும். கூடவே மகள் விஜியும் மகன் ஸ்ரீராமும் சேர்ந்து கொண்டால்தான் வாசிப்பேன் என்று அடம்பிடிக்காமலிருந்தால் சரி! (சேவில் அந்தனை சபாவிலும் குடும்ப இசைதான்!)



இளையராஜா பாடுகிறார். இருங்கள். இவர் திருவாங்கூர் இளையராஜா அசுவினி திருநாள் ராமவர்மா. (வீணை பாலசந்தர் இருந்திருந்தால், வேறு யாரோ பிளேபேக் பாட, ராஜா கம்மா உதட்டை அசைக்கிறார்



● திட்டே கிருஷ்ண அய்யங்கார்



● சின்ன மௌலானா - இரட்டை யோகம்

என்று ஒருவேளை போராட்டம் தொடங்கியிருக்கலாம்!)

பாரத் கலாசாரில் கணவன் - மனைவி ஜுகல் பந்தி நிச்சயம் ஒரு விசேஷம்தான். திருச்சூர் ராமச்சந்திரனும் சாருமதி ராமச்சந்திரனும். (இது போதாது என்று கண்ணன் வீணையும், ஜனார்த்தனன் சிதாருமாக இன்னொரு ஜுகல் பந்தி!)

கார்த்திக் ஃபைன் ஆர்ட்ஸில், நெய்வேலி சந்தானகோபாலனுக்கு 'இசைப் பேரொளி' விருது. நெய்வேலி நிலக்கரி மட்டும்தான் பேரொளி வீசும்



* டி.என். கிருஷ்ணன் - குடும்ப இசை



* நெய்வேலி சந்தானகோபாலன் - பேரொளி வீசும்



* டி.வி.ஜி : நாதப் பிரம்மம்!



* சந்தியாவந்தனம் சீனிவாசராவ்

என்று நினைக்க வேண்டாம். இனி சந்தான கோபாலனும்.

இளைஞர்களை ஊக்குவிக்க வேணும் என்று எல்லாரும் வாய் ஓயாமல் பேசிக் கொண்டிருக்கிறார்கள். கிருஷ்ணகான சபா யக்ஞராமன் செயல்படுகிறார். உன்னிகிருஷ்ணன், சஞ்சய் சுப்ரமண்யம் எல்லோருக்கும் தைரியமாக ப்ரமோஷன் கொடுத்து விட்டார். நாலரை மணிக் கச்சேரி; பெரிய கைகள் எல்லாம் பக்கவாத்தியம்! இந்த சபாவில் ராஜா-ராதா ரெட்டிக்கு 'நிருத்ய சூடாமணி' விருது - சென்னா ரெட்டி தலைமையில்! பேச்சாளர்கள் பெயர்க் குழப்பம் செய்யாமல் இருக்கட்டும்!

நாரத கான சபாவில் டி.வி. கோபாலகிருஷ்ணனுக்கு 'நாத பிரம்மம்' பட்டம். சிஷ்யன் இசைஞானியாக இருக்கும் போது குரு நாதப் பிரம்மமாக இருப்பதில் தவறே இல்லை.

விசேஷமோ இல்லையோ, வித்தியாசமாக இருக்கும் : மைலாப்பூர் ஃபைன் ஆர்ட்ஸில் சாருமதி ராமச்சந்திரனுக்கு வயலினும், புல்லாங்குழலும் பக்கவாத்தியங்கள்! ('குழலினிது வயலினினிது என்பர் தம் மனைவி மழலைக் குரல் கேளாதவர்' என்று திருச்சூர் ராமச்சந்திரனார் புதுக்குறள் பாடலாம்!)

இதே லிஸ்ட்டில், கிருஷ்ண கான சபாவில் டி.வி.ஜி.யின் வெஸ்டர்ன் - கர்நாடிக் ஜாஸ் நிகழ்ச்சியையும், மதுரை ஜி.எஸ். மணியின் அந்தக் காலத்து சினிமாக்களில் கர்நாடக இசை நிகழ்ச்சியையும் சேர்த்துக் கொள்ளலாம்.

மற்றபடி எல்லா சபாக்களிலும், எல்லா வித்துவான்களும் வருஷா வருஷம் பாடுகிற மாதிரியே இந்த வருஷமும்... விராலிமலைக் குறவஞ்சி, கண்ணப்பர் குறவஞ்சி, குற்றாலக் குறவஞ்சி எல்லாம் உண்டு. (கி.பி. 3000ல் இசை விழா நடக்கும் போதும் இதே குறவஞ்சிகள் நடந்தாலும் ஆச்சரியப்பட வேண்டாம்!)


அகாடமியில் இந்த வருடம் மணி கிருஷ்ணசாமிக்கு 'சங்கீத கலாநிதி' பட்டம் தவிர, சந்தியாவந்தனம் சீனிவாசராவுக்கும், 91 வயதே ஆன இட்டே கிருஷ்ணய்யங்காருக்கும் சிறப்பு விருது கொடுக்கிறார்கள். இந்த சபாவில் திருப்புகழையும், திவ்யப் பிரபந்தத்தையும் முறையே வித்யா பவானி மூர்த்தியும், ராஜஸ்ரீ கௌதமும் நாட்டியமாக வழங்குகிறார்கள். மற்ற சபாக்களுக்குக் கட்டுப்படியாகாத பர்வீன் சுல்தானா, ஹரிபிரசாத் சௌராசியா கச்சேரிகளும் உண்டு - கூட்டத்தைப் பார்த்து நம்மூர் வித்துவான்கள் கண்படாமல் இருக்க வேண்டும்!

– நமது நிருபர்

பம்பாய்ப் பல்கலைக் கழக நூல் நிலையம் மிக மோசமான நிலையில் இருந்தது. "மான்யம் தர இயலாது. வருவாயை நீங்களே தேடிக் கொள்ள வேண்டியதுதான்" என்று கைவிரித்து விட்டது அரசாங்கம். துணைவேந்தர் கார்னிக் துணிந்து ஒரு படத் தயாரிப்பாளரிடம் தன் யோசனையைத் தெரிவித்தார். அதன்படி அனில் கபூரும், மீனாக்ஷியும் நூலகத்தில் பெரிய புத்தகக் குவியல்களுக்கிடையே ஒளிந்தும், உயரமான (புத்தக) அலமாரிகளின் மீது தாவி ஓடி, விளையாடியும் டூயட் பாடிய காதல் காட்சி படம் பிடிக்கப்பட்டது. புதுமையாகவும், அற்புதமாகவும் அமைந்து விட்டதாகப் பலர் பாராட்டினார்கள். ஆனால் சர்வகலா சாலையின் புனிதத்துவமே பாழாகிவிட்டதாகப் பல பேராசிரியர்கள் பொருமினார்கள். படாதிபதி மகிழ்ந்து, பேசியதை விட அதிகமாகவே வாடகையைக் கொடுத்தார். அதைக் கொண்டு உடைந்த மேஜை, நாற்காலிகள், ஜன்னல்கள், விளக்குகள் பழுதுபார்க்கப்பட்டு நூலகம் புது மெருகுடன் மாணவர்களைக் கவர்ந்து இழுக்கிறது. துணைவேந்தர் செய்தது சரியா என்ற சர்ச்சை தொடர்கிறது.

தகவல் :
அ. ஷண்முகசுந்தரம்.





ஹம்டி, டம்டி ஸேட் ஆன் எ வால்...
அமைச்சர் பதவி
ஹம்டி, டம்டி ஹேட் எ கிரேட் ஃபால்...
அ.தி.மு.க.
எஸ்.ஆர். ராஜா
தி.மு.க.
நாஞ்சிலார்
பண்ருட்டி
பா.ம.க.
டிசம்பர்-6 துக்க தினம்
டிசம்பர்-6 அயோத்தி மகோத்சவம்



கல்கி

1993
டிசம்பர் 19
மலர் : 52
இதழ் : 21
ஸ்ரீமுக
மார்கழி 4



தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா. - பாரதியார்.

தபால்துறை ஸ்டிரைக்கும்

அத்வானியின் ஹர்த்தாலும்

‘தபால்துறை ஊழியர் வேலை நிறுத்தத்தால் பிரமாதமான பாதிப்பு ஏதும் இல்லை; டி.வி. நிகழ்ச்சிகள் அறிவிக்கும் போட்டிகளுக்கு மலைமலையாகத் தபால் கார்டுகள் குவிவது வேணுமானால் பாதிக்கப்பட்டிருக்கலாம்; மற்றபடி முக்கியமான தபால் நிலையங்கள் இயக்குவிக்கப்படுகின்றன; தனியார் நடத்தும் கூரியர் சர்வீஸ்”ம் இருக்கவே இருக்கின்றன’ என்ற கணிப்பெல்லாம் முற்றிலும் தவறானவை. மக்களுக்கும், நிறுவனங்களுக்கும் ஏற்பட்டுள்ள இழப்பு மகத்தானது. நாட்டுக்கு ஏற்பட்டுள்ள நஷ்டம் அளவிட முடியாதது.

எளிய மக்கள் க்ஷேமலாபம் விசாரிக்க தபால் துறையையே நம்பியுள்ளனர். அதிகபட்சம் ஒரு ரூபாய் செலவில் தொலைதூரத்தில் உள்ள உற்றார் உறவினருடன் தொடர்பு கொண்டு, பிரிவாற்றாமையைத் தணித்துக் கொள்கின்றனர். இவர்களுக்குக் கடிதம் கிடைக்காமல் மனம் பதைக்கச் செய்வது கொடுமையாகும். வர்த்தக - தொழில் நிறுவனங்கள், டிராஃப்ட், செக், மெயில் டிரான்ஸ்ஃபர், எம்.ஓ. போன்றவற்றுக்குத் தபால் துறையையே நம்பியுள்ளன. இதில் சுணக்கம் ஏற்படும் போது, தொழில் நிறுவனங்கள் பெருநஷ்டம் அடைவது மட்டுமல்ல; தேசத்துக்கே பல கோடி ரூபாய் இழப்பு ஏற்படும். நமது நாட்டின் பொருளாதாரம் இதையெல்லாம் தாங்கிக் கொள்ளக் கூடிய நிலையிலா இருக்கிறது? ரிஜிஸ்தர் தபாலில் அனுப்பினால் கூட ஏழெட்டு ரூபாயில் முடியக்கூடிய விஷயத்துக்குக் கூரியர் தபாலில் நாற்பது ரூபாய் செலவழிக்க முடியுமா? ஓர் அவசரத்துக்குக் கூரியர் சர்வீஸைப் பயன்படுத்தலாமே தவிர அன்றாடம் அல்ல.

வேலை நிறுத்தம் என்று எண்ணிப் பார்க்கவே கூடாத துறைகளில் ஒன்று தபால்துறை. இப்படி நாம் கூறுவதால் தபால் ஊழியர்களுக்குக் குறைகளே இல்லை என்றோ அவர்களிடம் நமக்கு அனுதாபம் இல்லை என்றோ ஆகிவிடாது. அவர்களுடைய நியாயமான கோரிக்கைகள் கவனிக்கப்பட வேண்டும்தான்; ஆனால் தபால் துறை ஊழியர்களும் தங்களுக்கு உள்ள மகத்தான பொறுப்பை எண்ணிப் பார்க்க வேண்டும். அரசும் பிடிவாதத்தைத் தளர்த்தி, பேச்சு வார்த்தைகளுக்கு முயற்சி செய்ய வேண்டும். இந்த இதழ் நேயர்களின் கரங்களுக்கு வருமுன் வேலை நிறுத்தம் வாபஸாகி சகஜ நிலை திரும்பியிருக்கும் என்று நம்புகிறோம்; அதற்காகப் பிரார்த்திக்கவும் செய்கிறோம்.

நமது பொருளாதார, முன்னேற்றத்துக்கு மற்றொரு மகத்தான எதிரி ‘பந்த்’. அதிலும் அரசாங்கமே நடத்தும் கதவடைப்பு போன்ற அபத்தம் வேறு இல்லை. ஆனால் இதைத் தவறு என்று எடுத்துக்காட்ட வேண்டிய எதிர்க் கட்சிகளே தொட்டதற்கெல்லாம் ‘பந்த்’ நடத்தும் போது எப்படி வாய் திறக்க முடியும்? பந்த், மக்களின் மனோபாவத்தை மாசுபடுத்துகிறது; தேசப் பொருளாதாரத்தைச் சீர்குலையச் செய்கிறது; நாட்டையே குட்டிச்சுவராக்குகிறது. தற்போது பி.ஜே.பி. அறிவித்துள்ள ஹர்த்தாலும் இத்தகையதே.

பாபர் மசூதி தகர்க்கப்பட்டதைத் தொடர்ந்து ஸி.பி.ஐ. வழக்குப் பதிவு செய்துள்ளது. வழக்கை நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளவே, பி.ஜே.பி. தலைவர்கள் நீதிமன்றத்தில் ஆஜரானார்கள். ஜாமீனில் வெளிவர விருப்பமின்றி சிறைக்குச் செல்ல முடிவெடுத்தார்கள். இதை நாம் ஆட்சேபிக்க முடியாது. அது அவர்களின் உரிமை. கொள்கை ரீதியான முடிவு. சத்தியாக்கிரஹம் இதற்கு இடமளிக்கிறது. ஆனால் கூடவே ஹர்த்தாலை அறிவிப்பதும் தூண்டி விடுவதும் எப்படி தர்ம நியாயமாகும்? இது விதண்டாவாதமே. பி.ஜே.பி. தான் சமீபத்தில் அடைந்த தேர்தல் தோல்விகளால் கலங்கிப் போய் இப்படி நடந்து கொள்வதாகவே கருத வேண்டியிருக்கிறது. பி.ஜே.பி. கருத்துப்படி, ஸி.பி.ஐ. வழக்குப் போடுவதே அரசியல் சூழ்ச்சி என்றால், அரசியலை அரசியலால் முறியடிப்போம் என்றால் அதைத் தேர்தல் களத்தில் வெற்றி பெற்றல்லவோ நிரூபித்திருக்க வேண்டும்? அங்கே கோட்டை விட்டு விட்டு, ‘பந்த்’, ‘ஹர்த்தால்’ என்று தூண்டி விடும் போது, இவர்கள் நீதிமன்றத்தையும் மதிக்கவில்லை; அரசியல் தார்மிக நெறிகளையும் லட்சியம் செய்யவில்லை; தேசத்துக்கு ஏற்படக்கூடிய பெருநஷ்டத்தைப் பற்றியும் கவலைப்படவில்லை என்றாகிறது. மதிப்புக்குரிய பி.ஜே.பி. தலைவர்கள் சிந்திக்கட்டும்.



கம்ப்யூட்டரே, கம்ப்யூட்டரே, கர்நாடக இசை பாடு!

போகிற போக்கைப் பார்த்தால், பாடுவதற்கு வித்துவானே வேண்டாம் போலிருக்கிறது.

கம்ப்யூட்டரில் ஃப்ளாப்பியைச் செருகி விட்டு, ஸ்பீக்கரையும் பொருத்திவிட்டால், பாட்டு அதன் பாட்டுக்கு வந்து கொண்டே இருக்கும் போல!

''இது நான் கிட்டத்தட்ட ஒரு வருஷம் முயற்சி செய்து, புரோகிராம் பண்ணி, தயாரித்தது. கேட்டுப் பாருங்கள்!'' என்றார் எம். சுப்பிரமணியன். இவர் முன்னாள் போஸ்ட் மாஸ்டர். ஜெனரல். முறையாகக் கர்நாடக இசை பயின்ற வீணை வித்துவான்.

''இந்த 'பாக்கே'ஜில் ஐந்து மாட்யூல்கள் இருக்கின்றன. முதல் மாட்யூலில் கர்நாடக இசையின் அடிப்படையை மிக எளிமையாக, கம்ப்யூட்டர் திரையில் விவரித்திருக்கிறேன். இரண்டாவதில் ராகங்கள், கமகங்கள் (கமகம் என்றால் மிகவும் நுணுக்கமான ஏற்ற இறக்கங்கள்). வெளிநாட்டவருக்கும் புரிய வேண்டும் என்பதற்காக, பியானோ கீபோர்டு அடிப்படையில் இவற்றை வரைபடங்களுடன் விளக்கியிருக்கிறேன். வாசித்தே பார்க்கலாம். மூன்றாவதில், 72 மேளகர்த்தா ராகங்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறேன். ஆரோகணம், அவரோகணம் இரண்டையுமே கமகத்துடனும், கமகம் இல்லாமலும் செய்து காண்பித்திருக்கிறேன். நாலாவதில், தாளம். இதற்கும் திரையில் எத்தனை 'பீட்', எந்தத் தாளம் என்கிற குறிப்பையும், கீபோர்டில் வாசித்தால் தாள அமைப்பு கேட்கும்படியும் அமைத்திருக்கிறேன். கடைசியில், கிட்டத்தட்ட 80 ராகங்களைச் சுருக்கமாக, ஆரோகணம் - அவரோகண லட்சணங்களுடன் விவரித்திருக்கிறேன். சில ராகங்களுக்கு, சின்னதாக ஆலாபனை கூட அமைத்திருக்கிறேன்!''



நாமும் கேட்டுப் பார்த்தோம். முக வீணை, அல்லது கிளாரினெட் கேட்பது போலவே இருந்தது. கமகம் கூடுமானவரை சுத்தமாகவே இருந்தது.

கம்ப்யூட்டரில் எச்சரிக்கை ஒலியாக பீப் ஓசை வருமல்லவா? அந்த ஒலியைத் தரும் ஸ்பீக்கரையே இந்த இசை வெளிப்படுவதற்கும் உபயோகித்துக் கொண்டிருக்கிறார் சுப்பிரமணியன். (அவருடைய சௌகரியத்துக்காக, கம்ப்யூட்டரின் 'உள்ளே போய்' சாஃப்ட்வேரையே கொஞ்சம் ஆட்டிப்படைத்திருக்கிறார் மனிதர்!)

சமீபத்தில் அமெரிக்கா போயிருந்த போது, பாஸ்டனில், மகனுடைய ஆபீஸ் புல்லட்டின் போர்டில் ஏஷியன் மியூசிக் தலைப்பில், தமது கண்டு பிடிப்பைப் பற்றி ஒரு தகவல் ஒட்டி வைத்தார் சுப்பிரமணியன். சுமார் 60 பேர் உடனே ஃப்ளாப்பி கேட்டுக் கடிதமும், ஃபோனுமாக வேண்டுகோள்கள். செலவைப் பார்க்காமல், கூடுமானவரை அத்தனை பேருக்கும் ஃப்ளாப்பியைக் கொடுத்தார் சுப்பிரமணியன்.

பதில் கடிதங்கள் அத்தனையும் சில யோசனைகளும், பல பாராட்டுக்களுமாகவே வந்து குவிந்தன!

- சாருகேசி

புகைப்படம் : பாலாஜி.

"தொடரும் இனிய உறவுகள்..."



ஸ்ரீராம் சிட்ஸுக்கும் அதன் சந்தாதாரர்களுக்கும் இடையே உள்ள உறவு மூத்த தலைமுறையோடு நின்று விடுவதில்லை. அடுத்த தலைமுறையினருடனும் தொடர்ந்து அவர்களுக்கும் பயனளிப்பதாக நீடித்து வருகிறது. இதனை எடுத்துக்காட்டும் வகையில் ''தொடரும் இனிய உறவுகள்'' என்கிற தலைப்பில் கட்டுரைப் போட்டி ஒன்றை அறிவித்திருந்தோம். ஏராளமான சந்தாதாரர்கள் மிகுந்த ஆர்வத்தோடு போட்டியில் கலந்து கொண்டார்கள். வந்திருந்த கட்டுரைகளைப் பரிசீலித்து பரிசுக்குரியவற்றை நடுவர்கள் தேர்ந்தெடுத்துள்ளார்கள்.

1 முதல் பரிசு — வாஷிங்மெஷின் பெறுபவர்

திருமதி சுதா ஆத்மராஜ்
சென்னை 600 032.

2 இரண்டாவது பரிசுகள் — நேஷனல் நிப்போ ரைஸ் குக்கர் பெறுகிறவர்கள்

திருமதி.
ஏ. அறிவழகி
தஞ்சாவூர் 613 009.

திருமதி
பர்வதம் மகேஷ்
திருச்சி 620 003.

4 மூன்றாவது பரிசுகள் — ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் டின்னர் செட் பெறுகிறவர்கள்

திரு.
ஜி.கே. மூர்த்தி
திருச்சி 620 005.

திருமதி.
எஸ். மாலதி
முசிறி 621 211.

திருமதி.
அன்புச்செல்வி வசீகரன்
சென்னை 600 035.

திருமதி.
ஜோ. சரோஜா
சென்னை 600 004.

மற்றும் 100 பேருக்கு ஆறுதல் பரிசுகள், ஸ்ரீபெட் கிஃப்ட் பாக். பரிசுபெற்ற அனைவருக்கும் பரிசுகள் அனுப்பப்பட்டு விட்டன.

போட்டியில் பங்கேற்றவர்களுக்கும் பரிசு பெற்றவர்களுக்கும் ஸ்ரீராம் நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

SHRIRAM GROUP COMPANIES
MADRAS

ஸ்ரீராம் சிட்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ் பி. லிமிடெட்.

நிர்வாக அலுவலகம்: ''சுப்பிரமணியம் பில்டிங்'',
1, கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை - 600 002.
போன்: 8274451/8275536/8270400/8273932.

ADWAYE/SCH4649 TAM

ஆடல் கலைஞர்களும் ஆர்க்கெஸ்ட்ராவும்


“வீணை பாலசந்தர் ஒரு படத்தில் பியானோவை மட்டுமே பயன்படுத்தி இசையமைத்திருந்தார். அது துணிச்சலான எக்ஸ்பெரிமன்ட். இன்றைக்கு ஸிந்தஸைஸர், சினிமா இசை உலகை ஆக்கிரமித்துக் கொண்டு விட்டது. ஹார்மோனியம், பியானோ, புல்லாங்குழல், வயலின், தாள வாத்தியங்கள்னு சகல இசைக் கருவிகளின் ஒலியையும் அதுவே உண்டாக்கிடுது...'' என்கிறார் ஏ.ஏ.ராஜ். இவர் சினிமா இசைக் கலைஞர்கள் சங்கத்தில் முக்கிய பொறுப்பாளர்.

இதனால் இசைக் கருவிகளின் மதிப்பும் அவற்றை வாசிக்கும் கலைஞர்களின் மதிப்பும் டெபாஸிட் இழந்து விட்டனவோ...?

''அப்படிச் சொல்ல முடியாது. வோட்டு வித்தியாசம் குறைஞ்சாலும் இன்னமும் இசைக் கருவிகளும் கலைஞர்களும் ஜெயிச்சுக்கிட்டுத்தான் இருக்காங்க... என்ன இருந்தாலும், அசல் புல்லாங்குழலுடைய குழைவையும், வயலின் கலைஞர் 'போ' போடும் போது அதில் செலுத்துற ஜீவனையும் ஸிந்தஸைஸர்னால உண்டாக்க முடியுமா...? குறிப்பா வயலினை ஒதுக்கிட்டு எந்த இசையமைப்பாளரும் வேலை செய்ய முடியாது. ஆனால் இருபது வயலின்கள் உபயோகித்த இடத்தில் இன்றைக்கு அதில் கால்வாசி எண்ணிக்கையை உபயோகிக்கலாம்...

''படத் தயாரிப்பாளர்களும் 'பட்ஜெட் டைட்டு'ன்னு சொல்லி இசையமைப்பாளர்களை அட்ஜஸ்ட் பண்ணிக்கச் சொல்றாங்க. அதனால அவங்க ஸிந்தஸைஸரை மெயினா வச்சுக்கிட்டு மத்த வாத்தியங்களைக் குறைச்சுடறாங்க... மேலும், இப்ப டிராக் ரிகார்டிங் முறை வந்துட்டதால் ஒவ்வொரு இசைக் கருவியையும் தனியா வாசிக்க வைச்சு, மொத்தமா இணைச்சுக்கிற வசதி இருக்கு'' - என்கிறார் ராஜ்.

'ஐம்பது வாத்தியங்கள்ல ஏதோ ஒண்ணுகால் கட்டைட கருதி குறைவா இருக்கே' என்று மியூசிக் டைரக்டர் முகம் சுளிக்க மண்டையைப் பிய்த்துக் கொள்வதெல்லாம் பழங்கதையாகி விட்டது. நவீன ரெகார்டிங் வசதிகளால் நேரம் மிச்சமாக, கூடுதலான படங்களில் வேலை செய்ய முடிகிறது.







● வயலின்களை ஒதுக்க முடியாது...



● ....குரூப் டான்ஸ் இல்லாமல் சினிமாவா!

மற்ற எல்லாத் துறைகளையும் போல் இதிலும், விஞ்ஞான வளர்ச்சியால் பிளஸ் ஸும் மைனஸும் சமம்.

சினிமாவில் ஆர்கெஸ்ட்ராவுக்கு வேலை குறைந்து வரும் அதே நேரத்தில் நாட்டியக் கலைஞர்களுக்கு மவுசு கூடியிருக்கிறது. எப்பேர்ப்பட்ட படமாவாலும் துணைக்கு இருபது ஆண்களும் இருபது பெண்களும் இல்லாமல் கதாநாயகனும் நாயகியும் டான்ஸ் ஆடுவதில்லை. பக்தி காட்சியா, அதிலும் வேப்பிலை சகிதம் க்ரூப் டான்ஸ்; காமெடி டிராக்குக்குக் கூட கும்பல் கூத்துதான்!

இதற்கும் விஞ்ஞான வளர்ச்சிதான் ஒரு வகையில் காரணம்!

''இப்போது எடுக்கிற படங்கள் பெரும்பாலும் சினிமாஸ்கோப். பிரம்மாண்ட திரையின் ஒரு மூலையில் நாயகன் - நாயகி மட்டும் சல்லாபிப்பதைக் காட்டி 'கண்ணை நிறைக்க' முடியாதல்லவா... அதனால்தான் குழுக்களை ஆட விடுகிறார்கள்'' என்கிறார் நடனக் கலைஞர்கள் சங்க உதவித் தலைவர் பிரேம்குமார்.

ஜெமினி சந்திரலேகா காலத்திலேயே பிரபலமாகி விட்ட க்ரூப் டான்ஸ், இடையே 'உன்னைக் கண்டு நான் ஆட' பாணிக்கு வழிவிட்டு, இப்போது பெரிய அளவில் திரையுலகை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது. நடன நட்சத்திரங்களுக்கு ரசிகர் மன்றங்கள் உருவாகி வருகின்றன. பிரமிப்பை உண்டாக்க ஏற்படுத்தப்படும் இந்த 'மெகா' நடனக் காட்சிகளில் படத்துக்குப் படம் விரசம் அதிகரித்து வருவதும் உண்மை. இதனால் இக் கலைஞர்களைக் கிண்டலாக விமர்சிப்பதும் நடத்து வரும் நடைமுறையாகி விட்டது. ''ஆனால், உண்மை என்னவென்றால் எங்கள் சங்கத்தில் 'டிஸிப்ளின்' மிகவும் முக்கியம். அது இல்லாவிட்டால் சீட்டு கொடுத்து வெளியே அனுப்பிடுவாங்க'' என்கிறார் உறுப்பினர்களுள் ஒருவரான நிஷா.

- ஸ்ரீநிவாசன்

அடுத்த இதழ்...

கன்னியாகுமரி — நாகர்கோயில் நகரச் சிறப்பிதழ்!

- சின்ன கிராமம்; கோடிக் கணக்கில் வியாபாரம்!
  - மணக்கும் கட்டுரை!
- கன்னியாகுமரி அருகே ஒரு கனவுலகம்!
- அமைச்சர் லாரன்ஸ் பேட்டி

ஒரு தாளவாத்தியப் புயல்!

பெங்களூரின் சௌடய்யா மெமோரியல் ஹால் மேடை முழுக்கத் தாளவாத்தியங்கள். க்ஸைலபோனையும், வைப்ராபோனையும் கலந்து செய்த 'மரிம்பா' என்றொரு வாத்தியம். ஓரத்தில் ஒரு பியானோ. மாலை மயங்கியது போன்ற கொஞ்சூண்டு வெளிச்சம். ரசிகர் கூட்டம் நிரம்பி வழிகிறது.

மேடைக்கு வருகிறார் ஈவிலின் கிளென்னி. கோதுமை நிறத்தில் பளீரென்ற தோற்றம். சுருள் சுருளான கேசம் இரண்டு தோள்களிலும் வழிய, மரிம்பாவின் எதிரில் நின்று, மால்லெட் எனப்படும் சிறு குச்சிகளை இரண்டுகைகளின் விரல் இடுக்குகளிலும் செருகிக் கொண்டு வாசிக்க ஆரம்பிக்கிறார். என்ன வித்தை அந்த விரல்களில்! மரிம்பாவில் விளையாடும் அவரது விரல்களின் நர்த்தனமும் அந்த வேகமும் வியப்பின் உச்சிக்கேஅழைத்துச் சென்று விடுவதால், மொத்த அரங்கிலும் மூச்சுவிடும் சப்தம் கூடக் கேட்பதில்லை.





அடுத்த பாடலுக்கு அஷ்டாவ தானியாய்ச் சுழல்கிறார். மேடையில் உள்ள பல்வேறு தாள வாத்தியங் களையும் ஒன்றின் அதிர்வொலி குறைவதற்குள் இன்னொன்றை ஓடி ஓடிச் சென்று வாசிக்கிறார் ஒருவராகவே. மெல்ல ஆரம்பித்து, வேகம் பிடித்து, சண்டமாருதமாய் முழங்கிய பின் மெதுவாகக் குறைந்து குறைந்து, தியான நிலைக்கு வரும் ஓங்காரமாய் அலைபாய்ந்து மோனம் கொள்ளும் இசை....

சர்வதேச அளவில் இசைக்கான பல பரிசுகளைப் பெற்றிருக்கும் இவர், கிராம்மி அவார்டைப் பெற்றிருப் பதுடன், நம் 'இளையராஜா புகழ்' ராயல்பிலார்மோனிக் சொஸைடியிலும் வாசித்திருக்கிறார். கம்போஸ் செய்தும் தந்திருக்கிறார்.

பிரிட்டிஷ் ஹைகமிஷன் அழைப்பின் பேரில் வந்திருந்த ஈவிலின் பற்றி ஒரு முக்கியமான விஷயம் : ஒவ்வொரு கம்போஸிங்கையும் வாசித்து முடித்தவுடன் அவரைப் பாராட்டி உலக அரங்குகளில் அதிரும் கைத்தட்டலையோ அல்லது அவர் வாசிக்கும் இசையையோ அவர் கேட்ப தில்லையாம். காரணம், பதினோராம் வயதிலேயே தமது கேட்கும் சக்தியை இழந்துவிட்டவர் ஈவிலின் கிளென்னி!

- பெர்னாண்டஸ்.



இதுவொரு அறுசுவை அற்புதம்!
இனிய சமயற்கலையின்
இலக்கணம்!
SMB மைதா, ரவை மற்றும்
கோதுமை மாவுகள்
இல்லத்தரசிகளே! உங்கள் நளபாகக் கலையின் நவரசங்களையும் நளினமாக வெளிப்படுத்த SMB உதவுகிறது.
நவீன, சுகாதாரமான முறையில் தயாரிக்கப்படுகிறது.
என்றென்றும் நியாயமான விலை.
1 கிலோ மற்றும் 1/2 கிலோ பாக்கெட்டுகளில் புத்தம்புதிய அழகிய பாலிதீன் பைகளில் கிடைக்கிறது.
SMB-யை மறக்கமாட்டேன்! வேறு எதையும் வாங்கமாட்டேன்!!
SMB
தயாரிப்பாளர்கள்
சக்தி முருகன் ரோலர் ப்ளவர் மில்ஸ்
த.பெ.எண் 15, அவினாசி, கோவை மாவட்டம்
போன்: 2378, 2618

போட்டிக் கதை - 17



மயிலம்மாவின் சாப்பாட்டுக் கடையில் வியாபாரம் கறுகறுப்பாக நடந்து கொண்டிருந்தது. திருவல்லிக்கேணி நெடுஞ்சாலையிலிருந்து இருசப்பன் தெரு பிரியுமே... அந்த முனையில் ஒரு மாடு கட்டுமனையிற்கு உள்ள இடம், மயிலம்மாவின் ஆளுகைக்கு உட்பட்டது.

காலையில் இட்லியும் ஆப்பமும் போடுவாள். ஆப்பத்திற்குத்தான் அதிக கிராக்கி. அதுதான் முதலில் காலியாகும். மயிலம்மாள் ஆப்பம் சுடும் விதமே தனி அழகு.

மாவை எடுத்து அடுப்பிலிருக்கும் சட்டியில் ஊற்றி விட்டு, சட்டியின் இரண்டு காதுகளையும் துணியால் பிடித்து, மேலும் கீழும் ஏற்றி இறக்கினாற் போல் சுற்றி, ஊற்றிய மாவை அகலமாக்கி, அடுப்பில் வைத்து மூடினால் சில நிமிடங்களில், நடுவில் கணக்கில்லாத ஓட்டைகளுடன் மெத்து மெத்தென்று மேடாகவும் ஓரங்களில் காகிதம் போல் விடைத்துக் கொண்டும் ஆப்பம் தயாராகி விடும். ஆப்பத்தில் தேங்காய்ப் பாலை ஊற்றித் தர, ரிக்ஷாக்காரர்களும் கூலிக் காரர்களும் - வாடிக்கையாளர்கள் - தங்களை மறப்பார்கள்.

அவள் மத்தியானம் ஆரம்பித்து சாயங்காலம் வரை வறுக்கும் மீனின் வாசனை, அந்த வழியே நடந்து செல்லும் எல்லாத் தரப்பினரின் மூக்கிலும் நுழைந்து, அவர்களைக் கிரங்கச் செய்து, திரும்பிப் பார்க்க வைக்கும். திரும்பிப் பார்த்தால்... மயிலம்மாவின் தோற்றமும் அந்த அழுக்கான பாத்திரங்களும் ஏன் அந்த வாசனையை சுவாசித்தோம் என்று நினைக்க வைத்து விடும்.

சாப்பிட்டு விட்டு ஏப்பம் விட்டுக் கொண்டே, அலுமினியத் தட்டில் கையைக் கழுவினான் ரிக்ஷாக்கார முத்து. தாமரை இலையைக் குவித்து, தண்ணீரை அள்ளினால் இஷ்டத்துக்கு நெளியுமே அப்படியிருந்தது அந்தத் தட்டு. கை கழுவிய தண்ணீரை அலசி ஊற்றி விட்டு, தட்டில் இன்னும் ஒட்டியிருந்த குழம்பையும் சோற்றுப் பருக்கையையும் ஒரு துணியால் துடைத்து விட்டு, அடுத்தவனிடம் நீட்டினாள் மயிலம்மாள்.

மடித்துக் கட்டியிருந்த லுங்கியைத் தூக்கி, தொடையோடு ஒட்டியிருந்த கால் சட்டையிலிருந்து சில்லறைகளைத் தோண்டி மயிலம்மாவிடம் கொடுத்தான் முத்து.

எண்ணிப் பார்த்தவள், ''இன்னாயா... மூன்ரூபாதான் கீது. எவ்ட்டா சோறு வாங்குனியே மறந்துட்டியா...? ஏற்கெனவே ஒரு ரூபா பாக்கி. இன்னும் ரெண்டு ரூபா குடு'' என்றாள்.

''இப்ப இல்லை. நாளைக்கு வாங்கிக்க.'' சொல்லி விட்டு நகர்ந்தான்.

''கடன் சொல்றவனுக்கு அதிகாரத்தைப் பார்த்தியா...?'' மகளைப் பார்த்துச் சொன்னவள், ''அந்த, துன்றதுக்கு முன் வாடி சொல்றதானடா பொறம்போக்கு...'' வார்த்தைகளை அவன் முதுகில் எறிந்தாள்.

திரும்பியவன், ''ஏய்...! சொம்மா கத்தாதம்மே... அப்பாலைக்கு பேஜாரா பூடும்...'' மிரட்டலாய்ச் சொன்னான்.

''இன்னாடா பண்ணுவே...?'' எழுந்து அவனருகில் போனாள்.

''நீ துட்டு எப்புடி வாங்குறேன்னு நான் பாக்குறேன்!'' சொல்லி முடிக்குமுன், அவன் சட்டையைப் பிடித்து இழுத்து, கன்னத்தில் அறைந்தாள்.

அடிபட்ட அவன், அவளை எட்டி உதைக்க, அவள், அவன் காலைப் பிடித்துக் கடித்தாள். இதை எதிர்பார்க்காத அவள் மகளும் சாப்பிட்டுக் கொண்டிருந்த இரண்டு பேரும் ஓடி வந்து அவர்களை விலக்க, அதற்குள் அவர்களைச் சுற்றிக் கூட்டம் கூடி விட்டது.

அந்த வழியே சைக்கிளில் வந்து கொண்டிருந்த போலீஸ்காரர் ஏகாம்பரம் கூட்டத்தைப் பார்த்து விட்டு, சைக்கிளை விட்டு இறங்கி, ''ஏய்... என்ன அங்க கூட்டம்?''

மாரிவேல்



இன்று முதல் மனிதன்

என்று கேட்டுக் கொண்டே அருகில் வந்தார். காக்கிச் சட்டையைக் கண்டதும் கூட்டம் கல் பட்ட தேன் கூடாய்க் கலைய ஆரம்பித்தது.

போலீஸை அங்கு எதிர்பார்க்காத முத்து, அருகில் நின்றிருந்த ஒன்றிரண்டு பேரைத் தள்ளிக் கொண்டு ஓடிப் போனான். அதைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாத ஏகாம்பரம் ''ஏய்...! என்ன இங்க கலாட்டா...?'' என்று மயிலம்மாவைப் பார்த்துக் கேட்டார்.

''துன்னுட்டு துட்டு குடுக்காத ஓட்றான் சார்.'' முத்து ஓடிய பக்கம் கையை நீட்டிச் சொன்னாள்.

''நானும் கொஞ்ச நாளா கவனிச்சிட்டுத்தான் வர்றேன். சோத்துக் கடை நடத்துறேன்னு, கண்ட பொறுக்கிப் பசங்களையெல்லாம் சேர்த்து வச்சுக்கினு, நீ பேஜார் பண்றே. ஒன்னாலதான் இந்த ரோட்ல அடிக்கடி டிராபிக் ஜாம் ஆவுது. மரியாதையா எல்லாத்தையும் தூக்கிட்டுப் போயிடு. இல்லே...'' கையிலிருந்த லட்டியைத் தூக்கிக் காட்டி ''அவ்வோதான்'' என்றார்.

புதுப்பிரச்னை உருவாவதைப் புரிந்து கொண்ட மயிலம்மாள், ''சார்... இன்னா சார் இப்புடி சொல்லிட்டே! ஏதோ ஏலை பாலைங்க, இந்த வக்கத்தான் பொளப்பு நடத்திக்கினு கிறோம். தூக்கிக்கினு போன்னா நான் எங்க சார் போறது...?'' கெஞ்சலாய்க் கேட்டாள்.

''தோ பார், நீ எங்க போவியோ எனக்குத் தெரியாது. நாளைக்கு இங்க கடை இருந்தது... எல்லாத்தையும் ரோட்ல தூக்கிப் போட்டு ஒடச்சிருவேன்''. அதிகாரமாய்ச் சொன்ன ஏகாம்பரத்தின் கண்கள், அடுக்கி வைக்கப்பட்டிருந்த வறுத்த மீன் துண்டுகளின் மீது ஒட்டிக் கொண்டிருந்தன.

மயிலம்மாளுக்கு அந்த சிறுகுறிப்பு போதுமானதாக இருந்தது. டக்கென்று நான்கைந்து மீன் துண்டுகளை எடுத்து, மந்தார இலையில் வைத்துச் சுருட்டி, ஏகாம்பரத்தின் கைகளில் திணித்தவள், ''சரி, நாளைக்கு வா சார்'' என்றாள் 'வா'வில் அழுத்தம் இருந்தது.

உடனே அனிச்சையாய்த் தன்னைச் சுற்றிலும் பார்த்துக் கொண்ட ஏகாம்பரம், ''ம்... ம் சொன்னதெல்லாம் ஞாபகமிருக்கட்டும்'', என்று சொல்லி விட்டு, கையிலிருந்து பொட்டலத்தை, போலீஸ்காரர்கள் இதற்காகவே விசேஷமாக வைத்திருக்கும் 'சைடு பெட்டி'யில் போட்டுக் கொண்டு, சைக்கிளில் ஏறிப் போய் விட்டார்.

அன்று முதல் ஏகாம்பரம் வருவதும், மயிலம்மாள் தருவதும் வாடிக்கையாகிப் போனது.

திடீரென்று ஒரு வாரமாக ஏகாம்பரத்தைக் காணவில்லை. மயிலம்மாளுக்குக் கொஞ்சம் கவலையாகி விட்டது. ஒரு வாரம் கழித்து, திரும்பவும் வந்த ஏகாம்பரத்தைக் கண்ட மயிலம்மாள், ''வா சார்...! இன்னா சார் ஒரு வாரமா ஆளையே காணோம்...? மூஞ்சியெல்லாம் வாடியிருக்குதே, ஒடம்பு சரியில்லையா?'' என்று கேள்வி மாலை போட்டு வரவேற்றாள்.

''ஆமாம். திடீர்னு ஒரே வயித்து வலி. எதுவுமே சாப்பிட முடியலை. டாக்டர்

கிட்ட காட்னதுக்கு, வயித்துல புண்ணு இருக்குன்னு சொல்லி மருந்து கொடுத்தாரு. ஒரு வாரம் ரெஸ்ட் எடுத்துட்டு இன்னிக்குத் தான் டூட்டிக்கு வந்தேன்.''

''ஐயய்யோ...! வயித்துப் புண்ணா...? அதுக்குத் தேங்காப்பாலு நல்லது சார். நாளைலேந்து ஆப்பத்துல தேங்காப்பாலு நெறைய ஊத்தி டேசனுக்குக் குடுத்தனுப்பு றேன். காலைல காலைல சாப்புடு சார். ஒரு பத்து நாளைக்குச் சாப்புட்டா சரியாப் பூடும்...''

''அப்படியா...! சரி, குடுத்தனுப்பு...'' சொல்லி விட்டுப் போய் விட்டார்.

'இதுவரை வறுத்த மீன்தான் ஓசியில் குடுத்தோம். இப்போது தினம் ஆப்பமும் குடுக்க வேண்டியிருக்கிறதே' என்று நினைத்த போது, மயிலம்மாவுக்குக் கொஞ் சம் வருத்தமாகத்தானிருந்தது. என்றாலும் அதனால் கிடைக்கும் பலனை நினைத்த போது, இது பெரிய இழப்பாகத் தெரிய வில்லை. போலீஸ்காரருடன் நமக்கு நட்பு பலப்பட்டு விட்டது. இனி எந்தப் பிரச்னை வந்தாலும் ஏகாம்பரம் பார்த்துக் கொள்வார் என்று மயிலம்மாள் நம்பினாள்.

ஒரு நாள் மதியம் இரண்டு மணி இருக்கும். மயிலம்மாவின் கடை இருந்த அந்த ரோடு பெரும் பரபரப்பாகி விட்டது. போக்குவரத்தை மாற்றி விட்டுக் கொண் டிருந்தார்கள். ரோட்டின் இரண்டு ஓரங்களி லும் பெருக்கி, சுண்ணாம்பெல்லாம் போட் டிருந்தார்கள்.

பத்தடிக்கு ஒரு போலீஸ்காரர் வீதம் நிறுத்தப்பட்டிருந்தனர். அவர்கள், ரோட் டில் நிறுத்தப்பட்டிருந்த சைக்கிள், ரிக்ஷா, ஆட்டோக்களை அப்புறப்படுத்திக் கொண் டிருந்தனர். இரண்டு பேர் சேர்ந்து நின்றால் கூட 'கூட்டம் போடாதிங்க' என்று விரட்டிக் கொண்டிருந்தனர்.

மயிலம்மாவின் கடைக்கு மூன்றடி தள்ளி, ஏகாம்பரம் டூட்டியில் நின்று கொண் டிருந்தார். அவரருகே எந்தவொரு வாக னமோ மனிதக் கூட்டமோ இல்லாமல் ரோடு தெளிவாக இருந்தது. அந்த அளவுக் குக் கடமையை 'ஒழுங்காக'ச் செய்திருந் தார். ஆனால் மயிலம்மாவை மட்டும் அவர் கண்டுகொள்ளவில்லை.

மயிலம்மாள் இது எதையும் கவனிக் காமல் வியாபாரத்தில் மும்முரமாக ஈடு பட்டிருந்தாள். சுற்றி உட்கார்ந்து சாப்பிட் டுக் கொண்டிருந்தவர்கள், பேசிக் கொண்ட திலிருந்து, ஏதோ கட்டடத் திறப்பு விழா வுக்கு, மந்திரிகள் வருகிறார்கள் என்பது மட்டும் தெரிந்திருந்தது. அதைப் பற்றி அவள் கவலைப்படவில்லை. ஏகாம்பரம் தன் கடைக்காகக் காவல் நிற்பதாய்ப் பட்டது அவளுக்கு.

நிமிடத்திற்கு நிமிடம் பரபரப்பு அதிக மாகிக் கொண்டே போனது. ஜல்லிக்கட்டு ஆரம்பிப்பதற்கு முன் இருக்குமே... அப்படி ஒரு அமைதியான பரபரப்பு.

அந்த நேரம், படு சுறுசுறுப்பாய் ஒரு போலீஸ் ஜீப் வந்து நின்றது. அதிலிருந்து ஜீப்பை விட சுறுசுறுப்பாய் போலீஸ் அதி காரி ஒருவர் இறங்கி, பந்தோபஸ்து ஏற் பாடுகள் எப்படி இருக்கின்றன என்று சுற்றி லும் நோட்டம் விட்டவர், மயிலம்மாவை யும் அவளைச் சுற்றியிருந்த கூட்டத்தையும் பார்த்து விட்டார். அவ்வளவுதான். முகம் 'ஜிவ்வென்று' சிவந்தது.

ஏகாம்பரத்தைப் பார்த்துக் கத்தினார். ''யோவ்... யார்யா அங்க நிக்கிறது? பின் னால என்னய்யா கூட்டம்? எல்லாத்தையும் அடிச்சு வெரட்டு. சாமானையெல்லாம் சந்துல தூக்கி எறி.''

ஏகாம்பரம் மிரண்டு போனார். சில வினாடிகள் உடலில் இரத்த ஓட்டம் நின்று போனது. அதற்குள் ஏகாம்பரத்திற்கு இரண்டு பக்கமும் நின்றிருந்த போலீஸார், மயிலம்மாவை நோக்கி ஓடி வர, இதற்கு மேலும் தான் நின்று கொண்டிருப்பது நல்ல தல்ல என்று உறைக்க, ஏகாம்பரமும் மயிலம்மாவை நோக்கி ஓடினார்.

போலீஸார் ஓடி வருவதைப் பார்த்து, சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்கள் எழுந்து ஓட, மயிலம்மாள், ஏகாம்பரம் தன் அருகில் வந்து ஒப்புக்கு ஏதோ திட்டப் போகிறார் என்று நினைத்தாள்.

ஆனால் அருகில் வந்த ஏகாம்பரம், கைக்குக் கிடைத்த சட்டி, பாத்திரங்களை அள்ளி பக்கத்துச் சந்தில் எறிந்தார். குழம்பும் வறுத்த மீனும் தரையில் சிதறின. அதற்குள் பின்னால் ஓடி வந்த இன்னொரு போலீஸ்காரர், சோறு இருந்த பெரிய குண்டானையும் அடுப்பையும் தூக்கி எறிந் தார். மண் அடுப்பு உடைந்து, சோறும் நெருப்பும் கலந்தன.

வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு அழுத மயிலம்மாவைப் பிடித்து,

''பாகவதர்வாள், என்ன கோயில்லே தேங்கா மூடிக் கச் சேரியா?''

''ஹ்ம்... எங்கே தேங்கா மூடி... பக்க வாத்தியத்துக்கெல்லாம் கொடுத் தது போக மிஞ்சியது தேங்கா பத்தை தான்!''

- சாரதி.



பக்கத்துச் சந்தில் தள்ளினார்கள். சற்று நேரம் கழித்து, மந்திரிகள் கார்கள் புடைசூழ விழா வுக்கு வந்தார்கள்.

நான்கு நாட்களாக, மயிலம்மாவின் முகத்தில் விழிக்கும் தைரியமில்லாமல், வீட்டிற்குக் கூட சுற்றிக் கொண்டு, வேறு வழியாகப் போய் வந்து கொண்டிருந்த ஏகாம்பரத்திற்கு, இன்று மயிலம்மாவைப் பார்த்து தன் இயலாமையைச் சொல்லி, ஆறுதலாய் நாலு வார்த்தை சொல்ல வேண் டும் என்று காலையிலிருந்தே மனது அடித் துக் கொண்டது.

ஏகாம்பரம் போன போது, வழக்கம் போல் வியாபாரம் நடந்து கொண்டிருந்தது. அடுப்பு மட்டும் புதிதாக இருந்தது. வேறு எந்த மாற்றமும் இல்லை. ஏகாம்பரத்தைக் கண்டதும், ''வா சார்...! என்னா சார் நாலு நாளா ஆளையே காணோம்; திரும்ப ஒடம்பு சரியில்லையா...?'' குரலில் வழக்க மான உற்சாகம் தப்பியிருந்தது.

''ஒடம்பெல்லாம் நல்லாத்தான் இருக்கு. மனசுதான் சரியில்லை. அன் னைக்கி நான் வேணுமின்னு செய்யலை மயிலம்மா. பெரிய அதிகாரி சொன்னதை என்னால தட்ட முடியலை. ஊட்ல கையை ஒடச்சிட்டமேன்னு மனசுக்கு ரொம்ப கஷ்டமாப் போச்சு... மன்னிச்சிரு மயி லம்மா.''

துள்ளி எழுந்தாள் மயிலம்மா. ''என்னா சார் நீ, பெரிய வார்த்தையெல்லாம் பேசுறே! அந்த நெலமைல யாராயிருந்தா லும் அப்படித்தான் செய்திருப்பாங்க; எனக் குத் தெரியாதா...? அட, அத்தவுடு சார். கெலங்கா இப்பதான் வறுத்தேன், எடுத்திட் டுப் போ'' என்று வறுத்த மீனை இலையில் சுற்றி நீட்டினாள்.

''வேணாம் மயிலம்மா, இனிமேல் நான் இதை வாங்க மாட்டேன்.''

மயிலம்மா ஆச்சரியமாகப் பார்த்தாள்.

''நீ குடுக்கற இந்த மீனு, ஒரு வகைல லஞ்சம்தான். போலீஸ்காரங்களாலயோ மத்தவங்களாலயோ உனக்கும் உன் வியா பாரத்துக்கும் எந்த பாதிப்பு வந்தாலும் நான் முன்ன நின்னு காப்பாத்துவேங்குற நம் பிக்கைலதான் இதை நீ எனக்குக் குடுக்கறே.

''எப்ப உனக்குப் பிரச்னை வந்து, என் னால காப்பாத்த முடியாம போயிடுச்சோ... அப்பவே, நீ குடுத்ததுக்கெல்லாம் அர்த்த மில்லாமல் போயிடுச்சி. இதுக்கு மேலயும் நான் வாங்கினா, நான் மனுஷனா இருக்குற தகுதியை இழந்துடுவேன்.''

''என்னான்னமோ பேசுறே... எனக்கு ஒண்ணுமே புரியலை சார். மொதல்ல இந்த புடி...'' பொட்டலத்தை நீட்டினாள்.

''இதுக்கு மேலயும் நான் இதை வாங்கித் தின்னா, என் மனசாட்சி என்னைக் குடைய ஆரம்பிச்சிடும்.

''போலீஸ்காரங்களுக்கு டிரெயினிங் பீரியடுல குடுக்கற கடுமையான பயிற்சி யெல்லாம் எதுக்குத் தெரியுமா...? அவங் களுக்கு எதுக்கும் கலங்காத மன உறுதியும் சபலத்துக்கு ஆட்படாத மனசும் வரணுங் கறதுக்காகத்தான். ஆனா அதைத் தப்பாப் புரிஞ்சுக்கிற போலீஸ்காரங்க பல பேர், மன சாட்சியையே கழட்டி வச்சிர்றாங்க. நானும் இவ்வளவு நாளா அப்படித்தான் இருந் தேன். ஆனா இப்ப நான் மனச்சாட்சி உள்ள மனுஷனா மாறிட்டேன்.

''இனிமேல் நான் உன்னிடம் எதையும் எதிர்பார்க்க மாட்டேன். அதே நேரம், நீயும் என்னிடம், சட்டத்திற்குப் புறம்பான எந்த உதவியையும் எதிர்பார்க்காதே...'' என்று சொல்லி விட்டு சைக்கிளில் ஏறி மிதித்தார்.

ஏகாம்பரம் பேசியது பாதிக்கு மேல் மயிலம்மாவுக்குப் புரியவில்லை. என்றா லும் ஏதோவொரு நல்ல மாற்றம் நிகழத் துவங்கியிருக்கிறது என்பது மட்டும் தெளி வாகப் புரிந்தது.



ஐஃபில் டவரில்

பொழிந்த

பரிசு மழை!

பாரீஸில் அமைந் துள்ள ஐஃபில் டவருக் குச் சமீபத்தில் விஜயம் செய்த ஜாக்குலின் மார்டினெக்ல் என்ற பெண் அதிர்ஷ்டசாலி. அவருக்கு ஐஃபில் டவர் நிர்வாகிகள் பரிசு மழை பொழிந்தனர். அவற் றுள் 17000 டாலர் மதிப்புள்ள காரும் அடக்கம். காரணம் என்ன? அந்த டவருக்கு வந்த 15 கோடியாவது பார்வையாளர் அவர்!

– எல். ஆலன்.

திருமண வயது!

'பெண்ணுக்கு
ஏற்ற
திருமண வயது
இருபத்து ஒன்று'
என்று முதுகில்
முத்திரையுடனிருந்த
ஆட்டோக்களைப்
பார்த்துப்
பெருமூச்சுவிட்டாள்
ஒரு முப்பத்து மூன்று
வயதேயான கன்னி!

– வி.சி. கிருஷ்ண ரத்தினம்.



இசைக் கலை இன்றளவும் நலிவடையாமல் இருப்பதற்கும், அதன் பழம்பெருமை மங்காமல் பாதுகாக்கப்பட்டு வருவதற்கும் அடிப்படைக் காரணம் அரசியல்வாதிகள்தான். எனவே இந்த சங்கீத சீசனில் அவர்களை நன்றியோடு நினைத்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

பின்னே என்ன சார்... அரசியல்வாதிகள் நினைத்திருந்தால், இசைக்கென்று தனி இலாகாவை ஏற்படுத்தி, இசை அமைச்சர் என்று ஒரு பதவியையும் உருவாக்கியிருக்கலாம். இசைத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்கிறவருக்கு இசையைப் பற்றித் தெரிந்திருக்க வேண்டிய அவசியம் ஏதும் இல்லை. அரிசியையும் கோதுமையையும் அடையாளம் காட்டத் தெரிந்தால்தான் உணவு அமைச்சர் பதவி; ஏழாம் வகுப்புக்குப் பிறகு எந்த வகுப்பு என்று சொன்னால்தான் கல்வி அமைச்சர் பதவி என்று கூட நிபந்தனை விதிக்கப்படாத போது வீணைக்கும் வயலினுக்கும் வித்தியாசம் தெரியாதவர்தானே இசை அமைச்சர் ஆவார்? வெறும் ஜால்ராக்களை மட்டுமே முழு இசை அறிவு ஆகி விடுமா? இதை நாம் உணர வேண்டும்.

குன்னக்குடியின் குழப்பம்

இசை அமைச்சர் என்று ஒருவர் புரட்சித் தலைவி மீது ஆணையாகப் பதவியேற்ற பிறகு, என்ன செய்வார்? முதல்வரின் ஆசி கைவிட்டுப் போய் விடாதபடி இசையில் பல சீர்திருத்தங்களைச் செய்வார்.

உதாரணமாக, கல்யாணி J, காம்போதி JJ, J தோடி, JJ பைரவி


கல்யாணி J



என்று ராகங்களின் பெயர்களில் சீர்திருத்தம் செய்வார்.

சத்யா

ராகத்தின் பெயருக்கு முன்னால் J போட்டால் என்ன அர்த்தம், பின்னால் J போட்டால் என்ன அர்த்தம் என்று தெரியாமல் இசைக் கலைஞர்கள் தவிக்க மாட்டார்களா? தங்கள் குழப்பம் தீர விளக்கமளிக்கக்கூடிய ஒரே நபரான குன்னக்குடி வைத்திய நாதனை அவர்கள் அணுக, அவர் தாம் இயற்றிய ஜெயலலிதா ராகத்துக்கு முன்னால் J வர வேண்டுமா பின்னால் J போட வேண்டுமா என்ற குழப்பத்தில் இருக்க... சங்கீத உலகமே ஸ்தம்பித்துப் போகுமே!



இந்த நிலை இன்னும் ஏற்படாமலிருப்பதற்காக நாம் அரசியல்வாதிகளுக்கு நன்றி சொல்லத்தானே வேண்டும்?

மியூஸிக் அகாடமி பர்கூருக்கு மாற்றம்!

மியூஸிக் அகாடமிக்கும், தமிழிசைச் சங்கத்துக்கும் ரசிகர்கள் பெருவாரியாக வருகிறார்கள் என்பதை அறிந்தபின், முதல்வர் எப்படி சும்மா இருப்பார்? உடனடியாக அவற்றை பர்கூருக்கு மாற்ற முயற்சி செய்ய மாட்டாரா? அவருடைய தொகுதிக்கு அவர் இதைக் கூட செய்யாவிட்டால் எப்படி? அன்பு கூர்ந்து நினைத்துப் பாருங்கள்.

மியூஸிக் அகாடமியை பர்கூருக்கு மாற்ற முதல்வர் முயற்சி செய்தால், அதைத் தடுக்க வேண்டிய கடமை கருணாநிதிக்கு ஏற்பட்டு விடும். கருணாநிதியின் தலைமையில் மியூஸிக் அகாடமியைக் காப்பாற்ற, கழகத் தொண்டர்கள் பொங்கியெழுந்தால், அதை ஏதோ கழகச் சொத்து என்று கருதி, கோபாலசாமியின் ஆதரவாளர்களும் மியூஸிக் அகாடமியை முற்றுகையிடுவார்கள். வேறு வழியின்றி ஜெயலலிதா அகாடமியைப் பூட்டி சீல் வைத்து விடுவாரே - இதையெல்லாம் தாங்கிக் கொள்ளும் தெம்போ திராணியோ இசை ரசிகர்களுக்கு உண்டா?

இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறாமல் இசைக் கலை வளர்ந்து

காம்போதி JJ!



வருவதற்கு அரசியல்வாதிகளின் பெருந்தன்மைதானே காரணம்? தயவுசெய்து பாராட்டுங்கள்.

தமிழில் தியாகராஜ கீர்த்தனை!

திருவையாற்றில் தியாகராஜர் ஆராதனை அமைச்சரின் பொறுப்பில் நடைபெற்றால் என்னவாகும் என்பதையாவது நாம் யோசித்திருக்கிறோமா? முதல்வருக்கு வசதிப்பட்ட நாளில்தானே ஆராதனையை நடத்த முடியும்! தவிர, புரட்சித் தலைவி ஆராதனைக்காக, திருவையாற்றில் அ.இ.அ.தி.மு.க.வினர் லட்சக்கணக்கில் குவிந்தால், இசைப் பிரியர்களின் கதி என்னவாகும்? இன்னொரு மகாமகம்தான்!

அதோடு போகுமா...?

'தியாகராஜர் கீர்த்தனைகள் எல்லாம் தெலுங்கிலேயே ஏன் இருக்கின்றன? இதை இனியும் தமிழகம் சகித்துக் கொள்ளாது. இங்கே இருக்கும் தெலுங்கர்களின் வாழ்க்கையோடு விளையாடாதீர்கள்! தியாகராஜர் கீர்த்தனைகளை இனி தமிழில்தான் பாட வேண்டும்' என்று கூறி தி.மு.க. அதற்காக ஓர் இயக்கமும் ஆரம்பிக்குமானால் என்ன செய்வது? எனவே புரட்சித் தலைவி, அவர்களை முந்திக் கொண்டு, அரசு ஆதரவுடன் 'பந்த்' நடத்தி, 'இந்த நியாயமான கோரிக்கையை மத்திய அரசு ஏற்காவிட்டால் தமிழக மக்கள் இந்திய ஒருமைப்பாட்டில் நம்பிக்கை இழந்து விடுவார்கள்' என்று அறிக்கை விடுவார்!

லைசென்ஸ் எங்கே?

பாடத் தெரிந்தவர்களெல்லாம் பாடலாம் என்று விட்டு விட்டால் அரசுக்கு எப்படி வருவாய் கிடைக்கும்? லைசென்ஸ் வாங்கிக் கொண்டுதான் பாட வேண்டும் என்று சட்டம் வந்தால், குறைந்தபட்சம் ஒரு எம்.எல்.ஏ.வின் சிபாரிசு கூட இல்லாமல், வித்வான்கள் லைசென்ஸ் வாங்கி விட முடியுமா?

பாகவதர் பாடிக் கொண்டிருக்கும் போது அரங்கினுள் அரசு அதிகாரிகளும் காவல் துறையினரும் நுழைந்து, 'லைசென்ஸ் எங்கே?' என்று கேட்க, 'ஐயா! இது தேங்காய் மூடி கச்சேரிதான்' என்று பாகவதர் பரிதாபமாய்க் கெஞ்ச; 'அப்போ அந்த மூடியிலே பாதியைக் குடு' என்று அதிகாரிகள் மிரட்ட.... அப்பப்பா... கச்சேரியில் உட்கார்ந்து குறட்டை விடும், அரட்டை அடிக்கும் ரசிகப் பெருமக்களுக்கு அது எவ்வளவு தொல்லையாய் இருக்கும்!

இதையெல்லாம் அறிவுபூர்வமாகச் சிந்தித்துப் பார்க்கும் யாரும், இசை அமைச்சர் என்று ஒரு பதவியை உருவாக்காமல் இருப்பதற்காகவும், தொடர்ந்து இசைக் கலையில் கவனம் செலுத்தாமல் இருப்பதற்காகவும், அரசியல்வாதிகளைப் பாராட்டத் தயங்க மாட்டார்கள். வாழ்க சங்கீதத்திற்கு அரசியல்வாதிகள் செய்யும் தொண்டு!



தியாக பூமி

25. அக்னயே ஸ்வாஹா

சாவித்திரி புக்ககம் போன பிறகு, நடுவில் ஒரு பனிக்காலம் வந்து போய் விட்டது. மறுபடியும் மாரிக் காலம் சென்று இன்னொரு பனிக் காலம் வந்தது.

கடந்த நாலு வருஷத்தில், சோழ நாட்டிலுள்ள எல்லாக் கிராமங்களையும் போல் நெடுங்கரையும் பெரிதும் க்ஷீண மடைந்திருந்தது. நெல் விலை மளமள வென்று குறைந்து போகவே, ஊரில் அநேகம் பேர், 'இனிமேல் கிராமத்தில் உட்கார்ந்திருந்தால் சரிப்படாது' என்று பிழைப்புத் தேடிப் பட்டணங்களுக்குப் புறப்பட்டார்கள்.

இங்கிலீஷ் படித்து விட்டுச் சும்மா இருந்த வாலிபர்கள் உத்தியோகம் தேடுவதற்காகப் போனார்கள். இங்கிலீஷ் படிக்காதவர்கள், ஏதாவது வெற்றிலை பாக்குக் கடையாவது வைக்கலாம், இல்லாவிட்டால் காப்பி ஹோட்டலிலாவது வேலை பார்க்கலாம் என்று எண்ணிச் சென்றார்கள்.

இப்படிப் போகாமல் ஊரிலேயே இருந்தவர்களின் வீடுகளில் தரித்திரம் தாண்டவமாடத் தொடங்கிற்று.

இந்த மாறுதல் சம்பு சாஸ்திரியின் வீட்டிலேதான் மிகவும் ஸ்பஷ்டமாகத் தெரிந்தது. எப்போதும் நெல் நிறைந்திருக்கும் களஞ்சியத்திலும் குதிர்களிலும், இப்போது அடியில் கிடந்த நெல்லைச் சுரண்டி எடுக்க வேண்டியிருந்தது.

மாட்டுக் கொட்டகை நிறைய மாடுகள் கட்டியிருந்த இடத்தில், இப்போது ஒரு கிழ எருமையும், ஒரு நோஞ்சல் பசுவும் மட்டும் காணப்பட்டன.


தென்னை மரம் உயரம் பிரம்மாண்டமான வைக்கோல் போர் போட்டிருந்த இடத்தில் இப்போது ஓர் ஆள் உயரத்திற்கு நாலு திரை வைக்கோல் கிடந்தது.

நெல் சேர் கட்டுவதற்காக அமைந்திருந்த செங்கல் தளங்களில் இப்போது புல் முளைத்திருந்தது.

ஆனால், குறைவு ஒன்றுமில்லாமல் நிறைந்திருந்த இடம் ஒன்று நெடுங்கரையில் அப்போதும் இல்லாமற் போகவில்லை. அந்த இடம் சம்பு சாஸ்திரியின் உள்ளந்தான். தமது வாழ்க்கையில் ஏற்பட்ட மாறுதலைக் குறித்து சாஸ்திரி சிறிதும் சிந்திக்கவில்லை. முன்னை விட இப்போது அவருடைய உள்ளத்தில் அதிக அமைதி குடிகொண்டிருந்தது. பகவத் பக்தியில் முன்னை விட அதிகமாக அவர் மனம் ஈடுபட்டது.

குழந்தை சாவித்திரியைப் பற்றி இடையிடையே நினைவு வரும் போது மட்டும் அவருடைய உள்ளம் சிறிது கலங்கும். ஆனால் உடனே, "குழந்தை புருஷன் வீட்டில் சௌக்கியமாயிருக்கிறாள். நாம் ஏன் கவலைப்படுகிறோம்?" என்று மனத்தைத் தேற்றிக் கொள்வார்.

சாவித்திரி கல்கத்தாவுக்குப் போய் ஐந்தாறு மாதம் வரையில் அடிக்கடி அவளிடமிருந்து கடிதம் வந்து கொண்டிருந்தது. அப்புறம், இரண்டு மாதத்துக்கொரு தரம் வந்தது. இப்போது சில மாதமாய்க் கடிதமே கிடையாது. அதனால் என்ன? கடிதம் வராத வரையில் க்ஷேமமாயிருக்கிறாள் என்று தானே நினைக்க வேண்டும்? மேலும், இனிமேல் சாவித்திரிக்கும் நமக்கும் என்ன சம்பந்தம்? அவளுக்கு நாம் என்ன செய்யப் போகிறோம்? நமக்குத்தான் அவளால் என்ன ஆக வேண்டும்? "இனி உனக்கு



மாதா, பிதா, தெய்வம் எல்லாம் புருஷன் தான்'' என்று நாம்தானே உபதேசம் செய்து அனுப்பினோம்? எப்படியாவது குழந்தை சந்தோஷமாயிருந்தால் சரி. கடிதம் போடாமல் போனால் என்ன? - இப்படி எண்ணியிருந்தார் சம்பு சாஸ்திரி.

அன்று தை வெள்ளிக்கிழமை. சாஸ்திரி அம்பிகையின் பூஜைக்குப் புஷ்பம் சேகரித்து வைத்து விட்டு ஸ்நானம் செய்யக் குளத்துக்குப் போயிருந்தார்.

வாசலில் ''தபால்'' என்ற சப்தம் கேட்டது. சமையலுள்ளில் கை வேலையாயிருந்த சொர்ணம்மாள், ''மங்களம்! மங்களம்! சுருக்கப் போய்த் தபாலை வாங்கிண்டு வா!'' என்றாள்.

மங்களம் போய்த் தபாலை வாங்கிக் கொண்டு வந்தாள். வரும் போது வாசற் கதவைத் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டு வந்தாள்.

சொர்ணம்மாள், மங்களம், வைத்தி மூன்று பேரும் அடுப்பைச் சுற்றி உட்கார்ந்தார்கள். ''வைத்தி! கடுதாசை வாங்கி வாசி!'' என்றாள் சொர்ணம்மாள்.

மங்களம், ''அடே! சப்தம் போடாமே மெதுவாய் வாசி. உனக்குத்தான் காது செவிடு. எங்களுக்குக் காது கேக்கறது!'' என்றாள்.

வைத்தி, ''சாவித்திரிதான் போட்டிருக்கா! வேறே யார் போடப் போறா?'' என்றான்.

''இப்படி வரிந்து வரிந்து கடுதாசி எழுதறதுக்கு இந்தப் பொண்ணுக்குக் கை வைத்தான் வலிக்காதா?'' என்றாள் சொர்ணம்மாள்.

வைத்தி வாசிக்கத் தொடங்கினான்:

''மகா-ஸ்ரீ அப்பா அவர்களுக்கு, சாவித்திரி அநேக நமஸ்காரம்.

தாங்கள் என்னைக் கைவிட்டு விட்டீர்களா? நான் போட்ட ஒரு கடிதத்திற்காவது பதில் இல்லையே? இங்கு நான் படுகிற கஷ்டம் சகிக்க முடியவில்லை. வளை காப்பு, சீமந்தம் எல்லாம் பண்ணிச் சீர் செய்யவில்லையென்று மாமியார் ரொம்பவும் கோபித்துக் கொள்கிறாள். பிரசவத்திற்கு ஊருக்குப் போ போ என்று சொல்லிக் கொண்டேயிருக்கிறாள். தாங்கள் வந்து என்னை உடனே அழைத்துக் கொண்டு போகாவிட்டால் என் பாடு அதோகதிதான். உங்களுக்குத் துன்பமாகவும் பூமிக்குப் பாரமாகவும் நான் ஏன் பிறந்தேன்?

அப்பா! எனக்கும் நெடுங்கரைக்கு வந்து உங்களையெல்லாம் பார்க்க வேண்டுமென்று ரொம்பவும் ஆசையாயிருக்கிறது.

அமரர் கல்கி



"பக்கத்துப் போர்ஷன்ல வசிக்கிறார். தன் மனைக்குள்ளே குன்னக்குடி வைத்தியநாதன்கிற நினைப்பு!"

"அடிக்கடி வயலின் வாசிச்சுத் தொல்லை தர்றாரா?"


"அது இல்லிங்க. நெற்றியிலே அவ்வளவு பெரிசா குங்குமப் பொட்டு வச்சிருக்கிறார்!"

- இரா. சுவாமிநாதன்

"ஏன் சார், பைரவி ராகத்தை ரொம்ப தாழ்வா கீழ் ஸ்தாயியிலேயே பாடிண்டிருக்கார்?"

"ஒருகால் பாதாள பைரவியா இருக்குமோ!"

- திருவையாறு மணி



சித்தி கையினால் ஒரு வேளையாவது சாப்பிட்டால் என் உடம்பு சொஸ்தமாகும். இந்தக் கடிதத்தைத் தந்தியாகப் பாவித்துத் தாங்கள் புறப்பட்டு வந்து என்னை அழைத்துப் போக வேண்டியது. இல்லாவிட்டால் என்னை நீங்கள் மறுபடியும் உயிரோடு பார்ப்பது நிச்சயம் இல்லை.

இப்படிக்கு,
தங்கள் அன்புள்ள புத்திரி
சாவித்திரி."

"எழுதுகிற வக்கணையைப் பார்த்த யோல்லியோ?" என்றாள் மங்களம்.

"அதுக்குத்தாண்டி அம்மா பொம்மனாட்டிகளுக்குப் படிப்பு உதவாதுன்னு சொல்றது?" என்றாள் சொர்ணம்மாள். பிறகு, வைத்தியைப் பார்த்து, "இன்னொரு தடவை வாசிடா!" என்றாள்.

வைத்தி மறுபடி வாசிக்கத் தொடங்கி, "சித்தி கையால் ஒரு வேளையாவது சாப்பிட்டால், என் உடம்பு சொஸ்தமாகும்..." என்று படித்ததும், சொர்ணம்மாள் அவன் கையிலிருந்து கடிதத்தைப் பிடுங்கிக் கொண்டாள்.

"ஆமாண்டி, அம்மா! சித்தி உனக்குப் பொங்கிக் கொட்டத்தான் காத்திண்டிருக்கா!" என்று சொல்லிக் கொண்டே கடிதத்தைக் கிழித்து நெருப்பில் போட்டாள்.

வைத்தி, "எம்மா! சாவித்திரி பிள்ளையாண்டிருக்கிறது அத்திம்பேருக்குத் தெரியாதோன்னோ? வந்த கடுதாசையெல்லாம் நீதான் கிழிக்கக் கிழிக்க எறிஞ்சுடறயே?" என்றான்.

"சீச்சீ! வாயைப் பொத்திக்கோடா, இரையாதேடா!" என்றாள் சொர்ணம்மாள். பிறகு, "என்னமோ, நினைக்கண்டா, எனக்கு வயத்தைப் பத்திண்டுதான் எரியறது. என் பொண் வயத்திலே ஒரு பிள்ளைக் குழந்தைன்னு பிறந்திருந்தா, இப்படி யெல்லாம் ஆயிருக்குமா?" என்று பிரலாபிக்கத் தொடங்கினாள்.

இந்தப் பேச்சப் பிடிக்காத மங்களம், "அது இருக்கட்டண்டி, அம்மா! நீ பாட்டுக்கு இந்த மாதிரி பண்ணிண்டிருக்கயே? அவாளுக்குத் தெரிஞ்சு போயிட்டா என்ன பண்றது?" என்றாள்.

"ஆகா! வேணும்னாப் பொண்ணைப் பிரசவத்துக்கு அழைச்சண்டு வந்து பத்தியம் வடிக்கக் கொட்டேன். நானா வேண்டாங்கறேன்! பணந்தான் இங்கே கிடந்து இறையறது..."

"அதுக்குச் சொல்லலேடி, அம்மா!..."

"பின்னே, எதுக்குச் சொல்றே? அடி போடி பைத்தியமே! பணச் செலவைப் பார்க்காமே, அழைச்சண்டுதான் வந்து, ராப்பகலா உழைக்கக் கொட்டறேன்னு வச்சுக்கோ - அந்தப் பொண்ணுக்கு ஏதாவது தலையைக் கிலையை வலிச்சா, ஊரிலே நாலு பேர் என்னடி சொல்வா? நீ வேணும்னு ஏதோ செய்துட்டேன்னு தானேடி சொல்வா?"

"நான் ஒண்ணு கேட்டா, நீ ஒண்ணு சொல்றயே, அம்மா! அவாள் ஆத்திலே இருக்கிற போது கடுதாசி, கிடுதாசி வந்துட்டா என்ன பண்றதுன்னுட்டுன்னா கேக்கறேன்? இல்லை, கடுதாசிக்குப் பதில் வல்லையேன்னு ஒரு தந்தி அடிக்க வச்சான்னு வச்சுக்கோ, அப்போ என்ன செய்யறது?"

"அதுக்கெல்லாம் 'நான் யோசனை பண்ணி வச்சிருக்கேன்; நீ பேசாமே இரு!" என்றாள் மங்களத்தின் தாயார்.

வழக்கம் போல் அன்று சாஸ்திரி பூஜை செய்து முடியும் சமயத்தில், மங்களமும் அவள் தாயாரும் வந்து நமஸ்காரம் செய்து விட்டு, தீர்த்தம் வாங்கிக் கொண்டார்கள். "மங்களம்! இன்று தை வெள்ளிக்'



"டீ. வி. நிலைய இயக்குனர் அவர்களுக்கு! வரும் முப்பதாம் தேதி நான் பாடப் போவதை, தயவு செய்து முன்னோட்ட நிகழ்ச்சியில் காட்டி முன்னதாக அறிவிப்புக் கொடுத்துவிட வேண்டாமென்று கேட்டுக் கொள்ளு கிறேன்."
- மூர்த்தி பாகவதர்

- ஆர். பி. எஸ்.

"இந்தாங்க ஸார்! என்னைப் பிடிக்க லேன்னா, 'நீநாசமாப்போக'ன்னு வேணும்னா திட்டுங்க... பொறுத்துக்கறேன். 'குரோம் பேட்டை ராதாநகர்லே சைக்கிள் ரிக்ஷாவிலே போக'ன்னு திட்டறீங்களே! உங்களுக்கே நல்லாருக்கா! அந்தக் குண்டு குழி ரோடுகளை யாரால தாங்கிக்க முடியும்?"

- ராஜா



கிழமையாச்சே! நைவேத்யத்துக்கு ஏன் வடை பாயஸம் பண்ணலை? வெறும் அன்னம் மட்டும் வச்சுட்டே?'' என்றார் சாஸ்திரி.

மங்களம் பதில் சொல்வதற்குள், சொர்ணம்மாள், ''அவள் என்ன பண்ணு வாள்? நானும் பேசப்படாது பேசப்படா துன்னு பாத்துண்டிருக்கேன். வடை பாய ஸம் பண்றதுன்னா இலேசாவா இருக்கு? வெல்லம் வேண்டாமா? பயத்தம் பருப்பு வேண்டாமா? இதெல்லாம் வாங்கற துக்குப் பணத்துக்கு எங்கே போறது? மாதம் பிறந்ததும் ரூபாயை எண்ணிக் கொடுக்க றாப்பலே பேசியாயிடறது! இன்னும் கொஞ்ச நாள் போனால் இந்த வெறும் அன்னத்துக்கே ஆபத்து வந்துடும் போல் இருக்கு! ஆனாலும் இப்படி மூக்கைப் புடிச்சுண்டு மணியை ஆட்டிண்டு இருந் தாக்கே, காலட்சேபம் எப்படி நடக்கும்?'' என்று மூச்சு விடாமல் பேசினாள்.

''நீங்க என்னத்துக்கு அதுக்காகக் கவ லைப்படறேள்? இத்தனை நாளும் காப் பாத்தின ராமன் இன்னமும் காப்பாத்து வன்'' என்றார் சாஸ்திரி.

''ஆமாமாம்; 'ராமா ராமான்'னு சொல்லிச் சொல்லித்தான் இந்தக் குடித் தனம் இப்படிப் பாழாப் போச்சு. இப்ப வாவது நான் சொல்றதைக் கேளுங்கோ. சென்னப் பட்டணத்திலே எவ்வளவோ பேர் பாட்டுச் சொல்லிக் கொடுத்துப் பணம் சம்பாதிக்கிறாளாம். நீங்களும் போய் ஏதா வது சம்பாதிக்கிற வழியைப் பாருங்கோ!''

சாஸ்திரிக்குத் தம் மாமியாரிடம் விசு வாசமோ மரியாதையோ அதிகம் கிடை யாது. மங்களத்தின் தாயார் என்பதற்காகத் தான் அவள் வீட்டில் இருப்பதைச் சகித்துக் கொண்டிருந்தார். ஆனால், இப்போது அவள் சொன்ன வார்த்தை அம்பிகையின் வாக்கு என்றே அவருக்குத் தோன்றிற்று.

ஏற்கெனவே, அவருடைய மனம் அமைதி இழந்திருந்தது. எங்கேயாவது யாத்திரை போக வேண்டுமென்று எண்ணியிருந்தார். இப்போது, சொர்ணம்மாள் இப்படிச் சொன் னதும், அவருடைய மனத்திலும் அதே விருப்பம் இருந்தபடியால், ''அதற்கென்ன? அப்படியே செய்துட்டாப் போச்சு! ஆனால், மங்களம் இங்கே தனியாயிருக்கணுமேன்னு தான் யோசிக்கிறேன்'' என்றார்.


அதற்குச் சொர்ணம்மாள், ''மங்களத் தைப் பத்தி நீங்க ஒண்ணும் கவலைப்பட வேண்டாம். நான் அவளை என்னோடே ஊருக்கு அழைச்சுண்டு போறேன். கொஞ்ச நாளைக்காவது அவள் கஷ்டப்படாமே எங்களோடே இருக்கட்டும்'' என்றாள்.

''மங்களத்தை நீங்க பாத்துக்கறதா யிருந்தா எனக்கென்ன கவலை? ஜாக்கிரதை யாய் அழைச்சுண்டு போய் வச்சுக்குங்கோ! நான் நாளைக்கே கிளம்பறேன்'' என்றார் சாஸ்திரி.

''பட்டணத்திலே நாலு பெரிய மனுஷாள் வீட்டிலே பாட்டுச் சொல்லிக் கொடுக்கறதுன்னு ஏற்பட்டு, குடித்தனம் போடலாம்னு தோணினாக் கடுதாசி போடுங்கோ; புறப்பட்டு வந்து சேர றோம்.''

''அதுக்கென்ன, அப்படியே செய் றேன்'' என்றார் சாஸ்திரி. ஆனால், அவர் மனத்தில் மட்டும் சொரேல் என்றது. 'காசிக் குப் போயும் பாவம் தொலையவில்லை என்பார்களே, அந்த மாதிரி பட்டணத்துக் குப் போன அப்புறமும் இவர்களுடன் வாழ வேண்டுமா' என்று எண்ணிப் பெருமூச்சு விட்டார். 'நம் செயலில் என்ன இருக்கிறது? பகவானுடைய சித்தப்படி நடக்கட்டும்' என்று மனத்தைத் திடப்படுத்திக் கொண் டார்.

(தொடரும்)



இந்த வருட 'சங்கீத கலாநிதி' மணி கிருஷ்ணசாமியைப் பாராட்டச் சென்ற போது, ஒரு சின்ன ரசிகர் பட்டாளமே அவரைச் சூழ்ந்து கொண்டிருந்தது. அவரிடம் இசை பயிலும் அகிலா கிருஷ்ணமூர்த்தியும், ஸ்ரீப்ரியாவும் நெருக்கியடித்துக் கொண்டு (அவர் மடி மீது உட்காராத குறையாக) அமர்ந்திருந்தனர். பின்னால் பாபநாசம் அசோக் ரமணி. சிறிது நேரத்தில் வயலின் இரட்டையர்களான பம்பாய் ரஞ்சனியும், காயத்ரியும் வந்து சேர்ந்தார்கள்!

வெள்ளி மணி 'ஓசை'க்கு இடையே, கலகல சிரிப்பு. தாம் சங்கீதம் பயின்ற காலத்து 'மலரும் நினைவு'களை அத்தனை சுவாரசியமாகச் சொல்லிக் கொண்டிருந்தார் மணி.

மணி : நான் கலாக்ஷேத்திராவில் படித்த போது டைகர் வரதாச்சாரியார் அங்கே இருந்தார். அவர் வீட்டிலிருந்து கிளம்பி வருகிற போது, அவருக்குக் குடை பிடிப்பார் எம். டி. ராமநாதன். குடையின் வளைவில் ஒரு பை தொங்கும். அதில்தான் டைகரின் வெற்றிலை பாக்கு சமாசாரங்கள் எல்லாம் இருக்கும். எம்.டி. ராமநாதன் மெதுவாகக் கைகளால் தாளம் போட்டபடி பின்னால் வந்து கொண்டிருப்பார். முன்னால், காற்றில் ஏதோ ஒரு தாளம் போட்டபடி டைகர் போய்க் கொண்டிருப்பார். இத்தனைக்கும் எம்.டி.ஆர். அவருக்குக் குடைபிடித்துக் கொண்டு வருகிறார் என்று பெயர்தான். வெற்றிலை பாக்குப் பை, பெண்டுலம் மாதிரி ஊஞ்சலாடும். ஊரில் இருக்கிற அத்தனை வெயிலும் டைகரின் தலையில்தான்! அந்தக் காட்சியை இப்போது நினைத்தாலும் கூட எனக்குச் சிரிப்பு வரும்!

அகிலா : எம்.டி.ஆரிடம் யாரும் சொல்ல மாட்டார்களா?



கலாநிதியுடன் ஒரு கலகல சந்திப்பு



* மணி




* அசோக் ரமணி

மணி : சொன்னால் கூட, இதோ போறேன்... போய்க்கிண்டே இருக்கேன் என்பார்! ஆனால் பின்னால் எங்கோ இருப்பார்! இரண்டு பேரும் தனித்தனியே இசை உலகில் சஞ்சாரம் பண்ணிக் கொண்டிருப்பார்கள். வெயில், மழை எதுவும் தெரியாது.

அகிலா : முசிரிகிட்டே நீங்க கத்துக் கிட்டிருக்கீங்க இல்லையா?

மணி : முசிரி சார்னு சொல்ற போது ஒரு சம்பவம் ஞாபகத்துக்கு வரது. ஒரு தடவை



அவர்கிட்ட ஒருத்தர் வந்து, தன் பெண் நன்றாகப் பாடுவாள்; அவர் கேட்டு விட்டு அபிப்ராயம் சொல்லணும் என்றார். முசிரிக்கு நேரமே இல்லை. இருந்தாலும் அவர் மனசை நோக அடிக்க விரும்பாமல் பெண்ணைப் பாடச் சொன்னார். பாவம், ரொம்பக் கஷ்டப்பட்டுக் கேட்டார். பெண்ணின் அப்பா, 'பாட்டு எப்படி?' என்று கேட்டார். முசிரிக்குத் தர்மசங்கடம். இருந்தாலும் சொன்னார் : சுருதி முன்னே பின்னே இருந்தாலும், தாளம் அப்படி இப்படி இருந்தாலும், பாட்டு...

(எல்லோரும் சிரிக்கிறார்கள்)

மணி : அதுதான் முசிரியின் பாணி!

ரஞ்சனி : எங்கள் குரு டி.எஸ். கிருஷ்ணசாமி அய்யர். பம்பாயில் நாங்கள் அவரிடம் தான் வயலின் கற்றுக் கொண்டோம். ஒரு நாள் நாங்கள் எல்லாரும் வகுப்பில் இருந்தப்போ, ஆரபி வாசிக்கச் சொன்னார் ஒரு பெண்ணிடம். அவள் வாசித்தாள். ஆரபியில் 'கா'வும் 'நி'யும் கொஞ்சம் பட்டும் படாமலும் இருக்கணும் இல்லையா? அவள் அதை எல்லாம் கவனிக்காமல் கம்மா வாசித்துத் தள்ளினாள். எங்க வாத்தியார் உடனே, 'என்னம்மா நீ? பேபிங் கெஸ்ட்டா இருக்க வேண்டியவர்களை ஒனரா ஆக்கிப்பிட்டியேம்மா'ன்னார். நாங்கள் எல்லாம் ஒரேயடியா சிரிச்சுட்டோம்!

ஸ்ரீப்ரியா: நல்ல குரு கிடைக்கிறதுக்கும் கொடுத்து வச்சிருக்கணும். நான் மணி அம்மாவிடம் வந்து படிக்கிறதுக்காகவே நெய்வேலியில இருந்து இங்கே வந்தேன்!

அசோக் : *(அகிலா, ஸ்ரீப்ரியாவிடம்)* உங்கள் குரு எப்படி?

ஸ்ரீப்ரியா : மணி அம்மாதானே? அய்யோ, பாட்டு கிளாஸ் எல்லாம் சீரியஸ் தான். நேரா நிமிர்ந்து உட்காரணும். குனியக் கூடாது. பாயைக் கூட காலால் தள்ளக் கூடாது. அஷ்டகோணலாய் நெளியக் கூடாது. கையில் பேனா வைத்துக் கொள்ளக் கூடாது... ஒரே கெடுபிடி.

அகிலா : டைகர் ரொம்பக் கோபக் காரரோ?

மணி : ஐயோ, கோபமே வராது அவருக்கு. எங்களால் பாட முடியாதபடி ரொம்ப நெர்வஸ் ஆகி, டென்ஷனா இருப்போம், சில சமயம். 'நெல்லூர் குத்தற பொண்ணே, உன் புருஷன் வரான் பின்னே'ன்னு பாடி எங்களைச் சிரிக்க வச்சு ரிலாக்ஸ் பண்ணிடுவார்! பாடவே வராமல் சில சமயம் அழுகையா வரும். அப்போ எல்லாம், இது என்ன உங்க மாமியார் வீடா? நான் என்ன பண்ணிட்

* அகிலா



* ஸ்ரீப்ரியா





டேன் இப்போ? இங்க என்ன மனுஷத்தனம் இல்லாத மச்சினன் இருக்கானா? கோழி சொல்ற நாத்தனார் இருக்காளா?'ன்னு கேட்டு, சிரிக்க வச்சுடுவார்.

அசோக் : எங்க குரு ஒரு சம்பவம் சொன்னார் : ஒரு பாடகர், வேண்டுமென்றே தாளம் போடறதே தெரியாம மேல் துண்டுல கையை மறைச்சு வச்சுத் தாளம் போட்டுண்டு, மிருதங்க வித்துவான் கிட்டே வாசிக்கச் சொன்னாராம். மிருதங்க வித்துவான் சளைக்காம, தன்னோட மேல் துண்டால மிருதங்கத்தையே மூடி, வாசிக்கற மாதிரி பாவனை பண்ணினாராம்! 'என்னய்யா, மிருதங்கம் வாசியும்!'னாராம் பாடகர். 'நீங்க கண்ணுக்குத் தெரியாத தாளம் போட்டது போல நான் காதுக்குக் கேட்காம 'வாசிச்சிண்டுதான் இருக்கேன்'ன்னாராம் மிருதங்க வித்துவான்!

மணி : மைசூர் வாசுதேவாச்சார் அவர்களை அரியக்குடி அடிக்கடி பார்க்க வருவார். வந்தால், 'ஐயங்கார்வாள், நமஸ்காரம்!'னு இவர் குனிந்து எழுந்திருப்பார். அரியக்குடி, 'ஆசார்யாள், நமஸ்காரம்'னு குனிவார். அவர் நமஸ்காரம் பண்றாரேன்னு இவர்; இவர் நமஸ்காரம் பண்றாரேன்னு அவர் - இப்படி மாத்தி மாத்திப் பண்ணைப் பண்ண, பார்க்க வேடிக்கையா இருக்கும்!

ரஞ்சனி : நாங்க வரட்டுமா? மழை வரும் போல இருக்கு...

காயத்ரி : மழைன்னதும் ஞாபகம் வரது: ஒருநாள் வாத்தியார் அமிர்தவர்ஷிணி ராகம் அடுத்த கிளாசில் வாசிக்கலாம்னார். மறு நாள் கிளாசுக்கு வர போது நல்ல மழை. நனைஞ்சுண்டே வந்தோம். 'அமிர்தவர்ஷிணி சொல்லித் தரேன்னு சொல்ற போதே இப்படி மழையிலே நனைஞ்சுண்டு வந்திருக்கேளே. வாசிச்சா, திரும்பிப் போக போட்தான் வச்சுக்கணும் போல இருக்கு'ன்னார்!

(எல்லாரும் சிரித்தபடி விடைபெறுகிறார்கள்)


- நம்பி


அட்டை வண்ணப்படம், படங்கள் :
கோபிநாத்

"முதல் பையனுக்கு சேஷன்னு பேர் வெச்சீங்க சரி, ரெண்டாவது பையனுக்கு ஏன் 'ரேஷன்'னு பேர் வைச்சீங்க..."

"பொறக்கும் போது எடை குறைவா இருந்தான்."

- ராதா வாசுதேவன்.





"பாடறவர் இன்னும் ராகமாலிகை பாடலையே?"

"அவர் பாட, ஒவ்வொரு ராகமுமே ராகமாலிகையாத் தானே இருக்கு!"

- ஆர்.பி.எஸ்.



கச்சேரிக்கு வாவா; கடவுளுக்கு டாடா!

கெடுபிடி சபா காரிய தரிசிகளிடம் கச்சேரி சான்ஸ் கேட்டுக் காத்துக் கிடக்கும் வித்வான்களை நமக்குத் தெரியும். 'கச்சேரி செய்யப் பாடகர்கள், பாடகிகள் தேவை' என்று விளம்பரம் செய்யும் அமைப்பு இருக்கிறது என்று சொன்னால் நம்புவீர்களா...?

நம்புங்கள்; அது நிஜம் - ஆனால் இரண்டு நிபந்தனைகளை விதிக்கிறது இவ்வமைப்பு!

ஒன்று : முழுக் கச்சேரியையும் தமிழில் தான் பாட வேண்டும்.

இரண்டு : தெய்வ வழிபாட்டுப் பாடல்களைப் பாடக் கூடாது.

இரண்டாவது நிபந்தனைக்குப் புருவங்கள் உயர்வது புரிகிறது. அமைப்பின் பெயரைக் கேட்டால் ஆச்சரியம் அடங்கிவிடும் :

தந்தை பெரியார் தமிழ் இசை மன்றம்!

''ஒன்றிரண்டு பாடல்கள் கடவுளைப் பற்றிப் பாடிவிட்டால் நாங்கள் அந்தப் பாடகர்களைத் துரத்திவிடப் போவதில்லை... ஆனால் இயற்கை, பெண்கள் நிலை, சமுதாய அமைப்பு போன்றவற்றைப் பற்றிய தமிழ்ப் பாடல்கள் ஒரு முழு கச்சேரி செய்யக் கூடிய அளவுக்கு இருக்கின்றன...'' என்கிறார் மன்றத்தின் அமைப்பாளரான அருணாசலம். இவர், சென்னை நகரின் பல பகுதிகளில் 'ஸ்டூடென்ட்ஸ் ஜெராக்ஸ்' நகலகத்தை நடத்தி வருபவர்.

''தமிழிசை தொன்மையானது. ஐவகை நிலப்பண்கள் தொடங்கி, தேவாரப் பண்கள் காலம் வரை அதன் மேன்மை எட்டுத் திக்குகளிலும் அறியப்பட்டது. இடைக் காலத்தில் இந்தப் பெருமைகளெல்லாம் மங்கிவிட்டதால் தமிழிசை வல்லுனர்கள் கவனிக்கப்படாமலே போனார்கள். முத்துத் தாண்டவர், மாரிமுத்தாப் பிள்ளை, அருணாசல கவிராயர் போன்றோரது தொண்டு வெளிச்சத்துக்கே வரவில்லை. இதையெல்லாம் கருத்தில் கொண்டுதான் நாங்கள் இந்த அமைப்பை ஆரம்பித்தோம்....'' என்கிறார் அருணாசலம்.

''உங்கள் நிபந்தனைகளுக்கெல்லாம் உட்பட்டு கச்சேரி செய்யக் கலைஞர்கள் விண்ணப்பிக்கிறார்களா...?'' என்று அருணாசலத்திடம் கேட்டோம்.

''ஏராளமானோர் முன் வருகிறார்கள். டி.கே.எஸ். கலைவாணன், டி.எல். மகராஜன் போன்றோர் இந்த மன்றத்தில் கச்சேரி செய்துள்ளார்கள். பொங்கலை ஒட்டி இசை விழா நடத்தப் போகிறோம். நுழைவுக்கட்டணம் கிடையாது...'' என்கிறார் அருணாசலம்.

தமிழிசையில் ஆர்வமுள்ள, அதே சமயத்தில் பெரியார் கொள்கைகளில் பிடிப்பு உள்ள ரசிகர்கள் பலரின் ஆதரவு மன்றத்துக்கு இருக்கிறது. கட்சிக் கூட்டப் பாடல்களைக் கச்சேரிகளிலும் பாடச் சொல்லிக் கேட்காமலிருந்தால் சரிதான்!


- ப்ரியன்




● அருணாசலம்

● டி.கே.எஸ். கலைவாணன் - மன்றத்தில் கச்சேரி




டிசம்பர் தேவைகள்!
பறக்கும் பிளாஸ்த்திரி
ஒரு பட்டனை அழுத்தினால் ஒலி வரும் திசையில் பறந்து சென்று ஒட்டிக் கொள்ளும் பிளாஸ்த்திரி. தலைமை தாங்க வந்து, குறித்த நேரத்தைக் கடந்து பேசிக் கொண்டேயிருப்பவரை நிறுத்தச் செய்ய ரொம்ப வசதி.
கைக் கடிகாரத்தில் நண்டு!
அதி நவீன ரிஸ்ட் வாட்ச். பக்கத்து சீட்காரர் பாடியோ, பேசியோ கழுத்தறுக்கும்போது, அதன் பட்டனைத் தட்டினால் நண்டுக் கரம் நீண்டு, தொடியில் அவரை நறுக்கென்று கிள்ளிவிட்டுத் திரும்பும். ஒரு முறை 'வீல்' சப்தம் கேட்கும் என்றாலும் அதன் பிறகு நிம்மதியாய்ப் பாட்டுக் கேட்கலாம்.
சபா ஸ்பெஷல் சீட் பெல்ட்
தனி ஆவர்த்தனம் ஆரம்பித்ததுமே ரிமோட் கன்ட்ரோல் முறையில் ஒவ்வொரு சேரையும் ஓர் எஃகு கம்பி சுற்றி வளைத்து, அதில் இருப்பவரைச் சிறைப்படுத்தும். தனி ஆவர்த்தனம் முடிந்ததும் தானாக விலகி வழிவிடும்.


தலைவருக்கு டெலஸ்கோப்
ஒரே நாளில் இரண்டு சபா நிகழ்ச்சிகளில் தலைமை வகிப்பவருக்கு ஏற்ற மாஜிக் கருவி. ஒரு சபாவில் இருந்தபடி அடுத்ததில் என்ன நடக்கிறது என்பதைப் பார்க்கலாம்.
ஆடியன்ஸ் ஸ்பெக்ஸ்
இந்த ஸ்பெஷல் கண்ணாடியைப் போட்டுக் கொண்டால் மாலை நேரக் கச்சேரிகளில் காலி சீட்களில் கூட ஆட்கள் உட்கார்ந்திருப்பது தெரியும்.... இதன் மறுபுறமும் உண்டு. இக் கண்ணாடி ஃபுல் அரங்கத்தைக் காலியாகக் காட்டும். பிற்பகல் கச்சேரி செய்யும் ஜூனியர் வித்வான் இதை அணிய, ஃபுல் அரங்கம் காலியாகத் தெரிய தாமும் மாலைக் கச்சேரி செய்யும் ஒரு சீனியர் வித்வான் என்று எண்ணி மகிழலாம்.
பறக்கும் கர்ச்சீஃப்
கச்சேரி முடிவதற்குப் பதினைந்து நிமிடம் முன்னதாக இயக்கினால், பறந்து போய் காண்டீனில் இடம் பிடிக்கும்.
காண்டீன்
கும் குத்து கிளவ்ஸ்
இதைக் கைப்பையிலோ பாக்கெட்டிலோ வைத்துக் கொண்டு கச்சேரி அரங்கக் கதவுகளைக் காவல் காக்கும் முசுடான வாலண்டியர்களைப் பதம் பார்க்கலாம்.

சக்கரவர்த்தித் திருமகன்

63. வாயு புத்திரன்

சீதை சிறையில் கிடந்த இடமும் அரக்கன் இருந்த தேசமும் சம்பாதி சொல்ல வானரர்கள் தெரிந்து கொண்டார்கள். ஆயினும் சுக்ரீவனிடம் போய்ச் சொல்லுவதற்கு இது போதாதல்லவா? தாங்களே பார்த்தறியாமல் பிறர் சொன்னதை எடுத்துக் கொண்டு, தேடும் காரியத்தை நிறுத்தி விடுவது சரியல்ல. நேரில் கண்டு சம்பாதி சொன்னதெல்லாம் உண்மையென்று காண வேண்டும்; அதன் பின் தானே ராம காரியத்தைச் செய்து தீர்க்க முடியும்? கடலைத் தாண்டினால் அல்லவோ நேரில் பார்க்க முடியும்? இதற்கென்ன செய்வது என்று தெரியாமல் அங்கதன் திகைத்தான்.

கடலோரம் சென்று வானரர்கள் ''இந்தக் கடலை நாம் எவ்வாறு தாண்டி லங்கைக்குள் பிரவேசித்து சீதையைக் கண்டு திரும்புவது?'' என்று மறுபடியும் கவலையிலும் பயத்திலும் மூழ்கினார்கள்.

அங்கதன் சொன்னான் - ''எந்தக் காரியம் எப்படிச் சாதிக்க வேண்டியதானாலும் தைரியத்தை இழக்கலாகாது. தைரியமே முயற்சிக்கு அடிக்கட்டு. அதைரியம் எந்தவித முயற்சிக்கும் சத்துருவாகும்.''

பிறகு தன் படையிலுள்ள வீரர்களையெல்லாம் அவரவருடைய தாவும் சக்தியைப் பற்றி உண்மையைச் சொல்லும்படி வேண்டினான்.

''வானர வீரர்களே! உங்களுடைய சாமர்த்தியத்தைப் பற்றி சுக்ரீவன் சொல்லக் கேட்டிருக்கிறேன். நீங்கள் ஒவ்வொருவரும் தேஜஸும் வீரியமும் நிறைந்தவர்கள் என்பதில் சந்தேகமில்லை. இந்தக் காரியத்தை நாம் முடித்தே தீர வேண்டும். சீதையைக் காணாமல் நாம் ஒரு நாளும் கிஷ்கிந்தைக்குத் திரும்ப முடியாது. அரசனால் அவமானத்தோடு கொல்லப் படுவதைவிட இவ்விடமே நாமாக உயிர் நீப்பது நலம். ஆனபடியால், சொல்லுங்கள் ஒவ்வொருவராக, எவ்வளவு தூரம் தாண்டும் உறுதியும் நம்பிக்கையும் உங்களுக்கு இருக்கிறது?'' என்றான்.

கஜன் ''நான் பத்து யோஜனை தாண்டுவேன்'' என்று அடக்கத்துடன் சொன்னான். கவாக்ஷன் ''நான் இருபது யோஜனை தாண்டுவேன்'' என்றான்.

''நான் முப்பது யோஜனை தாண்டுவேன்'' என்றான் மற்றொரு வானரத் தலைவன்.

இவ்வாறே பலர் முன் வந்தார்கள். ஒருவர் மேல் ஒருவர் உயர்ந்து கொண்டே போனார்கள். கடைசியாக எல்லாரையும் விட முதிய வீரனான ஜாம்புவான் பேசலானான்.

''நான் விருத்தாப்பிய தசை அடைந்திருக்கிறேன். ஒரு காலத்தில் கொஞ்சம் பலம் எனக்கு இருந்தது. இப்போது அசக்தனாக இருக்கிறேன். ஆயினும் இது அரசன் கட்டளையிட்ட வேலை. ராம காரியமாகவும் இருக்கிறது. கிழ வயதிலும் ஏதாவது செய்யலாம் என்று ஆசைப்படுகிறேன். தொண்ணூறு யோஜனை தாண்டுவேன். அதற்கு மேல் முடியாது. லங்கை போய்ச்சேர இது போதாது போலிருக்கிறதே! என் வாலிபப் பருவத்தை நினைத்து


ராஜாஜி

இப்போது கிழவனாகி விட்டேனே என்று வருத்தமாக இருக்கிறது'' என்றான்.

இதைக் கேட்ட யுவராஜன், ''நான் நூறு யோஜனையும் தாண்டி லங்கை போய்ச் சேருவேன், சந்தேகமில்லை. ஆனால் அவ்விடத்திலிருந்து திரும்பி வர அவ்வளவு தூரம் மறுபடி தாண்டும் சக்தி எனக்கு இருக்குமோ இருக்காதோ சொல்ல முடியாது'' என்றான்.

ஜாம்புவான் சொன்னான் : ''அரசகுமாரா! அதைப் பற்றி நீ சந்தேகப்பட வேண்டியதில்லை. வாலிக்கு இருந்தது போலவே உனக்கும் அளவற்ற சக்தி உண்டு. ஆயினும் இந்தக் காரியத்தை அரசனாகிய நீ வகித்தல் சரியாகாது. மற்றவர்களைக் கொண்டு அரசன் வேலை வாங்க வேண்டும். தானே நேரில் காரியங்களைச் செய்யப் போவது ராஜநீதியாகாது. அபாயமாகும். பிரஜைகளைக் காத்து ஆள வேண்டியவன் பின்னால் நிற்க வேண்டும். அபாய காரியங்களில் தானே நேரில் பிரவேசிக்கக் கூடாது. நான் சொல்லும் யோசனை என்னவென்றால், அதோ தூரத்தில் மௌனமாக உட்கார்ந்திருக்கிறானே வாயு குமாரன், அவன்தான் இக்காரியத்தைச் செய்து முடிக்குந் திறமையும் சக்தியும் பெற்றவன்.''

இவ்வாறு சொல்லிவிட்டு ஜாம்புவான் ஹனுமானிடம் சென்று அவனை அழைத்து வந்தான்.



துயரத்தில் மூழ்கி நின்ற லக்ஷக்கணக்கான வானரர்களுக்கெதிரில் ஜாம்புவான் ஹனுமானைப் பார்த்துச் சொன்னான் :

''வீரனே, எல்லா சாஸ்திரங்களையும் அறிந்த சிரேஷ்டனே, தனியாக ஏன் பேசாமல் உட்கார்ந்திருந்தாய்? அரசனான சுக்ரீவனுக்குச் சமமல்லவோ நீ? தேஜஸிலும் பலத்திலும் நீ நம் அனைவரையும் தோற்கடிப்பாயல்லவோ? ராம லக்ஷ்மணர்களுக்குங் கூட நீ சமானமானவனல்லவோ? பக்ஷி சிரேஷ்டனான கருடன் கடலைத் தாண்டிப் பறப்பதை நான் பார்த்திருக்கிறேன். வினதையின் குமாரன் கருடனுடைய சிறகுகளின் பெரும் பலம் உன் தோள்களுக்கும் உண்டு. பராக்கிரமத்திலும் வேகத்திலும் கருடனுக்கு நீ குறைந்தவனல்ல. உன்னுடைய பலமும் புத்தியும் உனக்குத் தெரியவில்லை. உலகத்தில் உனக்குச் சமம் யாரும் இல்லை. உன் தாயார் அஞ்ஜனை தேவலோகத்து அப்ஸரஸ்; ரிஷியின் சாபத்தால் வானரியாகப் பிறந்தாள். அவள் மலைச் சாரலில் உல்லாசமாகத் திரிந்து கொண்டிருந்த போது ஒரு நாள் வாயுதேவன் அவள் அழகைக் கண்டு காம பரவசமாகிப் போய் அடக்கம் இழந்து அவளைத் தழுவினான். தருமத்துக்குப் பயந்த அவள் 'யார், பதிவிரதையாகிய என்னை அவமானப் படுத்துவது துஷ்டனே?' என்று கோபம் கொண்டு கேட்க, வாயுதேவன் சொன்னான் : 'கோபிக்க வேண்டாம்! உன் தேகம் மாசுபடவில்லை. ஆசையால் தூண்டப்பட்டு நான் இந்தக் காரியம் செய்து விட்டேன். தூர நிற்கிறேன். மனத்தாலேதான் நான் உன்னை ஆலிங்கனம் செய்தது. உன் உடல் என்னால் தீண்டப்படவில்லை. ஆயினும் என் மானஸ ஸ்பரிசத்தால் உனக்கு உண்டாகும் மகன் எனக்குச் சமமான வீரியமும் பலமும் பெற்றவனாயிருப்பான். நிகரற்ற பராக்கிரமமும் புத்தியும் கொண்ட வானரன் ஆவான்.' இவ்வாறு வாயு பகவான் வினயமாகச் சொல்லி அஞ்ஜனையைச் சமாதானப்படுத்தினான்.

''ஹனுமானே! நீ சிறு குழந்தையாக இருக்கும்போதே ஆகாயத்தில் கிளம்பிக் கிழக்கில் உதித்த சூரியனை ஒரு பழம் என்று எண்ணி அதைப் பிடிக்கச் சென்றாய். நீ கிளம்பித் தடையின்றி பயமின்றிச் செல்வதைப் பார்த்து தேவராஜன் கவலை கொண்டு 'இது யார்

சூரியனைப் பிடிக்கவே போகிறான்' என்று வஜ்ராயுதத்தை உன்பேரில் வீசினான். இடியால் அடிபட்டு நீ விழுந்தாய். மலையின் மேல் விழுந்தபடியால் உன் வலது கன்னம் உடைந்தது. உன் தந்தை வாயுபகவான் உனக்கு நேரிட்டதைக் கண்டு பெருங் கோபம் கொண்டு தன் சலனத்தை நிறுத்தி விட்டான். அதன் பயனாக ஜீவகோடிகளனைத்தும் பிராண ஸ்தம்பம் அடைந்து வருத்தப் பட்டுத் தத்தளித்தன. தேவர்கள் வாயு பகவானைக் கோபம் தணிய வேண்டிக் கொண்டு இறைஞ்சினார்கள். பிரம்மனும் இந்திரனும் அச்சமயம் உனக்கு வரம் தந்தார்கள். உனக்கு எந்த ஆயுதத்தாலும் அழிவில்லை. நீ இஷ்டப்பட்ட போது உன் மரணம் வரும். அதுவரையில் இல்லை என்று நீ அவர்களிடம் வரம் பெற்று சிரஞ்சீவியானாய். அஞ்ஜனை வயிற்றில் நீ வாயுபகவானுடைய மானஸ புத்திரனாகப் பிறந்தவன். வாயு பகவானுக்குச் சமமான தேஜஸும் புத்தியும் பராக்கிரமமும் பலமும் பெற்றிருக்கிறாய். இந்த பலத்தை நீ மற்ற துஷ்டர்களைப் போல் துர்விநியோகம் செய்யாமல் அடக்கமாக இருக்கிறாய். ராம காரியத்தை முடித்துத் தரக் கூடியவன் நீயே. சமுத்திரத்தைத் தாண்டுவது உனக்கு ஒரு கஷ்டமல்ல. பெருந் துயரக் கடலில் தத்தளித்துக் கொண்டிருக்கும் இந்த வானரப் படையை நீ காப்பாற்ற வேண்டும். கடலைத் தாண்டும் சக்தியைப் பெற்றிருக்கும் நீ சும்மா இருக்கலாகாது. உன் வடிவம் பெருகுக. கருடனுக்கு நிகரானவன் நீ. நானும் ஒரு காலத்தில் பலம் பெற்றிருந்தேன். இந்த பூமண்டலத்தை இருபத்தோரு தடவை சுற்றி வந்திருக்கிறேன். பாற்கடலைக் கடைந்த காலத்தில் தேவர்கள் சொன்னபடி நான் நான்கு திசைகளிலிருந்தும் ஔஷதிகளைக் கொண்டு வந்து கடலில் சேர்த்தேன். ஆனால் இப்போது நான் விருத்தாப்பியம் அடைந்து விட்டேன். நீதான் வானரர்களுக்கு இப்பொழுது கதி. ஆஞ்சனேயா, உன்னைச் சரணம் அடைந்தோம். தெய்வீக சக்தியைப் பிதுரார்ஜிதமாகப் பெற்றிருக்கும் உத்தமனே, இனித் தாமதிக்க வேண்டாம். உன்னுடைய உண்மை பலத்தை அறிந்து கொண்டு கிளம்புவாய். திரிவிக்கிரமனைப் போல் ஒரே தாவுத் தாவி இந்த சமுத்திரத்தைத் தாண்டுவாய். நம்முடைய துயரத்தைத் தீர்ப்பாய்!''

இவ்வாறு விருத்தனான, ஜாம்புவான் ஹனுமானைத் துதித்து அவனுக்குள்ள பலத்தை அவனுக்கு எடுத்துக் காட்டித் தூங்கி நின்ற பராக்கிரமத்தை எழுப்பினான்.

உடனே பருவ காலத்துச் சமுத்திரம் போல் ஹனுமானுடைய வடிவம் வளர ஆரம்பித்தது. வானரர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே வாயு புத்திரன் வளர்ந்து வளர்ந்து தேகமும் தேஜஸும் விருத்தியாகி திருவிக்கிரமனைப் போல் நின்றான். அவன் உடலினின்று வீசிய சுடரொளியைக் கண்டு அங்கதனும் மற்ற வானரர்களும் வியந்து ஆனந்த பரவசமானார்கள்.

இனி, ராமாயணத்தில் ஹனுமானே கதாநாயகன். விஷ்ணு பக்தர்கள் அவனைச் 'சின்ன திருவடி' என்று பெயரிட்டு அன்போடு சொல்வார்கள். பெரிய திருவடி கருடன். கருடன் எப்போதும் பெருமாளிடமே இருப்பதால் அவனுக்கு அந்தப் பெயர். இளைய திருவடி பிராட்டியின் துக்கத்தைத் தீர்த்து, ராவணனுடைய நகரத்தைக் கொளுத்தி அழித்துத் தன் நாதனிடம் சென்று 'கண்டேன் சீதையை' என்று தெரிவித்த வரலாறு இனி சொல்லப்படும்.

(தொடரும்)

எதிர்பாராத வி.ஐ.பி.!


சுதந்திர தினத்தன்று கர்நாடகத்திலுள்ள சித்திரதுர்காவில் தலைமைத் தபால் நிலையத்தில் கொடியேற்றுவதற்காக, ஒரு முக்கியஸ்தருக்காக மக்கள் காத்திருந்தார்கள்.



அப்போது அருகிலுள்ள ஒரு மரத்திலிருந்து குரங்கு ஒன்று இறங்கி, சரசரவென்று கொடிக்கம்பத்தில் ஏறி, கயிற்றைப் பிடித்திழுத்து தேசியக் கொடியைப் பட்டொளி வீசிப் பறக்கச் செய்தது!

ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்த மக்கள் சமயோசிதத்துடன் எழுந்து நின்று, தேசிய கீதத்தை இசைத்ததோடல்லாமல் (புதிய வி.ஐ.பி.க்கும் சேர்த்து) இனிப்பு வழங்கி மகிழ்ந்தனர்!

இந்தியன் எக்ஸ்பிரஸில்
ஒரு வாசகர் கடிதம்.




சிரி..க
ம...ட..
த..நீ..
ஜோக்ஸ்:
கடையநல்லூர்
கணேசன்
படம்: சுபி.
• வீணையை மீட்டிட்டேன்னு பெருமையா பீத்திக்கிறார்
★ இந்த சீசன்ல சான்ஸ் கிடைக்குதாம்டா?
• உஹூம்! மார்வாடியிடம் அடகு வைத்திருந்ததை மீட்டதா சொல்லிக்கிறார்!
• ஸோலோ வித்வான் ஏன் கச்சேரி பண்றதையே விட்டுட்டார்?
★ மனுசன் கொஞ்சம் பயந்த சுபாவம். எத்தனை நாளைக்குத்தான் தன்னந் தனியா சபாவிலே உட்கார்ந்து கச்சேரி பண்ணுவார்?
சபா
• பாகவதரிடம் குழந்தைக்கு பேர் வைக்கச் சொன்னது ரொம்ப தப்பாப் போச்சு!
★ ஏன்?
• வாயில சுலபமா நுழையற மாதிரி பேர் வையுங்கன்னோம்; மோர்சிங்னுட்டார்!
• இருந்தாலும் இந்த பாகவதர் ரொம்பவும் பொய் சொல்றார்!
★ அப்படியா?
• ஆமா. லோக்சபா, ராஜ்ய சபா உட்பட எல்லா சபாவிலும் கச்சேரி பண்ணியிருக்கேனாம்!
அம்மா பாகவதர் மாமா ஏதோ கத்திண்டு அழுதார். அவருக்கும் ஃபைவ் ஸ்டார் சாக்லெட் கொடேம்மா!
கின்னஸில் இடம் பிடிக்கணும்கிறதுக்காக இப்படியா...!

சங்கீதச் சிரிப்பிதழ்

ஞாயிறு, 19.12.93

நடுநிலை நகைச்சுவை நாளேடு



சுப்புடுவின் சூடான விமர்சனம்!



● சுப்புடு

சேஷகோபாலன் எப்போதுமே விசேஷகோபாலன். இந்த வருஷம் தமிழிசையில் அவர் தொல்காப்பியத்தை மூன்று மணி நேரக் கச்சேரி செய்கிறார் என்று கேள்விப்பட்டு (அவ்வை நடராஜன், டீவி நடராஜன் உடன் வர) போய்க் கேட்டேன். •சபையில் மீ.ப. சோமுவைத்தவிர மீதிப்பேர் நித்திரா தேவி வசம். தொல்காப்பியத்தைப் பாட்டாகக் கேட்ட மாத்திரத்தில் தம் முழங்கால் வலி முழுகம் போய் விட்டதாகச் சொன்னார் சோமு. ராஜாஜி இருந்தபோதே, தம்மிடம் மட்டும் தொல்காப்பியத்தை ஸ்வரப்படுத்திப் பாட வேண்டும் என்று தெரிவித்ததாகச் சொன்னார்.

அன்றைக்கு சேஷகோபாலன் பிடித்த பிடிகள் எல்லாம் என்னைப்பிடி உன்னைப் பிடி என்று இருந்தன. ப்ரியா சுந்தரேசனும், ஸ்ரீநிதி ரங்கராஜனும் இதற்கெல்லாம் நடனம் ஆடியிருந்தால் எப்படி இருக்கும் என்று ஓர் அற்புதக் கற்பனை பண்ணிப் பார்த்தேன். உடம்பு அப்படியே ஜிவ்வென்று ஆகாசத்தில் பறந்தது!

- சுப்புடு

முதல்வருக்குப் பாதுகாப்பு!

''மியூசிக் அகாடமி இருக்கும் கதீட்ரல் சாலையிலிருந்து தள்ளி, உள்......ளே இருக்கும் போயஸ் தோட்டத்தில்தான் முதல்வர் இருக்கிறார். எல். டி. ஈ. ஐச் சேர்ந்தவர் யாரும் தீட்சிதர், சியாமா சாஸ்திரி, தியாகராஜர் கிருதிகளைக் கற்றுக் கொண்டு, பாகவதர் வேஷத்தில் அகாடமிக்கு வர...

மைக்கேல் ஜாக்சனுக்கு 'சங்கீத கலாநிதி' விருதா?

- மறுக்கிறார் டி.டி. வாசு



● டி.டி. வாசு

''மைக்கேல் ஜாக்சனுக்கு மியூஸிக் அகாடமியில் சங்கீத கலாநிதி பட்டம் கொடுக்கப்படவேண்டும் என்று சிலர் சிபாரிசு செய்தது உண்மைதான்'' என்று ஒப்புக் கொண்டார் டி.டி. வாசு. 'அண்டை மாநில வித்வான்களைக் கௌரவிக்கும் போது, ஏன் உலக மகா வித்வானாகிய மைக்கேலைக் கௌரவிக்கக் கூடாது?' என்று இவர்கள் கேட்டார்களாம். 'மைக்கேலுக்கு விருது வழங்க ரவிசங்கரை அழைக்க வேண்டும்' என்றும் இவர்கள் வற்புறுத்தியதாகத் தெரிய வருகிறது. இதற்குப் பலமான எதிர்ப்பும் எக்ஸ்பர்ட் கமிட்டியில் இருக்கவே, வோட்...



● மைக்கேல் ஜாக்ஸன்

...யில் வழுக்கி விழுந்து விட்டார்! அடித்தது யோகம், மணிகிருஷ்ண சாமிக்கு!

''மைக்கேல் ஜாக்சன் கச்சேரி செய்வதாக இருந்தால் அவருக்கு ஏகப்பட்ட பணம் தர வேண்டியிருந்திருக்குமே'' என்று நமது நிருபர் கேட்டதற்கு, ''ஆமாம், அவருக்கு ஐம்பது லட்சம் ரூபாய்...



✱ ஜெயலலிதா

முதலமைச்சருக்கு இந்த சீச னில் அதிகப்படி செக்யூரிடி கொடுக்க நினைத்து இருக்கி றோம்'' என்றார் பத்திரிகை நிரு பர்கள் கூட்டத்தைக் கூட்டிய போலீஸ் கமிஷனர் ஆர். ராஜ கோபாலன்.

ஆனால் கிரக சோதனை சாயுமே லாததாலோ என்னவோ, மைக் கேல் ஜாக்சன் இந்தியப் பயணத் தையே ரத்து செய்து விட, அவ ருக்கு விருது வழங்குவதாக இருந்த ரவிசங்கரும் வாசல்படி

களுக்கு இந்நூறு ரூபாய்தான். 'அகாடமியில் பாட வாய்ப்புக் கிடைப்பதே ஐம்பது லட்சத் துக்குச் சமம்' என்று அவர்கள் கூறி விட்டார்கள்'' என்றார் டி.டி. வாசு.

குந்துமணி ஆடிய வர்ணம் !

- ஓர் ஆராய்ச்சி!

குமாரி குந்துமணியின் பரத நாட்டிய நிகழ்ச்சி நாரத கான சபா அரங்கில் நடைபெற்றது. மியூசி காலஜிஸ்ட் டி.எஸ். பார்த்தசாரதி கடைசியில் பேசினார்.

''குந்துமணி ஆடிய வர்ணம் கொன்னையா எழுதியது. இவர் 1478 க்கும் 1498 க்கும் இடையே பிறந்து, 1592 - ல் வாழ்ந்தவர். இவர் சரபோஜி காலத்தில்



✱ டி. எஸ். பார்த்தசாரதி

வாழ்ந்தாரா, இல்லை சுவாதித் திருநாள் காலத்தில் வாழ்ந்தாரா என்று தெளிவாகத் தெரிய வில்லை. இரண்டு பேர் காலத் திலும் வாழ்ந்திருக்கலாம். வாழா மலும் இருந்திருக்கலாம். ஆனால் இவர் இயற்றி இப்போது பாடப் பட்ட, 'கோபமென்ன வந்தது கோப குமாரனுக்கு' என்ற சாகித் தியத்தில், சிலர் மூக்கு சிவந்ததோ என்று பாடாமல், மூக்கு சிந்தி யதோ என்று மாற்றிப் பாடு கிறார்கள். பாட்டை எழுதிய போது கொன்னையாவுக்கு நல்ல ஜலதோஷம் பிடித்திருந்தது, வாஸ்தவம். ஆனால் எது சரியான பாடாந்தரம் என்று தெரியாமல் பாடக் கூடாது. எனவே இரண் டுமே சரி என்பது என் அபிப் பிராயம்'' என்றார் டி.எஸ். பார்த்த சாரதி.



✱ யக்ஞராமன்

மைக்கேல் ஜாக்சனுக்கு நிருத்ய சூடாமணி பட்டம் கிடையாது!

- யக்ஞராமன்

''மைக்கேல் ஜாக்சனுக்கு 'நிருத்ய சூடாமணி' விருது வழங்கலாம் என்றும், அவ ருடைய ஒரு நிகழ்ச்சியை வைத்தே கிருஷ்ணகான சபா கட்டடத்தைக் கட்டி முடித்து விடலாம் என்றும், நான் மட்டும் ஏக மனதாக நினைத்தேன். டாக்டர் பத்மா சுப்ர மண்யம் கூட இதை வரவேற்று போன் பண்ணினார். பரத சாஸ் திரத்தில் மைக்கேல் ஜாக்சனின் நிருத்யமும் வகைப்படுத்தப்பட் டிருப்பதாகவும், அதை ஆதார பூர்வமாகத் தம்மால் நிரூபிக்க முடியும் என்றும், இதற்காகத் தமக்கு முப்பத்து மூன்று லட்ச ரூபாய் அரசு கொடுத்தால் ஒரு டாக்குமென்டரியே எடுத்துக் காண்பிக்க முடியும் என்றும் பத்மா கூறினார். மைக்கேலுடன் சேர்ந்து ஆடவும் தாம் தயார் என்றும், வலையப்பட்டி தவில் இல்லாவிட்டால் ஜாகிர் உசேன் தபலா வாசித்தால் போதும் என்றும் டெலிபோனில் என்னி டம் சொன்னார். கிருஷ்ணகான சபாவின் நல்ல காலமோ, பத்மா சுப்ரமண்யத்தின் போதாத காலமோ, மைக்கேல் ஜாக்சன் இங்கே வர முடியாமலே போய் விட்டது; எல்லாம் நன்மைக்கே'' என்றார் யக்ஞராமன்.

குரல் வங்கி!

பாடத் தெரிந்தவர்கள் எல்லாம் வந்து பாட, ஜேசுதாஸ் வாய்ஸ் பாங்க் திறந்திருக்கிறார் அல்லவா? இதை இந்தியன் வங்கித் தலைவர் எம். கோபால கிருஷ்ணன் வெகுவாகப் பாராட்டினார்.


''எல்லாரும் வாயைத்தான் திறப்பார்கள். ஜேசுதாஸ் வாய்ஸ் பாங்க்கே திறந்திருக்கிறார். (சிரிப்பு) இதுவும் உங்களுடைய பாங்க்தான். (மறுபடி சிரிப்பு) ஏனென்றால் தொண்டை உங்களுடையது. இரண்டு கையைத் தட்டினால்தான் ஓசை வரும். ஆனால் தொண்டையைத் தட்டவே வேண்டாம்; திறந்தால் போதும். ஓசை வரும். பணம் இருப்பவர், இல்லாதவர் எல்லாருக்கும் தொண்டை இருக்கிறது. கத்தினால் சத்தம் வருகிறது. சிலர் கத்தினால் பாட்டு என்று அதை ரசிக்கிறோம். சில பேர் கத்தினால் காதைப் பொத்திக் கொள்ளுகிறோம். அதனால் காதைப் படைத்த கடவுளுக்கு நன்றி சொல்லி, என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன்'' என்றார் இந்தியன் வங்கித் தலைவர் கோபால கிருஷ்ணன்.

ஆசிரியருக்குக் கடிதம் :

கன்ஸ்யூமர் கோர்ட்டும் கர்நாடிக் மியூசிக்கும்

அன்புள்ள ஆசிரியருக்கு,

டாக்டர்களை மட்டுமல்ல, சங்கீத வித்வான்களையும் இனி மேல் கன்ஸ்யூமர் கோர்ட்டுக்கு இழுக்க வேண்டும். போன வாரம் ஆர்.ஆர். சபாவில் எதிராஜ பாகவதரின் கச்சேரி. 'இன்னமும் இரக்கம் இல்லையா என் சாமி?' என்ற நீலகண்ட சிவன் கீர்த்தனையைப் பாடச் சொல்லிச் சீட்டு அனுப்பினேன். 'நீலகண்ட சிவனா? யார் அது?' என்று கேட்டார் வித்துவான். 'பாபநாசம் சிவன்தான் எனக்குத் தெரியும்; எனக்கு ரயிலைப் பிடிக்கப் போகணும்' என்று அறிவித்து விட்டுப் புறப்பட்டுப் போய்விட்டார். நான் பத்து ரூபாய் டிக்கெட் வாங்கிக் கொண்டு போய்க் கச்சேரி கேட்க உட்காரும் கன்ஸ்யூமர். என்னைத் திருப்திப்படுத்த வேண்டும் என்பது வித்துவானுக்கு ஏன் தோன்றவில்லை?



கற்பனை : சித்தார்த்

இப்படிக்கு
அலமேலுமங்காபுரம்
ஆராவமுதன்
(வயது 97)

1

(வயலின் வித்துவான் வேப்பங்குடி வேதகிரியின் வீட்டில் காலை வேளை. ஹாலில் 'இந்து' பேப்பரையும், குழாயடியில் சுங்குடிப் புடவையையும் முறையே வேதகிரியும் அவ்னாரது மனைவி மங்களமும் அலசிக் கொண்டு இருக்கிறார்கள். டெலிபோன் 'தொண-தொண-தொண-தொண', தொண-தொண, தொண-தொண' என்று அலறிக் கொண்டு இருக்கிறது.)

வேதகிரி : அடேய்! இந்தத் தொல்லை பேசியை யாராவது எடுத்துத் தொலையுங்களேன். கச்சேரி நடுவே அடுக்கு இருமல் சத்தம் மாதிரி சரியான இம்சை. ச்சே!

மங்களம் : (வந்து கொண்டே) இப்ப என்ன அகாடமிலியா வாசிச்சிண்டு இருக்கேள். காலங்கார்த்தாலே முகாரியை முனகாம, பூபாளமாப் பொழிஞ்சா, சங்கர் எழுந்திண்டு இந்த வேலைகளெல்லாம் செய்வானில்லையா?

வேதகிரி : ஆமாம்! உன் பிள்ளைக்கு நான் கௌரவ காரியதரிசியா இருக்கிறேன், சுப்ரபாதம் பாடி உலுக்கி எழுப்பற அலாரம் டைம்பீஸாகவும் இருக்கணுமா? அவனும் அவன் பாட்டும்! ஒட்டகத்தைக் கட்டிக்கணுமாம்! எதுக்கடி? விட்டே போனாலே தாறுமே!

ஸாகம-பதநிச ரயிலே!



மங்களம் : முதல்லே நீங்க உங்க வாயைக் கட்டிக்கணும். அவன் சினிமாப் பாட்டுக் கலைஞன். கலைஞரை மதிக்க வேண்ணா என்ன ஆகும் தெரியுமோல்லியோ?

வேதகிரி : தெரியும், தெரியும்! ஆக மொத்தம் ஆமாம் சாமியா 'ஆபால கோபால'சாமியும் இருக்கணும்கிறே. இந்த டைகர்கிட்டே 'ஒட்டகங்கள்' ஒண்ணும் பண்ண முடியாது. (குரலை உயர்த்தி) மங்களம்! இது என்னோட மானப் பிரச்னை. பரம்பரை பரம்பரையாக மும்மூர்த்திகள் சாகித்யங்களைச் சாதகம் செய்து நாதோபாசனை செய்து வந்த குடும்பத்தில் வந்த இந்தக் கோடாலிக் காம்பு, கோடம்பாக்கக் 'செக்கபிக்கே' பாடல்களை அங்கிங்கெனாதபடி அர்த்த ராத்திரி வரை மேடைகளில் அலறிண்டு என் மானத்தை ஏத்த கப்பலுக்குப் பதில் எதைக் கொண்டு வரப் போகிறான் தெரியுமா?

சங்கர் : (வந்து கொண்டே) சிக்குபுக்கு சிக்குபுக்கு ரயிலே...

வேதகிரி : (திகைத்து, பின்னர் சுதாரித்துக் கொண்டு) ஆமா... கலக்குது பார் என் வயிறே!...

(குளிக்கப் போகிறார்)

2

('சிவிக்குவில்' இசைக் குழுவின் பிரதான பாடகர்களான சங்கரும், ஹரிணியும், கல்யாணக் கச்சேரியில், தற்போது சம்பிரதாயமாகி விட்ட 'செந்தமிழ்த் தேன் மொழியாள்' பாட்டை ஓர் இளைஞன் 'கும்'மென்று பாட, தனியாக கிசுகிசுத்துக் கொண்டு இருக்கிறார்கள்.)

ஹரிணி : சங்கர்! நெஜமா எப்போதும் என்னையே நினைச்சிண்டு இருக்கியா?

சங்கர் : என் வீட்டுத் தோட்டத்துப் பூவெல்லாம் கேட்டுப்பார் - என் வீட்டு ஜன்னல் கம்பி ஒவ்வொண்ணாய்க் கேட்டுப் பார்... என் வீட்டு...

ஹரிணி : ஓ காட்! ஸீரியஸா கேக்கிறேன். காதல் பாட்டா பாடி பதில் சொல்லாதே.

சங்கர் : பக்திப் பாடல் பாடட்டுமா? பாலும் தேனும் ஓடட்டுமா... சம்போ-சம்போ, சம்போ-சம்போ; சாயங்காலம் வம்போ-வம்போ...

ஹரிணி : சங்கர்! ஸ்டாப் இட்! என் அப்பா ஜாதகம் பார்க்க ஆரம்பிச்சாச்சு.

சங்கர் : பாக்காதே, பாக்காதே ஜாதகத்தைப் பாக்காதே; சொல்லாதே, சொல்லாதே என் மனசைக் கொல்லாதே...

ஹரிணி : போதும், போதும். நாம கல்யாணம் பண்ணிக்கப் போறோம்னு சொன்னா உங்கப்பா நம்ம தலையிலே அட்சதை போட்டு ஆசீர்வதிக்க மாட்டாரா?

சங்கர் : (சீரியஸாக) ஆர்டி எக்ஸைப்

போட்டுப் பொசுக்குவார்! அவருக்கு என் மேலே கோபம், பொறாமை - அவரை விட எனக்குக் கச்சேரிகள் அதிகம்னு. மறைந்த வாரியார் சுவாமிகள் தினம் சொற்பொழிவு செய்த மாதிரி, தினமும் நான் கச்சேரியில் வாசிக்கணும்னு அவருக்கு பெரிய்ய ஆசை. ஆனா, தினமும் சான்ஸ் கிடைக்கிறது என்னோட 'சின்ன சின்ன ஆசை'க்குத் தான்! இந்த அழகிலே சினிமா பாட்டு பாடற பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்னா, அவர் மஞ்சப் புடைவையில் மாரியம்மன் முன்னால் சாமி படத்தில் கோரதாண்டவம் ஆடற இளம் நடிகை மாதிரி தாளம் தப்பாம ஆட ஆரம்பிச்சுடுவார். நம்ம ட்ரூப் டோலக் லோகநாதனை வேணா உடுக்கு அடிக்கச் சொல்லலாம். 'பும் புபும் புபும்-பும் புபும் புபும்'னு ஜோரா 'பீட்' கொடுப்பான்.

ஹரிணி : நம்ம கதையிலே இப்படி ஒரு முடிச்சா? அதனாலதான் எப்போவும் கலகலப்பா இருக்கிற நீ நரசிம்மராவ் காரு மாதிரி சோகத்தின் இறுக்கத்தை முகத்தில் அடிக்கடி காட்டுகிறாயா? அதை விடு, எங்கப்பாவைப் பற்றித் தெரியுமில்லையா?

சங்கர் : என்னோட வருங்கால மாமனாரைப் பத்திக்தானே? கேள் பெண்ணே! 'ஹரிணி' என்கிற நடமாடும் நாத பிம்பத்தைப் படைத்து என் தமிழ்க் கண்களையும் குளிர வைத்தவர்! எப்படி டயலாக்! சிகவேஷனுக்குத் தகுந்த மாதிரி ஸ்பாட்டிலேயே எழுதினது.

ஹரிணி : *(நாணத்துடன்)* நிறைய ரீப் விடறே! சரி பசிக்குது. 'உசிலம்பட்டி பெண் குட்டி' பாடிட்டு சாப்பிடப் போகலாம் வா!

சங்கர் : பாத்து! நல்ல பசியிலே, உசிலே... உசிலேன்னு பாடறதுக்கு பதில் 'உசிலி, உசிலி... பருப்பு உசிலி'ன்னு பாடிடாதே!

3

(தேன் நிலவைக் கழிக்க வந்து தங்கிய ஓட்டல் அறையில் ஹரிணி 'சின்ன ராசாவே, கொக்க வந்து ரொம்ப புடுங்குது'ன்னு கைகளைக் கட்டிப் பாடிக் கொண்டிருக்கிறாள்)

சங்கர் : அதனாலென்ன! குளவியாகக் கொட்டிக் கொண்டிருந்த என் அப்பாவை சமாளிச்சிட்டயே. இந்தக் கொசுக்களின் ரீங்காரம் இனிமேல் உனக்குத் தம்புரா ஸ்ருதி மாதிரி இதமா இருக்கணுமே!

ஹரிணி : எலக்ட்ரானிக் சுருதி பாக்ஸ் கொட்டுது போங்க! நாம ஃபிலிம் மியூஸிக்

ஜே.எஸ்.ராகவன்



பாடிட்டிருந்த கல்யாண ரிஸப்ஷனுக்கு டைரக்டர் சங்கீதம் சங்கரய்யா வந்ததும் ஒரு இதமான 'லக்'தான். அந்தச் சமயம் பார்த்து நீங்க 'சிக்கு புக்கு' பாடப் போக அவர் முகம் சுளித்து, 'இதெல்லாம் அலுத்துப் போச்சு, மறுபடி கர்நாடிக் மியூஸிக்குக்கு முக்கியத்துவம் தந்து ஒரு படம் எடுக்கப் போறேன்'னு சொன்னதும் ஒரு வாய்ப்பு தந்தான்!

சங்கர் : நீயும் வாய்ப்பை நழுவ விடலையே! நைஸ்ஸா என் அப்பா வயலின் வேதகிரி கர்நாடிக் மியூஸிக்லே ஒரு ஜீனியஸ்னு சொல்லப் போக, அவரும் இம்ப்ரஸ் ஆகி, மறுநாளே அப்பாவுக்குக் கார் அனுப்ப...

ஹரிணி : சங்கரய்யாவுக்கு அவரை ரொம்பப் பிடிக்கப் போச்சு; 'புக்' பண்ணிட்டார்!

சங்கர் : என் அப்பாவுக்கும் சினிமா சங்கீதம் மேல இருந்த கோபம் போயிடுச்சு; நம்ம கல்யாணமும் 'புக்' ஆயிடுத்து! உன்னாலே அவருக்குக் கிடைச்ச சினிமா சான்ஸ் தானே, உன்னை மருமகளா ஏற்க மறுக்க முடியுமா?

ஹரிணி : அப்போ, நம்மோட சம்சார ரயிலுக்கு 'சிக்குபுக்கு ரயில்'ங்கறதை மாத்தி, 'சரிகம-பதநிச ரயில்'னு பெயர் வெச்சு, வண்டி புறப்பட பச்சை விளக்கு காட்டிடலாமா?

சங்கர் : *(நெருங்கி)* அசடே! விளக்கைக் காட்டுகிற நேரமா இது?

(ஹரிணியையும் விளக்கையும் அணைக்கிறான்)

விஜயலக்ஷ்மி

49. சித்திரைத் தேர்

இதற்கு முன் இத்தனை சிறப்பாக மதுரையில் நடந்த ஒரே திருமணம் அந்த மீனாட்சியுடையதாகத் தானிருக்க வேண்டும் என்று அந்நகர மக்கள் தீர்மானித்தார்கள். வேத கோஷங்கள் ஓங்கி ஒலிக்க, மங்கல வாத்தியங்களின் ஒலியுடன் சேர சோழ பாண்டிய மக்களின் கலகல வென்னும் சிரிப்பொலியும் பேச்சொலியும் சேர்ந்து கொண்டன. சேர நாட்டுச் சந்தனமும் பொதிகையின் அகிலும், தஞ்சையின் ஜவ்வாதும், தங்கள் மணத்தால் அரண்மனையை நிறைத்திருந்தன.

தமிழகத்தின் தலைசிறந்த சோதிட வல்லுனர்களும், அரண்மனைப் பண்டிதர்களும் மனதார ஒப்புக் கொள்ளும்படி நாராயண பட்டரால் குறிக்கப்பட்ட முகூர்த்தத்தில் விக்கிரமனுக்கும் கார்குழலிக்கும் திருமணம் நடந்து கொண்டிருந்தது. நிறம் ஒன்றைத் தவிர்த்து, கார்குழலி அந்த மீனாட்சியை அப்படியே கண்முன் கொண்டு வந்து நிறுத்தியிருந்தாள்.

இது இரண்டு மனங்களின் இணைப்பு மட்டுமல்ல; இரண்டு நாடுகளையும் இணைக்கும் மணம் என்பதை உணர்ந்தாலோ என் னவோ, மதுரை நகர் மீது கூடிய மேகங்கள் கொஞ்சம் ஆனந்தக் கண்ணீர் உகுத்தன. மணம் முடித்த கையோடு 'சோழ பாண்டியன்' என்ற பட்டப் பெயரோடு அரியணையில் ஏறினான் விக்கிரமன். பிற்காலத்தில் சோழப் பெருநாட்டைக் கட்டிக் காக்கும் பெரும் பொறுப்பிற்கான பயிற்சி அன்றே தொடங்கியது அவனுக்கு.

பெரும் பொறுப்பொன்று தீர்ந்த மகிழ்ச்சியில் மங்கையர்க்கரசி ஆனந்தக் கண்ணீர் உகுத்தாள்.

பிரதானிகளின் முறையான அறிமுகம் நடந்து முடிந்தது. மற்ற பொறுப்புக்களையும் விக்கிரமன் ஏற்று, மக்களின் வாழ்த்துக்களைப் பெற்று, பரிசுகள் வழங்கி முடிக்கவும் மாலையில் செல்ல வேண்டிய ஊர்வலத்துக்கான நேரம் நெருங்கவும் சரியாக இருந்தது.

மதுரை மாநகரின் கொண்டாட்டங்களிலோ, கேளிக்கைகளிலோ கலந்து கொள்ளாது, எல்லைப் புறத்தில் ஒதுங்கியிருந்த அந்தச் சிறு வீட்டின் உள்ளே அமர்ந்திருந்த மார்த்தாண்டனது சித்தம் பெரும் சிந்தனையில் ஆழ்ந்து கிடந்தது.

அதுவரையில் வந்து சேராத மற்ற இரு உபதலைவர்களைப் பற்றிய கவலையில் ஆழ்ந்திருந்த மார்த்தாண்டன், எதிரே மாமிச மலையாக அமர்ந்து, அமைதியின்றி விழித்துக் கொண்டிருந்த கலியனிடம் வினவினான் :

''கலியா, மற்ற இருவரும் ஏன் இன்னும் வரவில்லை?''

''தெரியவில்லை மார்த்தாண்டரே.''

''நாம் நடவடிக்கையிலிறங்கும் சமயம் நெருங்குகிறது.''

''ஆம் நெருங்கி விட்டது.''

சற்று சிந்தித்த மார்த்தாண்டன் எழுந்தான். ''கலியா, அவர்கள் பிறகு வந்தால் பாதகமில்லை. நீ நமது வீரர்களுடன் உடனே கிளம்பலாம்'' என்றான்.

''மாறவர்மரை இன்னும் ஒரு ஜாம நேரத்தில் இங்கு கொண்டு வந்து விடுகிறேன் மார்த்தாண்டரே'' என்றான் கலியன்.

''சரி. நான் என் பணியை முடித்துக் கொண்டு, இதே இடத்திற்கு வருகிறேன். புரவிகள் தயாராக இருக்கட்டும்!'' என்று உத்தரவிட்ட மார்த்தாண்டன், தனது தோற்பையையும் சிறு வில்லையும் பெரும் போர்வையொன்றால் மறைத்தபடி கிளம்பினான்.

சாலை நிச்சலனமாயிருப்பதையும், மக்கள் திருமணத்திற்காகவும் ஊர்வலம் காணவும் நகருக்குள் சென்று விட்டதால் வெறிச்சோடிக் கிடந்த தெருக்களையும் கண்டு திருப்தியுடன் கோட்டையை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

கோட்டையின் தெற்கு வாயிலில் பெயரளவுக்கு நின்றிருந்த காவலர், மார்த்தாண்டன் உள்ளே நுழையுமுன் கவனித்ததாகத் தோன்றினாலும் தடை ஏதும் செய்யவில்லை.

தெருக்களில் நடமாடிய ஒன்றிரண்டு மக்களும் வீரர்களும் அதிகம் கவனிக்காதபடி, நிழலடித்த பகுதியில் ஒதுங்கி நடந்த மார்த்தாண்டன், ஆலயத்தின் பின்பகுதியை அடைய ஒன்

பாண்டியன் மகள்



இது இரண்டு மனங்களின் இணைப்பு மட்டு மல்ல; இரண்டு நாடுகளையும் இணைக்கும் மணம் என்பதை உணர்ந்த தாலோ என்னவோ, மதுரை நகர் மீது கூடிய மேகங்கள் கொஞ்சம் ஆனந்தக் கண்ணீர் உகுத்தன.

றரை நாழிகை நேரமானது. ஒருமுறை சுற்றி ஓரம் பார்த்த மார்த்தாண்டன், திட்டி வாசல் கதவை மெல்லத் திறந்தான். உள்ளே நுழைந்து திரும்பியவன் சற்றுத் திகைத்தான். முதல் நாள் தான் கண்ட போது எவரு மற்றிருந்த அந்தப் பகுதியில், அரையிருளில் இப்போது வீரர்கள் இருவர் உருவிய வாட் களுடன் நின்றிருந்தனர்.

அவர்கள் நெருங்கு முன் ஒருமுறை சுழன்று போர்வையை விலக்கி எறிந்த மார்த் தாண்டனின் கரங்களில் இரு குறுவாட்கள் மின்னின. அடுத்த கணம் அவை பறந்து வீரர்களைத் தாக்கவும் செய்தன. கழுத்திலும் மார்பிலுமாகப் பாய்ந்த குறுவாட்கள், அந்த வீரர்களைக் கைகளில் பிடித்த வாட்களுடன் மண்ணில் சாய்த்தன.

அருள்வாக்கு

லாஸ்யம் என்ற பெண்களுக்கான நடனத்தைச் செய்யும் 'ஸமயா' என்னும் ரூபத்தில் அம்பாள் இருக்கிறாளாம். நவரஸ மஹா தாண்டவம் - புருஷர்களின் நடனம் - செய்கிற ஆனந்த பைரவர் என்ற மூர்த்தியாக ஈச்வரன் இருக்கிறாராம். இங்கே அவர் ஆடுவது ஊழிக்கூத்து என்ற ஸம்ஹார நடனமல்ல. ஊழியில் அழிந்த லோகத்தை மறுபடி ஸ்ருஷ்டி செய்வதற்காகவேதான் ஜனக-ஜனனியாக, அம்மா-அப்பாக்களாகத் தாங்களிருவரும் ஸகல லோகங்களையும் பெற்றெடுக்க வேண்டுமென்றேதான் இங்கே பரமேச்வரனும் பராசக்தியும் நர்த்தனம் செய்கிறார்களாம். தாயின் அன்பு மிளிர்கிற லாஸ்யத்தை அம்பிகையும், தகப்பனாக உலகை அடக்கியாளுவதற்குரிய காம்பீர்யம் நிறைந்த தாண்டவத்தை சிவபெருமானும் மூலாதார சக்ரத்தில் ஆடிக் கொண்டிருக்கிறார்கள். ஆனந்த

சுற்றுச் சுவரின் கீழே கிடந்த மரக் கட்டைகளை முன்பே கவனித்து வைத்திருந்தான் மார்த்தாண்டன். அவற்றில் அளவில் பெரிதாக இருந்த இரண்டு மூன்று கட்டைகளைச் சுவரில் சாய்த்து நிறுத்தினான். அவற்றை ஆதரவாகப் பிடித்தபடி தாவி, சுவரின் உச்சியை ஒரு கையால் பற்றி ஊசலாடினான். மீண்டும் ஒருமுறை எம்பி, அடுத்த கணம் சுவரின் மீது ஏறி நின்றிருந்தான்.

மறுபுறத்தில் தெரிந்த காட்சி அவனை அயரவைத்தது! மக்கள் வெள்ளம் அந்த வீதியை நிறைத்திருக்க, விளக்குகளும் பந்தங்களும் அந்த மாடவீதியைப் பட்டப் பகலாகக் காட்டின. அவற்றின் ஒளியில் வீரர்கள் தரித்திருந்த வேல்களும் வாட்களும் மின்னின.

தேரின் சுற்றுச் சீலையை விலக்கி, உள்ளே நுழைந்த மார்த்தாண்டன், குறுக்கும் நெடுக்குமாக மரச் சட்டங்கள் சென்றாலும் வட்டமாக தேரின் உச்சியில் அமைந்திருந்த பலகை, தாராளமாக இருவர் படுத்துறங்கக் கூடிய அளவுக்கு இருந்ததையும் தேரைச் சுற்றியிருந்த வண்ணச் சீலை நன்றாகத் தன்னை மறைத்து பாதுகாப்பு அளிப்பதையும் கண்டு திருப்தியுடன் தலையசைத்துக் கொண்டான்.

உள்ளே மண்டிக் கிடந்த புழுதியைத் துணியொன்றால் துடைத்தவன் மெல்ல சீலையை விலக்கி வெளியே பார்த்தான்.

விக்கிரமனும் கார்குழலியும் அமர்ந்திருந்த ரதம் தெற்கு மாட வீதியின் முனையில் நிதானமாகத் திரும்பிக் கொண்டிருந்தது.

ஊர்வலத்தின் முன்னே காலிங்கராயன் புரவியிலமர்ந்து வீதியைக் கூரிய விழிகளால் துழாவியபடி வந்து கொண்டிருந்தான். ரதத்தின் பின்னால் அரையன் மதுராந்தகன் புரவியில் அமர்ந்து வீதியையும் இருபுறங்களிலும் இருந்த மாளிகைகளையும் மாடங்களையும் பார்வையால் அலசியபடி வந்து கொண்டிருந்தான். மக்கள் கூட்டத்தினிடையே சோழ வீரர்கள் ஊடுருவி உடன் வந்து கொண்டிருந்தனர். மார்த்தாண்டனின் பார்வை அனைவரையும் விடுத்து ரதத்தின் மீது நிலைத்தது.

மதுரையில் தெற்கு எல்லையிலிருந்த அந்தப் பகுதி இருளில் மூழ்கிக் கிடந்தது. அந்தச் சிறு வீட்டின் பின்புறத்தில் லேசாக மழை பெய்து, பூமியை நனைத்து விட்டதால், மரப் பல்லிகளும், நுணல்களும் கானம் பாடிக் கொண்டிருந்தன. இருளில் பெரும் பிசாசைப் போல் நகர்ந்த கலியனும் தொடர்ந்த வீரர்களும் அந்தக் கிணற்றின் படிகளில் ஒவ்வொருவராக இறங்கி மறைந்தனர்.

கிணற்றினுள்ளிருந்து நீண்ட சுரங்க வழியில் பந்தமேந்திய வீரனொருவன் முன்னே செல்ல, தொடர்ந்த வீரர்களைத் திடீர் திடீரென முகத்தில் வௌவால்கள் அறைந்து விட்டுப் பறந்தன. நீண்டு கொண்டே சென்ற பாதை திடீரென சுவரொன்றில் முடிந்தது. கலியன் கைவைத்து விசையொன்றைத் திருகியதும் சுவர் லேசாக விலகி இடைவெளி கொடுத்தது. பின்புறத்தில் சிறைச் சாலையின் காவி வண்ணச் சுவர் தெரிய, நூலிழை இடைவெளியில் பார்வையைச் செலுத்திய கலியன், காவலுக்கிருந்த வீரர்கள் பந்தங்களின் ஒளியில் கும்பலாக அமர்ந்து பேசிக் கொண்டிருப்பதைக் கவனித்தான். கதவை ஒட்டி நீண்டிருந்த தாழ்வரையின் இருபுறமும் அறைகள் கம்பிக் கதவுகளுடன், பெரும் பூட்டுக்களுடன் தெரிந்தன. சுவரில் இடைவெளியை அதிகப்படுத்திய கலியன், இடது கரத்தால் சைகை செய்து விட்டு, வலது கரத்தில் உருவிய வாளுடன் உள்ளே பாய்ந்தான். திடும் பிரவேசமாக உருவிய வாட்களுடன் வீரர்கள் நுழைந்ததைக் கண்ட காவலர்கள் சற்றே திடுக்கிட்டாலும் உடனே எழுந்து வாட்களுடன் ஓடி வந்தனர்.

எண்ணிக்கையில் அதிகமாக இருந்த பாண்டிய வீரர்கள் காவலர்களை எளிதாக ஒருபுறம் ஒதுக்கிப் போராட வைத்தனர். வாட்கள் மோதிய ஒலிகளினூடே மாறவர்ம



பைரவி என்று ஒரு ராகத்தின் பேரைச் சொல்கிறோமே, இங்கே ஆனந்த பைரவரின் சக்தியாக இருக்கப்பட்ட ஸமயா தேவியின் இன்னொரு பெயர்தான் அது.

நாதம், நடனம் இவற்றிலிருந்தே ஸ்ருஷ்டி என்று சொல்வதிலிருந்து இந்த காந்தர்வ வித்யைகளின் பெருமை தெரிகிறது. Vibration களிலிருந்தே creation (அதிர்வுகளிலிருந்தே படைப்பு) என்கிற ஸயன்ஸ் கொள்கையும் இதுவும் ஒன்றுதான். அதிர்வு என்பதே ஆட்டம்தானே? சப்தத்தின் பலவிதமான ஆட்டம் ஸங்கீதம்; ரூபத்தின் பலவிதமான ஆட்டம் நாட்டியம். பூமி, ஸூர்யன், சந்திரன், நக்ஷத்ரம், க்ரஹம் எல்லாம் சுற்றிச் சுற்றி ஆடிக் கொண்டுதானிருக்கின்றன. சின்னதற்கெல்லாம் சின்னதான அணுவுக்குள்ளும் எலெக்ட்ரானும், ப்ரோடானும் நம்ப முடியாத வேகத்தில் நாட்டியம் பண்ணிக் கொண்டிருக்கின்றன. இந்த நாட்டியம் நடக்காவிட்டால் அவை அணு என்ற ரூபமே பெற முடியாது.

ஸ்ருஷ்டி இதிலிருந்துதான் பிறக்கிறது என்பதாலேயே ஸ்ருஷ்டியிலிருந்து விடுபடுவதற்கும் இதன் மூலத்துக்குப் போக வேண்டும் என்றுதானே ஆகிறது? அதனால்தான் கீத, வாத்ய, ந்ருத்யங்களையே மோக்ஷ மார்க்கமாக அப்யஸிக்கச் சொல்லியிருக்கிறது.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

னது குரல் மூலையிலிருந்து ''கலியா, கலியா'' என்று அழைத்து, அந்தக் கூடத்தில் பெரிதாக எதிரொலித்தது.

சிறைக் காவலரைத் தடுத்து நிறுத்துமாறு வீரர்களுக்கு உத்தரவிட்ட கலியன், மாறவர்மனிருந்த அறையை நோக்கி ஓடினான். வாளால் ஓங்கி அடித்துப் பூட்டைச் சிதறடித்த கலியன், மாறவர்மனது கரத்தில் வாளொன்றைத் திணித்தான். ''இளவரசே, என் பின்னால் விரைந்து வாருங்கள்'' என்றவன் திறந்திருந்த சுரங்க வழியை நோக்கிப் பாய்ந்தான்.

மாறவர்மன் விடுபட்டதைத் திரும்பிப் பார்த்த பாண்டிய வீரர்கள், காவலருடன் போரிடுவதை நிறுத்தி, கதவை நோக்கி ஓடி வர ஆரம்பித்தனர். கதவின் வழியே நுழைந்த கலியன், ஐம்பதடி தூரமே ஓடியிருப்பான். சற்று தூரத்தில் அவனுக்கு முன்னால் பந்தமொன்று எரிந்தது. தொடர்ந்து பல பந்தங்கள் தெரிந்தன. வேல்களும் வாட்களும் பந்தங்களின் ஒளியில் பளபளத்தன. உருவிய வாளுடன் ஜெயந்தன் முன்னால் வர, சோழ வீரர்கள் அதிவேகமாகப் பின்தொடர்ந்து கொண்டிருந்தனர்.

கலியன் திகைத்து நின்றான். மாறவர்மனின் முகம் அதிர்ச்சியில் வெளுத்தது.

சட்டென்று திரும்பிய கலியன் கூவினான் : ''திரும்பி ஓடுங்கள். சோழ வீரர்கள் வருகிறார்கள்!''

அவன் குரல் சுரங்க வழியில் பக்கச் சுவர்களைத் தாக்கி எதிரொலித்தது.

தடதடவென்று திரும்பி ஓடிய பாண்டிய வீரர்கள் மீண்டும் அந்தக் கதவின் வழியே சிறைக் கூடத்தில் இறங்கினர்.

இறுதியாக வெளிவந்த கலியனும் மாறவர்மனும் அந்தக் கூடத்தில் நிலவிய காட்சியைக் கண்டு திகைத்து நின்றனர்.

சற்று முன்பு பதினைந்து வீரர்களுக்கு மேலிராத அந்தக் கூடத்தில் இப்போது இரு பக்கங்களிலும் ஐம்பதுக்கும் குறையாத வீரர்கள் உருவிய வாட்களுடன் நின்றிருந்தனர்.

கலியனின் திகைப்பையும் மாறவர்மனது பிரமிப்பையும் கண்டு ரசித்தபடி, ''ஆகா! ஆகா!'' என்று வெண்கலக் குரல் ஒலிக்கத் தமது பெரும் சரீரத்தையும், வாளையும் தூக்கியபடி படிகளில் இறங்கி வந்து கொண்டிருந்தார் ஸ்ரீவல்லபர்.

தெற்கு மாடவீதி, மக்கள் வெள்ளத்தால் நிரம்பியிருக்க, ரதத்தின் பின்புறம் புரவியிலமர்ந்து, கூரிய விழிகளால் கூட்டத்தை அலசிக் கொண்டே வந்த அரையன் முகத்தில் சிந்தனை தீவிரமாகப் படரலாயிற்று. வீரர்கள் பலர் நகரைச் சல்லடையாகச் சலித்தும் இதுவரை மார்த்தாண்டனைக் கண்டு பிடித்துக் கைப்பற்ற முடியவில்லை என்று அவனுக்குத் தெரிந்திருந்தது. அதனால் கவலை தேங்கிய முகத்தின் விழிகள் ஆலயச் சுவரை ஒட்டி நின்ற சித்திரைத் தேரின் மீது பதிந்ததும் பளிச்சிட்டன. அதன் உச்சியில் கட்டப்பட்டிருந்த வண்ணச் சீலையில் ஏதோ அசைவு தெரிந்ததாகவும் பட்டது. ரதத்தை நெருங்கியவன், ரதசாரதியிடம் மெல்லச் செலுத்துமாறு கூறி

விட்டு ஊர்வலத்தை விட்டு விலகிப் பாய்ந்தான்.

பின்புறத்து மதிலின் திட்டிவாசல் திறந்து கிடப்பதைக் கண்டவன், சந்தேகத்துடன் உள்ளே கால்களை மெல்லப் பதித்து, மதிலின் மறுபுறம் தெரிந்த தேரின் உச்சிப் பகுதியைப் பார்த்தபடி நடந்தான். கால்களில் ஏதோ மெத்தென்று இடறியது. குனிந்து பார்த்த அரையன் திகைத்தான். சோழ வீரர் இருவர் விழுந்து கிடப்பது தெரிந்தது. அவன் கால்கள் மதிலின் மீது சாய்ந்து கிடந்த மரக் கட்டைகளை நோக்கி வேகமாக நடந்தன.

'தேரின் உச்சிப்பகுதியில் அமர்ந்து லேசாக சீலையை விலக்கிப் பார்த்த மார்த்தாண்டனுக்கு ரதம் மிக மெதுவாக வருவதாகத் தோன்றியது. தோற்பையிலிருந்து அம்புகளிலொன்றை எடுத்தவன், அதை உற்றுப் பார்த்து திருப்தியுடன் தலையசைத்துக் கொண்டான். மற்றுமொரு அம்பையும் எடுத்தவன் அதை எளிதில் எடுக்க வசதியாகக் கச்சையின் முன்பகுதியில் எச்சரிக்கையுடன் செருகிக் கொண்டான்.

சிறுவில்லை எடுத்து, நாணை நன்றாக முறுக்கேற்றிப் பொருத்திய மார்த்தாண்டன், பிரத்யேகமான அந்த அம்பை வில்லில் பூட்டினான். அம்பின் நுனியால் சீலையை விலக்கியவன், ரதம் நெருங்கிக் கொண்டிருப்பதைக் கவனித்தான். விக்கிரமனின் பார்வை உயர்ந்து, தானிருந்த இடத்தில் பதிந்திருப்பதாகத் தோன்றியது. கூட்டத்தை விலக்கியபடி காலிங்கராயன் தேரை நெருங்க முற்படுவதும் அவன் கண்களில் பட்டது. ரதம் சற்றுத் தொலைவிலிருப்பதாகத் தோன்றினாலும் இனியும் தாமதிப்பது ஆபத்து என்பது புரிந்தது அவனுக்கு.

மண்டியிட்டு அமர்ந்த நிலையில் இடது கரம் வில்லை ஸ்திரமாகப் பிடித்திருக்க, வலது கரப் பெருவிரலாலும் ஆள்காட்டி விரலாலும் அம்பின் அடிப்பகுதியைப் பற்றி இழுத்தான் மார்த்தாண்டன். எக்காரணம் கொண்டும் அந்த அம்பு வீணாகக் கூடாது என்று தீர்மானித்தவன், கார்குழலியின் நெஞ்சுக்குத் துல்லியமாகக் குறி வைத்தான்.

மரக் கட்டைகளின் மீது தாவி சப்தமின்றி ஏறிய அரையன், மதிலை ஒரு கையால் பற்றி, ஒரே மூச்சில் மேலே எம்பி உயர்ந்தான். வலது கரம் நீண்ட வாளைப் பிடித்திருக்க, இடது கரத்தால் சீலையை விலக்கி அரையன் உள்ளே பார்த்த அதே வினாடியில், மார்த்தாண்டனின் வில்லிலிருந்து அந்த அம்பு விடுபட்டுப் பறந்தது!

(தொடரும்)

வட்டமேஜை

◆ 'சட்டத்தையே மதித்திடாத நம் அரசியல் தலைவர்கள் தர்மத்திற்கா மசிந்து விடப் போகிறார்கள்' - என்று அரசியல்வாதிகளின் பிடரியைத் தாக்கிய தங்கள் தலையங்கத்தை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.
பவித்திரமாணிக்கம், ஆர். பாஸ்கரன்.

◆ சட்டப்படி இன்று எல்லாமே நடக்கிறது. அதாவது நடந்த மாதிரி காட்டப்படுகிறது. இதுதான் தற்போதைய அரசியல். கூடவே நீதிமன்றத் தீர்ப்புகளைக் குறைகூறும் அதிமேதாவித்தனம். சேஷன் போன்றவர்கள் எப்படித்தான் கண்டிப்பாக நடந்து, நேர்மையை நிலைநாட்ட முனைந்தாலும் வெட்கம், மனச்சாட்சி இல்லாத அரசியல்வாதிகள் அவற்றை என்றுமே பொருட்படுத்த மாட்டார்கள். இவையெல்லாம் நமக்குத்தான் வெட்கக்கேடாகத் தோன்றுகிறது. அவர்களுக்கு அல்லவே அல்ல!
மணக்காடு, சி. ரஜினிஅருள்.

◆ வில்லுக்கு விஜயன்; இருட்டுக்கு மணிரத்னம்; கட்-அவுட்டுக்கு ஜெ! ஆனால், தலையங்கத்திற்குக் கல்கிதான். ஆழ நோக்கில் விவரித்த தலையங்கம் அற்புதம்!
திருச்சி - 4, 'வீணை' ராம்ஜி.

◆ வினோத் காம்ப்ளியின் முகத்தில் உண்மையிலேயே பால்தான் வடிகிறது. எங்க ஆத்துல "டிகாக்ஷன்" போட்டு அவர் படத்திற்கு நேராகப் பாத்திரத்தை வைத்தோம்... "காப்பியாக" மாறி விட்டது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!
பட்டுக்கோட்டை, இ. ராதாகிருஷ்ணன்.

◆ அமரர் கல்கியின் நண்பரான சாதனை மன்னர் சுவாமி குறித்த தொகுப்பு கண்டேன். கல்கியின் எழுத்தில் அவரைப் பற்றிய செய்திகளைக் கொடுத்தது சுவையாக இருந்தது.
அரியநாயகிபுரம்,
அ. அப்துல் காதர்.

◆ நளினி சாஸ்திரியின் 'பரிமாறல்கள்' சிறுகதையை ஏனோதானோ என்றுதான் படிக்க ஆரம்பித்தேன். படிக்கப் படிக்கத்தான் அது பாசப் பரிமாறல்கள் என்பது புரிந்தது. 'மாமி' மெஸ்ஸின் பெற்றோர்களும், குழந்தைகளும் சேர்ந்து கண்களைக் கலங்கச் செய்து விட்டார்கள்.
இராஜாக்காமங்கலம்,
கே. மணிகண்டன்.

வில்லுக்கு விஜயன்; இருட்டுக்கு மணிரத்னம்; கட்-அவுட்டுக்கு ஜெ; தலையங்கத்துக்குக் கல்கி!

◆ "ஆஹா-டீ-ஷர்ட்ஸ்" கட்டுரை, படிக்கப் படிக்க என்னுள் ஒரு வேகம்... இவ்வளவு நாளாக இவ்வளவு சிறப்பும் - பெருமையும் பெற்ற டீ-ஷர்ட்களை அணியாமல் விட்டு விட்டோமே' என்று. இனி நானும் விரும்பி அணிவேன்.
திருவண்ணாமலை, ந. சண்முகம்.

◆ டீ-ஷர்ட்டே பிடிக்காதவர்களுக்குக் கூட மோகத்தை ஏற்படுத்தி விட்டது உம் கட்டுரை. அதிலும் கிராமப்புற மார்க் கெட்டைப் பிடிக்க நீர் கொடுத்திருக்கும் யோசனை பிரதமரையே சிரிக்க வைக்கும்!
பொன்மலை, துரை. நாகராஜன்.

◆ உலகப் புகழ்பெற்ற அதிசயங்களில் ஒன்றான தாஜ்மஹால் நிறம் மாறி வருவது சொல்லொண்ணா வேதனையைத் தருகின்றது. எப்பாடுபட்டாவது அதை அழிவிலிருந்து மீட்பது நம் தலையாய கடமை. அதை அரசு உடனே செய்ய வேண்டும்.
அருகந்தம்பூண்டி, திருமலை நாயகன்.

◆ 'வாசல் வரை...' என்ற சத்யப்பிரியனின் சிறுகதை முடிவு, நெஞ்சை என்னவோ செய்தது. ஜெயபாஸ்கரன் போன்ற நல் இதயங்கள் இருப்பதால் தானோ என்னவோ, மழையும் மறந்து போகாமல் பெய்கிறது. அற்புதமான சிறுகதை.
சேலம், கே. ராஜுபாலு.

◆ 'எங்க முதலாளி' என்ற திரைப்பட விமர்சனம் மிக அருமையாக இருந்தது. ரெட்டியார்கள் வீட்டில் தெலுங்கு தான் பேசுவார்கள். வசன கர்த்தா கவனிக்காமல் விட்டிருந்தாலும், கல்கி இதழ் கவனித்து விட்டமைக்குப் பாராட்டுக்கள்.
புதுவை - 4, வே. பார்த்தசாரதி.




நீங்கள் கேட்டவை

– தராசு

● முத்து ஆனந்த், தோட்டப்பாளையம். ❑

? வன்முறைக் காட்சிகளே வெற்றிக்குப் பிரதானம் என்று இன்றைய திரைப்படங்கள் இருப்பது சரியா?







! பிரிட்டனில் 11 வயதுச் சிறுவர்கள் இரண்டு பேர் சேர்ந்து ஒரு பச்சிளம் பாலகனைக் கொன்று விட்டனர். உலக வரலாறு காணாத இந்த வெங்கொடுமையை விசாரித்த நீதிபதி, வன்முறை நிறைந்த வீடியோ டீவி நிகழ்ச்சிகளால்தான் அந்தச் சிறுவர்களின் மனங்கள் அவ்வளவு விகாரப்பட்டுப் போயின என்று தமது தீர்ப்பினிடையே கூறியிருக்கிறார். பிரிட்டிஷ் அரசும் நாடாளுமன்றமும் தீர்ப்பையொட்டி குழந்தைகள் நலன் கருதி என்ன நடவடிக்கை எடுப்பது என்று யோசித்து வருகின்றன. நமது நாட்டிலும் சிதானந்த தாஸ் குப்தா, "இந்தியர்களின் வாழ்க்கை நெறிகளையே சினிமாக்கள்தாம் நிர்ணயிக்கின்றன" என்று ஆராய்ந்து சொல்லியிருக்கிறார். நமது படாதிபதிகளோ, அரசோ, செல்லார் போர்டோ இதையெல்லாம் யோசித்துப் பார்ப்பதாகவே தெரியவில்லை.

● எஸ். வைத்தியநாதன், திருவெண்ணெய்நல்லூர்.

? எய்ட்ஸ் நோய்க்கு மருந்து கண்டுபிடித்து விட்டால் அந் நோய்க்கு ஆளாகிறவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்தானே?

! மருந்து இருக்கிறது என்பதால் நோயை வரவழைத்துக் கொள்ள யாரும் விரும்ப மாட்டார்கள். பாதுகாப்பாக இருப்பதே புத்திசாலித்தனம். மேலும் நோய்க்கு மருந்துடன் நோய்த் தடுப்பு மருந்துக்கும் ஆராய்ச்சி நடக்கும்.

● வே. செந்தில்குமார், கொங்கணாபுரம்.

? "எம்.ஜி.ஆர். சினிமா புகழால் அரசியலில் வென்றவர்; ஆனால் வை.கோ. தமது சொந்த செல்வாக்கால் அரசியலில் ஒளி வீசுகிறார்" என்று பாரதிராஜா கூறுவது பற்றி...?

! அது சரிதான். அதனாலேயே வை.கோ. தாம் ஒரு எம்.ஜி.ஆராகி விட முடியாது என பதை உணர வேண்டுமல்லவா? அதைத் தான் மறைமுகமாக நினைவூட்டினாரோ என்னவோ! அதிருக்கட்டும், கட்சியின் கொள்கைச் சிறப்பால் நமது அரசியல்வாதிகள் மக்களிடையே செல்வாக்குப் பெறுவது என்று?

● ஆரல் சாரதி, ஆரல்வாய்மொழி.

? "இந்தியாவின் 98 சதவித அதிகாரிகள் ஊழல் பேர்வழிகள்" என்று சேஷன் கூறியது குறித்து...?

! நூறு சதம் என்று சொன்னால் நாமும் ஊழல் பேர்வழியாகி விடுவோம் என்று யோசித்து ஜாக்கிரதையாகத்தான் பேசியிருக்கிறார்!

● யோகஸ்ரீ ராஜ், பம்பாய்.

? வேலை பார்க்கும் பெண்கள் மூன்றாவது முறை கருத்தரித்தால் மெடர்னிடி லீவ் கிடையாது என்று சட்டம் வரப் போகிறதாமே?

! மக்களின் அடிப்படை சுதந்திரத்தைப் பறிக்கிற கொடுமையான சட்டம். மூன்றாவது குழந்தை பெற்றுக் கொள்ளத் தகுந்த காரணம் இருக்கலாம். மேலும் பெண்ணை மட்டும் இதற்குக் காரணமாக்கித் தண்டிப்பது அநீதி. நீதிமன்றத்துக்குப் போனால் சட்டம் ரத்தாகி விடும் வாய்ப்பே மிகுதி.

● மா. பழனிசாமி, கோவை.

? இ. காங்கிரஸ் தலைவர்கள் பதவி விலக வேண்டும் என்று போர்க்கொடி உயர்த்தியிருக்கிறாரே ரங்கராஜன் குமாரமங்கலம்?

! கட்சிக்குள் கருத்துச் சுதந்திரத்தைத் தவறு என்று கூற முடியாது. ஆனால் அதைச் சொல்ல வேண்டிய நேரத்தில் சொல்ல வேண்டிய இடத்தில் சொல்ல வேண்டிய முறைப்படி சொல்ல வேண்டும். இப்படி நடந்து கொள்ளாததால் ரங்கராஜனே பதவி இழக்கும்படியாயிற்று. இப்போது அந்தக் கோபத்தில் மேலும் தவறுகள் செய்கிறார். மன்றைக்குள் இருப்பதைப் பயன்படுத்தலாம்; மன்றைக் கலைத்தை அல்ல.

● நீரஜா மூர்த்தி, பெங்களூர்.

? காந்திஜியைக் கொலை செய்த கோட்





கூட்டம் நடத்தது பற்றி...?
! ஜெர்மனியில் கூட இப்போதும் ஹிட்லரைப் புகழ்ந்து பேசும் கூட்டம் இருந்து வருகிறது. ஜனநாயகத்தில் கருத்துச் சுதந்திரம் என்று இருக்கும் போது சில அசம்பாவிதங்களைத் தவிர்க்க முடியாது. கோட்ஸேயைப் புகழ்ந்து சகோதரர் கோட்ஸே பேசியது இருக்கட்டும்; காந்திஜியை நினைவுகூர்ந்து நம்மில் எத்தனை பேர் பேசுகிறோம், நடந்து கொள்கிறோம், விழா எடுக்கிறோம்? பாஸிடிவ் சிந்தனை - செயல்களை அதிகரிப்பதே நெகடிவ் போக்குடன் போராட வழி.

● ஈ. சிதம்பரம், திருத்தங்கல்.

? 'பொரித்த அப்பளாமுக்கு இருக்கும் டேஸ்ட் சுட்ட அப்பளாமுக்கு உண்டா?' என்ற தரமற்ற கேள்விக்குப் பதிலளிப்பதால் என்ன பயன்?
! கேள்வி எப்படி தரக்குறைவானது ஆகும் என்பது புரியவில்லை. இலக்கியம், சங்கீதம், ஓவியம் போல் சமையலும் ஒரு கலை. அதை ரசிப்பதில் என்ன குற்றம்? ரசனையின்றி அள்ளிப் போட்டுக் கொண்டு பாராட்டாமல் போவதுதான் தவறு.

□ ரூ 25 பரிசு பெறுபவர் :
முத்து ஆனந்த்.
94, பிள்ளையார் கோவில் தெரு.
தோட்டப்பாளையம்,
வேலூர் - 632 004.

தரமான சாலையையோ கூட உருவாக்க முடியவில்லையே? ஒரு மழைக்கு மறைந்து விடுகின்றனவே?
! இப்படிப்பட்ட சாலைகளையும் பாலங்களையும் உருவாக்கினால்தான் புயல், மழைச் சேதம் என்று கூறி நிறைய வரிப் பணம் செலவழிக்கலாம். அந்தப் பணத்தில் பெரும் பகுதியை, கட்சிக்காரர்களே ஏழைகளைச் சென்றடைய விடாமல் ஏப்பம் விடலாம். மறுபடி தரக்குறைவான சாலை பாலங்களை உருவாக்கி, மறுபடி அவை தகர்ந்து போக...

● சித்ரா கிருஷ்ணமூர்த்தி, கும்பகோணம்.

? மனிதநேயம் மண்ணில் இன்னும் மறைந்து விடவில்லை என்பதற்கு ஓர் உதாரணம் கூற முடியுமா?
! பூகம்பத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கோடிக்கணக்கில் திரண்ட உதவி நிதியை விட வேறென்ன உதாரணம் வேண்டும்? மாண்டலின் சீனிவாசனின் ஒரு கச்சேரியே ரூ 84,000 வசூலித்து அளித்திருக்கிறது! "ஹம்ஸத்வனி" செயலர் ராமச்சந்திரன் பவாரிடம் தொகையை நேரில் ஒப்படைத்தார்.

போர்க்கொடி உயர்த்தியிருக்கிறாரே, ரங்கராஜன் குமாரமங்கலம்?

● பலம் கூடியது



● "பலத்த அடி!"



● முகம்மது மீரான், சென்னை.

? பிரஸ்லர் திருத்தம் என்றால் என்ன?
! பிரஸ்லர் என்ற அமெரிக்க செனட் உறுப்பினர் அயல் நாடுகளுக்கான நிதியுதவிக் கொள்கையில் ஒரு முக்கிய திருத்தம் செய்யக் காரணமானவர். 1985 இல் அமுலுக்கு வந்த திருத்திய கொள்கைப்படி, குறைந்தபட்சம் 8 ஆண்டுகள் பாகிஸ்தான் அணு ஆயுத உற்பத்தியில் ஈடுபடாமல் இருக்க வேண்டும். அப்போதுதான் அந்நாட்டுக்கு அமெரிக்கா புதிய நிதியுதவி அளிக்கலாம். இந்த நிபந்தனைக்குப் 'பாக்' கட்டுப்படாத நிலையிலும் இப்போது ப்ரெஸ்லர் திருத்தத்தை ரத்து செய்யப் போவதாக அமெரிக்கா அச்சுறுத்துகிறது.

● ஜோ. ஜெயக்குமார், நாட்டரசன் கோட்டை.

? 'வடமாநிலத் தேர்தல்கள் வகுப்புவாத சக்திகளுக்குப் பெரிய அடி' என்று அர்ஜுன்சிங் கூறியுள்ளாரே?
! அந்த அடியால் உடைபட்ட மூக்குக்கு டாக்டர் ராஜஸ்தான் களிம்பு தடவிக் கட்டுப் போட்டிருக்கிறார்.

● ம. செந்தில்நாதன், மதுரை.

? நம்மால் ஒரு வலுவான பாலத்தையோ,

● வ. கோ. மாதேஸ்வரன், ஈரோடு.

? நாஞ்சில் மனோகரனுக்குக் கழகத்தின் கதவு திறந்தது குறித்து...?
! வை.கோ.வைப் பலவீனப்படுத்தக் கருதி கண்டிப்பைத் தளர்த்ியதில் கலைஞர் - அன்பழகனுக்கும் பலவீனமே. பலம் கூடியது மனோகரனுக்கு மட்டுமே.

மடிமீது தலை வைத்து

ரங்கா அதேநேரத்தில் டிபார்ட்மெண்ட்டல் ஸ்டோரின் கட்டடத்தில் மானேஜர் அறையை ஒட்டியிருந்த ஒரு தனியறையில் இருந்தான். மகா கோபத்தில் இருந்தான். அந்த அறை ஒருவர் வசிக்கக்கூடிய தகுதியுடன் இருந்தது. ஒரு கட்டில். மேஜை நாற்காலி. வார்ட்ரோப். காலுக்குக் கீழே கார்ப்பெட். சுவரில் வால்போஸ்டர். ஆளுயரக் கண்ணாடி. சுவரின் ஒரு பக்கம் அட்டாச்ட் பாத்ரூம்.

அந்த அறை டிபார்ட்மெண்ட்டல் ஸ்டோரின் மானேஜர் அறை. ரங்கா அங்கே முதல் நாள் இரவே வந்து விட்டான். போலீஸ் ஸ்டேஷனில் இருந்து வெளியே வந்தவுடன் அவனுக்கு வேறெங்கும் போகத் தோன்றவில்லை. அதனால் இங்கே வந்து தன் மனக் குமுறல்களை, கோபத்தை எல்லாம் தணித்துக் கொள்ள வேண்டும் என்று வந்தான். மானேஜர் அங்கே இல்லை. அவனுக்கு ஒரு குறிப்புதான் காத்திருந்தது.

'தயவுசெய்து காத்திருக்கவும்.'

ராத்திரி முழுக்கக் கட்டிலில் புரண்டு, புரண்டு படுத்திருந்தான். தூக்கம் வரவில்லை. அவனை கீதா கொலைகாரன் என்று சந்தேகப்பட்டிருக்கிறாள். போலீஸுக்குத் தகவல் சொல்லியிருக்கிறாள். இப்போது அவள் முகத்தில் எப்படி விழிக்க முடியும்? அவளிடம் பொய் மேல் பொய்யாகச் சொல்லி நம்ப வைத்து பாயிண்ட் ஆஃப் நோ ரிட்டர்ன் வரை வந்தபின், எப்படி எல்லாவற்றையும் அழிக்க முடியும்? இதென்ன சிலேட்டுப் பலகையா? யாவற்றையும் அழித்து விட்டுப் புதிதாக எழுத? இது வாழ்க்கை. திரும்பிப் போக முடியாத பாதையில் பயணம் செய்து வந்த பிறகு மறுபடி திரும்பிப் போவது எப்படி?

அவனுடைய கோபமெல்லாம் டிபார்ட்மெண்ட்டல் ஸ்டோர்ஸின் மானேஜர் மேல் திரும்பியது. எவ்வளவு நேரமானாலும் சரி. காத்திருந்து அவரைப் பார்த்து இதற்கு ஒரு மாற்று தெரிந்து கொள்ளாமல் இங்கிருந்து போவதில்லை என்று தீர்மானித்தான்.

சுபா

கதவு தட்டப்படும் ஒலி கேட்டது. எழுந்தான். கதவைத் திறந்தான். ஸ்டோர்ஸின் பணியாள் ஒருவன் நின்றிருந்தான்.

''என்னப்பா?'' என்றான் ரங்கா; குரலில் இருந்த மென்மை அவனுக்கே ஆச்சரியமாய் இருந்தது. மானேஜர் மேல் இருக்கும் கோபம் மற்றவர் யார் மீதும் வெளிப்படாமல் இருக்கிறதே. அதுவே பெரிய விஷயம்.

''மானேஜர் போன் பண்ணாருங்க. இன்னுங் கொஞ்ச நேரத்துல வந்துடறாராம். உங்களை இங்கயே குளிச்சிட்டு டிரஸ் மாத்திக்கிட்டுத் தயாரா இருக்கச் சொன்னாரு'' என்று ஒரு பார்சலை நீட்டினான்.

''இது என்னது?''

''புது பேண்ட், பிரஷ், உங்க சைஸ் டிரஸ் செல்லாம் உங்ககிட்ட கொடுக்கச் சொன்னாரு. அதான்.''

ரங்கா அந்தப் பார்சலைப் பெற்றுக் கொண்டு உள்ளே போனான். ஸ்டோர்ஸின் பணியாள் கதவை இழுத்துச் சாத்திக் கொண்டு போனான்.

ரங்கா குளித்து முடித்து டிரஸ் பண்ணிக் கொண்டு புதுசாகத் தன்னை உணர்ந்த போது, மானேஜர் மேல் இருந்த கோபம் கொஞ்சம் குறைந்திருந்தது. கதவு மறுபடி தட்டப்பட்டு அவன் கதவு திறந்தால் அதே பணியாள். கையில் ஒரு ட்ரே. ட்ரேயில் காலை உணவு.

ரங்கா பசித்திருந்தான். அதனால் மறுப்பு எதுவுமின்றிச் சாப்பிட்டான். சாப்பிட்டு கோப்பையில் இருந்த நல்ல காப்பியைக் குடித்தவுடன் அவன் கோபம் மேலும் கொஞ்சம் வடிந்தது.

''ஹலோ ரங்கா'' என்று குரல் கேட்டுத் திரும்பினான்.

வாசல் கதவு ப்ரேமில் ஒரு திரைப் படத்தில் முக்கியமான காட்சியில் வருகை தரும் குணச்சித்திர நடிகர் போல மானேஜர். ஃப்ரேமின் மீது அவர் ஒருக்களித்து நின்றிருந்ததும், தன்னை இளமையாய்க் காட்டிக் கொள்ள தலையில் ஒரு ஜேம்ஸ்பாண்ட் தொப்பியை அவர் அணிந்திருந்ததும் ரங்காவுக்குச் சிரிப்பை வரவழைத்தன.

''ரைட். உன் மூஞ்சில சிரிப்பைப் பாத்தப்பறம்தான் உங்கூடப் பேசணும்னு நெனைச்சிட்டிருந்தேன். நீ சிரிச்சிட்டே. வெரிகுட். இப்ப என்ன வேணும்னாலும் பேசலாம்.''

''இது நியாயமா?''

''எது?''

''என்னை இப்படி மாட்டி விட்டு வேடிக்கை பாக்கறது?''

''மாட்டி விட்டேனா? ரங்கா. ஒன்னை போலீஸ்ல மாட்டி விட்டது ஒன் அருமைக் காதலி. அந்த அவசரக் குடுக்கை. உணர்ச்சி நெருப்பு. நான் ஒன்னை ஆக்கவா நீ

மாட்னதிலேர்ந்து மீட்டுக்கிட்டு வந்திருக்கேன். நீ கொலைகாரன் இல்லேன்னு கவர்ன்மென்டே ஒன்னை ரிலீஸ் பண்ணியிருக்குன்னா அதுக்குக் காரணம் நான்.''

''அப்ப நான் அவனைக் கொலை பண்ணிட்டதாவே நீங்களும் முடிவு பண்ணிட்டீங்களா? நான் அவனை ஜஸ்ட் தட்டினேன். அவ்வளவுதான். மாட்டிக்கிட்ட பதற்றத்தில அவன்தான் நாக்குக்கடில வெச்சிருந்த காப்ஸ்யூலைக் கடிச்சி உயிரை விட்டுட்டான்.''

''டேக் இட் ஈஸி மை பாய். சும்மா ஒரு பேச்சுக்குச் சொன்னா ஒடனே சொர்னு கோபம் வருதே. நான் ஒன்னை இங்கதான் எதிர்பார்த்தேன். போலீஸ்ல ஒன்னை ரிலீஸ் பண்ணவுடனே, ஒனக்கு நான்தான் அதுக்கான ஏற்பாடு பண்ணவன்ங்கறது தெரிஞ்சிருக்கும்...''

''நான் ஒண்ணும் தாங்க்ஸ் சொல்லிட்டுப் போக வரலை.''

''நான் இன்னும் பேசி முடிக்கலையே. ஒன்னைப் போலீஸ்ல மாட்டி வச்சது அவ. இருந்தாலும் நீ அவளைக் கோச்சிக்காம என்னைத்தான் கோச்சிக்க வருவேன்னு தெரியும். அதனாலதான் ஒனக்கு நோட் வச்சிட்டுப் போனேன். காலைல பிரஷ், பேஸ்ட், டிரஸ்லாம் கொடுத்து டிபனையும் குடுக்கச் சொன்னேன்.''

''நான் வர நேரத்தில என்கிட்ட மாட்டினா எங்க உங்களைக் கடிச்சிச் சாப்ட்ருவேனோன்னு உங்களுக்குப் பயமா இருந்திருக்கும்.''

''ரங்கா. பீ ஸீரியஸ். செத்துப் போனவன்கிட்டேர்ந்து ஒரு பர்ஸ் அடிச்சிட்டு வந்தியே. அதுல எக்கச்சக்கமான மேட்டர். அதைக் கவனிக்கறதுக்கே நேரம் சரியா இருந்திச்சி. கௌம்பு. நானும் நீயும் இப்ப ஒரு எடத்துக்குப் போறோம்.''

''எங்க?''

''நோ. கொஸ்சன்ஸ்.''

ரங்கா, காரை ஓட்டிக் கொண்டிருந்தான். மானேஜர் அவன் பக்கத்தில் உட்கார்ந்திருந்தார். சாலையைப் பார்த்து லெஃப்ட், ரைட் சொல்லிக் கொண்டிருக்க சுமார் பதினைந்து நிமிடப் பயணத்திற்குப் பின் கார் மாம்பலத்தில் ஓர் அமைதியான தெருவில் நுழைந்தது.

''நாலாவது வீடு.''

ரங்கா நாலாவது வீட்டு வாசலில் நிறுத்தினான். தலை வரை உயர்ந்திருந்த காம்பவுண்ட் சுவர்களின் நடுவே ஒளித்து வைக்கப்பட்டது போல் அந்தச் சிறிய வீடு. பழங்காலத்து வீடு என்பது கிராதிக் கம்பிகளின் அமைப்பில் புரிந்தது.

''ரங்கா. நீ வீட்டுக்குள்ள போய்க் காத்திரு. நான் தெருமுனைல ஒரு லெட்டர் போட்டுட்டு வந்துடறேன். வரும் போது காரை நிறுத்தச் சொல்றதுக்கு மறந்துட்டேன்.''

''வீட்ல யார் இருக்காங்க?''

''ஒனக்குத் தெரிஞ்சவங்கதான். போயேன்'' - மானேஜர் அவன் பதிலுக்குக் கூடக் காத்திராமல் காரில் இருந்து இறங்கித் தெருமுனை நோக்கி நடக்க, ரங்கா காம்பவுண்ட் கேட்டைத் திறந்தான். சின்னதாய் ஒரு க்ரீங்க் கேட்டது. ஐந்தடி நடந்து வீட்டு வாசல் படி ஏறி, ஸிட்-அவுட் போல் இருந்த இடத்தை அடைந்து தேடி, அழைப்பு மணியை அழுத்த - உடனே கதவு திறந்து - ''வெல்கம்'' என்றாள் மாலினி.

டிபார்ட்மென்ட்டல் ஸ்டோரில் மானேஜருக்குக் கீழே வேலை செய்பவள். முதல் சந்திப்பில் அவனைப் பார்த்துக் கண்ணடித்தவள். இரண்டாவது சந்திப்பில் உதடுகளைக் குவித்து முத்தமிடுகிற மாதிரி பாவனை செய்து, அசைந்து அசைந்து நடந்து சென்றதை மனத்தில் பதிய வைத்தவள்.

''நான்... நான்...'' என்று ரங்கா தடுமாறினான்.

''என்னை எதிர்பார்க்கல. அதானே? ப்ளீஸ் உள்ள வாங்களேன்.



வாசல்லயே நிக்கணுமா?'' என்று அவன் கையைப் பற்றி உரிமையுடன் இழுத்தாள்.

ரங்கா அதைச் சற்றும் எதிர்பார்க்க வில்லை. ஏறக்குறைய அவள் மேல் மோதி யிருப்பான். மிகச் சிரமப்பட்டு மோதலைத் தவிர்த்தான்.


அவன் உள்ளே நுழைந்ததும் அவள் கதவு சாத்தினாள்.

''உக்காருங்க'' என்றாள்.

சின்ன ஹால். சோஃபா. உட்கார்ந்தான். அவள் அவனுக்குப் பக்கத்தில் அமர்ந்தாள். தெரிந்து நடக்கிறதா, தெரியாமல் நடக் கிறதா என்று ரங்காவால் அறிந்து கொள்ள முடியவில்லை - அவளுடைய முழங்கால் அவன் கால் மீது உரசியது.

''என்ன சாப்பிடறீங்க?''

''ஒண்ணும் வேணாம். நான் மானேஜ ரோட வந்தேன். அவர்தான் வீட்டுக்குள்ள போய் உக்காரு. லெட்டர் போஸ்ட் பண்ணிட்டு வரேன்னு போயிருக்கார். அவர் உங்ககிட்ட என்னவோ பேசப் போனார் போல இருக்கு.'' ரங்கா பேசிய பேச்சில் ஒரு கோர்வை இல்லாமல் இருந்தது. காரணம் மாலினியின் செய்கைகள். கட்டியிருந்த புடைவைத் துணி சன்னமாக இருந்தது. புடைவைத் தலைப்புக் கொஞ்சம் ஒதுங்கி இருந்தது. அதைப் பற்றிய கவலை எதுவு மின்றி, ரங்கா பேசுவதைக் கேட்பதுதான் வாழ்விலேயே முக்கிய செய்கை போல, அவள் முழங்கைகள் இரண்டையும், முழங் கால்கள் மேல் ஊன்றிக் குனிந்து பார்த்ததில் ரங்கா தடுமாறினான். அவள் அப்படி உட் கார்ந்தது அவனைச் சங்கடப்படுத்தியது. அவனால் அவளைப் பார்க்க முடிய வில்லை. அவன் சொன்னதற்குப் பதில் எதுவும் பேசாமல் மாலினி அவனையே பார்த்தாள்.



''டீ. வி. ஏன் சூடா இருக்கு?''
'' 'சன்' டீ. வில படம் பார்த்தேன்!''
- ராதா வாசுதேவன்

''உங்களுக்குக் கல்யாணம் ஆய் டிச்சா?'' - பொறுக்க முடியாமல் ரங்கா கேட்டான்.

''ஏன் கேக்கறீங்க? கல்யாணம் ஆயி ருந்தா என்ன? ஆகலன்னா என்ன? ம்?''

அந்த வாக்கியத்தின் கடைசி எழுத்தாய் வந்த 'ம்'மை அவள் மிகவும் கொஞ்சலுடன் கேட் டாள். அவள் முகம் ரங்காவின் முகத்தை நெருங்கியிருந்தது. ரங்காவை அவள் கண்கள் சற்றும் கூச்சமின்றிப் பார்த்தன. அந்தக் கண்கள் அவனை மெல்ல மெல்லத் தின்று கொண்டிருந்தன.

ரங்கா எழுந்து கொண்டான்.

''ஐயய்யோ. ஏன் எழுந்துட்டீங்க? நான் என்ன தப்பாக் கேட்டுட்டேனாம். உக்கா ருங்க. ப்ளீஸ்.''

''இல்ல பரவால்ல. நான் இந்த பெயிண் டிங்கை வேடிக்கை பாக்கறேனே! மானேஜர் வர வரைக்கும்.''

• அவள் சிரித்தாள். கொஞ்சம் கலகல வென்று. ''நீங்க என்ன கோத்திரம். ரிஷ்ய சிருங்கர் கோத்திரமா? இவ்வளவு கூச்சப் படறீங்களே,'' என்றவள், அவன் எதிர் பாராத தருணத்தில் அவன் மார்பில் அவ ளுடைய உள்ளங்கையைப் பதித்தாள். ''அப்பா. உங்க ஹார்ட் ஏன் இப்படி அடிச் சிக்குது?''

ரங்கா அவளுடைய கையை விலக்கி னான்.

''ரங்கா? ப்ளீஸ் உக்காருங்க. போகா தீங்க. எங்க போறீங்க ரங்கா. நான் உங்க பக்கத்தில வரலை. என் வீட்டுக்கு வந்துட்டு எதுவும் சாப்பிடாம போனா அது என்னை அவமானப்படுத்தற மாதிரி. என்ன சாப்பிட றீங்க ரங்கா. காப்பியா, டீயா, நானா?''

அவள் ஏர்ஹோஸ்டஸின் புத்தகத் தலைப்பை அப்படியே தமிழில் சொன் னாள்.

அவனுக்கு அவள் மீது கோபம் வந்தது. பரிதாபமாயும் இருந்தது. அங்கே தன்னைத் தனியாய் விட்டு விட்டுப் போய் விட்ட மானேஜர் மேல் கோபமாய் வந்தது. ரங்கா சடாரென்று அந்த வீட்டை விட்டு வெளி யேறி வாசலுக்கு வந்து காரில் உட்கார்ந் தான்.

ரங்கா. பொங்காதே. கோபப்படாதே. ஒவ்வொருத்தருக்கு ஒரு குணாதிசயம். அமைதிப்படு. உணர்ச்சிவசப்படாதே.

''ரங்கா. என்ன இங்க உக்காந்திருக்கே. ஒன்னை வீட்டுக்குள்ள இல்ல போகச் சொன்னேன்?''

ரங்கா மானேஜர் குரல் கேட்டுக் காரில் இருந்து இறங்கினான். அனாவசியமாய் மாலினியைக் காட்டிக் கொடுக்க அவன் மனம் ஒப்பவில்லை.

''வீட்டுக்குள்ள புழுக்கமா இருந்தது! அதான் வெளிய வந்துட்டேன்.''

''கமான். உள்ள போலாம் வா. மாலினி ஏதாவது குடுத்தாளா, இல்லியா, சாப்பிட, குடிக்க. உள்ள வா. ஏதாவது ஜூஸ் குடிக்க லாம்.''

''நீங்க போய்ப் பேசிட்டு வாங்களேன். நான் காருக்குள்ளயே இருக்கேன்.''

''இல்ல ரங்கா. நீ உள்ள வரணும். உன் கூடத்தான் நான் பேசணும். அதான் முக்கியம்.''

அவன் அவருடன் உள்ளே நுழைந்தான்.

''ரங்கா. ஐ'ம் ஸாரி'' என்றார் உள்ளே நுழைந்தவுடன் முதல் வாக்கியமாக. ''ஒன்னை நான் ரொம்பவே அலைக்கழிச்சிட்டேன். நீ எங்களுக்கு இத்தனை நாள் ரொம்ப ஹெல்ப்ஃபுல்லா இருந்திருக்கே. அதை என்னால மறக்கவே முடியாது. எங்களால நீ கவிதாகிட்ட கொலைகாரன்னு பேர் வாங்கிட்டே. அதனால கவிதா இனிமே ஒன்னைத் திரும்பிக் கூடப் பாக்க மாட்டான்னு ஒனக்கு ஒரு சந்தேகம் இருக்கும். கவிதாவை நீ எப்படி லவ் பண்ணேன்னு எனக்குத் தெரியாது. மனசால லவ் பண்ணியா, இல்ல இந்த வயசு வேணும், வேணும்னு கேக்குதேங்கறதுக்காக ஒடம்பால லவ் பண்ணியான்னு. என்னால சரியா யூகிக்க முடியல்லே. நான் சொன்னதில ரெண்டாவதை நீ இழந்துட்டேன்னு நெனைச்சி வருத்தப்படக் கூடாதுன்னுதான் நான் மாலினிகிட்ட காம்பன்சேட் பண்ணச் சொன்னேன்.''

''ச்சே.''

''டேய் ரங்கா. என்னை அப்படிக் கேவலமாப் பாக்காதேடா. இது ஒரு சோதனை மாதிரி. ஒனக்குக் காதலா இல்ல ஜஸ்ட் வெறும் கவர்ச்சிதானான்னு தெரிஞ்சிக்க நாங்க வெச்ச சோதனைதான். வேறு எதுவும் இல்ல. நான் முன்னாடியே மாலினிகிட்டே சொல்லிட்டேன். ரங்கா மெண்ட்டலா ரொம்ப ஸ்ட்ராங்குன்னு. ஒன்னைச் சோதிக்கவே வேணாம்னுதான் சொன்னேன். இருந்தாலும் மேல இருக்கறவங்க கேக்கலை. என்னை மன்னிச்சிடு. நீ கெட்டுப் போறதை நானே விரும்புவேனா? நீ பொறந்ததிலேர்ந்து நான் பாத்துப் பாத்து வளர்த்தவனாச்சே நீ. எனக்குத் தெரியும் ரங்கா ஒன்னைப் பத்தி. இன்னொரு விஷயம். மாலினியைத் தப்பா எடுத்துக்காதே. அவ நம்ப ஆள்தான். வாழ்க்கைல அவளுக்கு எதுவுமே வேணான்னு நம்ப கூட இருக்கா. அதுக்கு வேற காரணங்கள் இருக்கு. அதெல்லாம் ஒனக்கு வேணாம். அனாவசியம். கடைசியா நீ ஒரே ஒரு வேலை செய்யணும். செய்றியா? நீ செய்வே. அதைப் பத்திச் சொல்லத்தான் நான் ஒன்னை இங்க கூட்டிட்டு வந்தேன்.''

''எனக்கு எதுவும் வேணாம். என்னை விட்டுடுங்க. நான் போறேன்! இப்பவே என்னை சபரி முழுக்கத் தேடிக்கிட்டிருப்பாங்க. கவிதா வேற என்னை கொலைகாரனா நெனைச்சிட்டிருக்கா. அவளை நான் எப்படி நம்ப வைப்பேன்னே தெரியலை.''

''அதுக்குத்தான் நான் ராத்திரி முழுக்கக் கத்தினேன் ரங்கா. இந்தா. இந்த லெட்டரைப் பார்.''

ரங்கா அந்தக் கடிதத்தைப் பார்த்தான். அசுவாரசியமாகப் பார்த்தவன், கடிதத்தில் இருந்த முத்திரைகளையும், எழுதப்பட்டிருந்ததையும் படித்து விட்டு முகம் மலர்ந்தான்.

''போதுமா?'' என்று கேட்டார் அவர்.


''ம்'' என்றான் சந்தோஷமாய்.

''நான் சொல்ற வேலையைச் செய்றியா?''

''நிச்சயமா''

மானேஜர் ஒரே சீரான குரலில் சொல்லத் தொடங்கினார்.

செய்யும் காரியம் எதுவாக இருந்தாலும் அதைத் தன்னலமற்றதாக மாற்றிக் கொள்வதே, பெருமையை விரும்பும் ஒவ்வொரு மனிதனும் பயில வேண்டிய முதல் மனப் பயிற்சி.



''பொங்க ஓக்கு ஐ.வி. யிலே என்ன பட்டி மண்டபம்?''

''பெண் பார்க்க வரு பவர்களைப் பெரிதும் விரட்டுவது பெண்ணின் பாட்டா? அம்மா செய்யும் ஸ்வீட்டா?''

- ஆர். பி. சாரதி

மானேஜர் சொன்ன அந்த வாக்கியம், ரங்காவின் மனத்தில் திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டே இருந்தது. அவன் அந்த வீட்டிலிருந்து வெளியே வந்ததோ, ஆட்டோ பிடித்து சபரிக்கு வந்து சேர்ந்ததோ, கவிதா உட்பட அத்தனை பேரும் அவனை வரவேற்றதோ, விசாலிப் பாட்டி ஒரு படி மேலேயே போய் ஆரத்தி கரைத்து அவன் நெற்றியில் திலகமிட்டதோ, அவன் மனத்தில் பதியவே இல்லை.

திரும்பத் திரும்ப அந்த வாக்கியம்தான்.

''ரங்கா'' என்றாள் கவிதா.

ரங்கா திரும்பிப் பார்த்தான்.

''கவிதா. ப்ளீஸ். போய்டு. ஒன்னால என் வாழ்க்கைல இருந்த நிம்மதியே போய்டிச்சி. ஐ ஹேட் யூ. உன்னை நான் பரிபூரணமா வெறுக்கறேன். போய்டு. என்னை விட்டு'' என்றான் கஸ்தூரிரங்கன்.

(தொடரும்)

உஷா மணியன்

தாரகைகள் வாரியிறைக்கப்பட்ட அந்த டிசம்பர் மாத இரவு வானம், தாரிணியைப் பார்த்துக் கண்சிமிட்டியது. தனது ஏழாவது மாடி ஃப்ளாட்டின் பால்கனியில் நின்று கொண்டு, அவள் தன்னை மறந்த ரசனையில் மூழ்கியிருந்தாள். தூரத்தில் சாந்தாக்ரூஸ் விமான நிலையத்தின் 'ரன்வே' விளக்குகள் கோலமாக மிளிர்ந்தன. பச்சை - சிவப்பு விளக்கு விழிகளைச் சிமிட்டிய வாறு பிரம்மாண்டமான விமானங்கள் வந்து இறங்கிக் கொண்டிருந்தன. சில, மெல்ல மேலே எழுந்து, மிதந்து வான வெளியில் மற்றுமொரு நட்சத்திரப் புள்ளியாக மறைந்தன. வெகு அருகே, எஸ்.என்.டி.டி. கல்லூரி ஹாஸ்டலின் அறைகளில் விளக்குகள் பளிச்சென்று மின்னிக் கொண்டிருந்தன. தூர்தர்ஷனில் 'குலாம் அலி' காதலாகிக் கசிந்து கொண்டிருந்தார்.

என் இசையிலேயே நான் கட்டுண்டிருக்கிறேன் -

உன்னைப் போலவே...

ஓ... எனது போன ஜென்மத்தின் இனிய துணையே

இப்பொழுது நான் தனியாகி விட்டேன் -

அழ வேண்டும் போலிருந்தது. உள்ளே சென்று ஷோ கேஸிலிருந்து அந்த வெள்ளி விக்ரகத்தைக் கையி லெடுத்து, இதயத்தோடு அணைத்துக் கொண்டாள். மனசு ஒரு மாதம் பின்னோக்கி ஓடியது -

காலை பதினோரு மணிவாக்கில் இவள் துணிகளுக்கு இஸ்திரி போட்டுக் கொண்டிருந்தாள். பக்கத்து ஃப்ளாட் மிஸஸ் மல்ஹோத்ராவின் சமையலறையிலிருந்து அந்த பஞ்சாபி பாடல் ஒலித்தது. இதே பாட்டை மாடியிலிருக்கும் மிஸஸ் சோப்ரா பாடி அவள் கேட்டிருக்கிறாள். கண்ணனைப் பற்றிய ஒரு காதல் நிறைந்த பாடல். மிஸஸ் சோப்ரா அருமையாகப் பாடுவாள். ஆனால் இப்போது இதே பாடல் - மிஸஸ் மல்ஹோத்ராவின் தொண்டையில் சிக்கித் தவித்துக் கொண்டு, விடுபட்டால் போதும் என்ற வேகத்துடன் தாறுமாறாக ஓடி, அபஸ்வரங்களாகப் பதறியடித்துக் கொண்டு வெளியே வந்தது. தாரிணிக்குத் தன்னை யாரோ மூச்சுத் திணற இறுக்கு வது போன்ற பிரமை ஏற் பட்டது. இஸ்திரிப் பெட்டியின் சுவிட்சை அணைத்து விட்டு, டேப்ரிகார்டரில் லால்குடியின் தேஷ் தில்லானாவைச் சுழல விட்டாள். மெல்லிய நாத அலைகள் ஊதுவத்தியின் புகைச் சுருள்களாக மிதந்து வந்து, தன்னைச் சூழ்ந்து கொண்ட பிறகுதான் உடலும் மனமும் ஒரு நிலைக்கு வந்தன.

சிறிது நேரத்தில் வாசல் மணி ஒலித்தது.

மிஸஸ் மல்ஹோத்ரா நின்று கொண்டிருந்தாள்.

''தாரிணி - உன்னிடம் தக்காளி இருந்தால் இரண்டு கொடேன். சஞ்சய் யாரோ ஃப்ரெண்டை சாப்பிட அழைத்துக் கொண்டுவர்றானாம். பாலக் பனீர் பண்ணணுமாம்''

ஃப்ரிஜ்ஜிலிருந்து மூன்று பழங்களை வெளியிலெடுத்தவாறே கேட்டாள் -

''ஆமாம் - நீங்கதான் பாடிண்டிருந்தேளா?''

''அட உனக்கும் கேட்டதா? நாலு வருஷம் சாஸ்திரிய சங்கீதம் படித்தேன். எனக்குப் பாட்டில் அவ்வளவு நாட்டம் கிடையாது. திருமணத்துக்குப் பிறகும் எனது மாமியார் நான் இசையைத் தொடர வேண்

மாணவியிலும்

டும் என்று விரும்பினாள். இன்ஃபேக்ட், இவர் வீட்டில் எல்லோருமே பாடுபவர்கள். சில சமயம் மனசு லேசாக இருக்கும் போது இப்படித்தான் பாடுவேன். மனசுல தோணினது. வாயில வந்தது...''

அவள் போய் விட்டாள். மனத்தளவில் எதையோ முடுக்கி விட்டுப் போய் விட்டாள்.

தாரிணி மெல்ல கூறிக் கொண்டாள் :

'எனக்கும் பாட வேண்டும் போலிருக்கும். இன்றல்ல. நேற்றல்ல. ஜென்ம ஜென்மமாக...'

பள்ளி - கல்லூரி நாட்களில் அவள் பங்குபெறாத இசைப் போட்டிகளோ நிகழ்ச்சிகளோ இருந்ததில்லை. பக்திப் பாடல், சாஸ்திரீய சங்கீதம், சினிமாப் பாடல் - தமிழ், மலையாளம், இந்தி - எந்த மொழியானாலும் - பரிசு அவளுக்குத்தான். பள்ளியின் இசைக் குயில் என்று அவளுக்குப் பட்டம் சூட்டிய நாள், இன்றும் நினை



ஒரு பூபாளம்

வின் ஓர் அலையில் நறுமணத்துடன் மிளிர்ந்தது. சங்கீதத்துக்கு மொழி கிடையாது. அறிவுபூர்வமான எல்லைகளுக்குள் சங்கீதத்தைக் கட்டுப்படுத்தக் கூடாது. இசையைப் புரிந்து கொள்ள வேண்டாம். இதயத்தால் உணர்ந்து கொண்டால் போதும்.

ஏழு வருடங்கள் வீணை பயின்றது இன்றும் கனவு போல் நினைவில் வந்தது. வீனஸ் காலனியில் ராமநவமி இசை விழாவில்... இரவு பதினோரு மணிவரை விழும் சித்திரை மாத வானின் கீழ் அமர்ந்து கொண்டு சிட்டிபாபுவின் வாசிப்பில் உடலும் உள்ளமும் பாகாய் உருகியது...

ஆனால் 'இன்டர் கலேஜியட்' இசைப் போட்டிகளுக்குள் அடங்கிப் போய் விட்டது இவள் இசை. திருமணத்துக்குப் பிறகு வீணை வாசிப்பதும் மெல்ல மெல்ல மறைந்தது. அப்படியும் ஒரோர் சமயத்தில் ஸ்வரங்கள் அடி மனத்திலிருந்து பொங்கி யெழுந்ததுண்டு. குழந்தைகள் மெல்லப் போகத் துவங்கின போது, முதல் அடி நடை எடுத்து வைத்தபோது - எல்லாம், நாத அலைகள் நெஞ்சில் மோதி எழும்! அதிகாலை அரையிருட்டில் சமையலறையின் தனிமையில் ரஞ்சனியை விஸ்தாரமாக ஆலாபனை செய்ய மனம் ஏங்கும். மோர் கடையும் வேளைகளில் மனம் மெலிதாக 'சொககா மிருதங்க தாளமு' என்று முனகும். இஸ்திரிப் பெட்டி, வேட்டி மீதும் சட்டைகள் மீதும் முன்னும் பின்னும் நகரும் வேளைகளில் 'சீதம்ம மாயம்ம...' என்று வாய் மெல்ல இசைக்கும்.

'நேஷனல் ஜியோகிராஃபிக் மேகஸினில்' இமயமலைச் சாரலில் மலர்களைப் பார்க்கும் போது - அங்கு மானசீகமாக அமர்ந்து கொண்டு, மெய்ம் மறந்து பூர்விகல்யாணியை இசைத்ததுண்டு - சுற்றிலும் உயர்ந்தோங்கி நின்ற தேவதாரு மரங்கள் பக்கவாத்தியம் இசைக்க!!

புகுந்த வீட்டில் கல்யாணி அத்தைக்கு இசை என்றால் எட்டிக்காய். தாரிணியின் கணவன் கார்த்திகேயனை எடுத்து வளர்த்ததெல்லாம் கல்யாணிதான். பெயர் மட்டுமே கல்யாணி. அந்த ராகத்தின் இனிமை, மென்மை, குழைவு... ஒன்றும் இருந்ததில்லை.

ஒரே ஒரு நாள்... இன்றும் தாரிணியின் மனத்தில் அச்சுப் போல் நிலைத்து விட்டிருந்தது.

சப்பாத்திக்கு மாவு பிசைந்தவாறு தன்னை மறந்து ஒரு பாடலைப் பாடிக் கொண்டிருந்தாள். சின்னவள் மைதிலி பிரமிப்புடன் அவள் பாடுவதைப் பார்த்துக் கொண்டிருக்க, கல்யாணியின் குரல் கர்ண கடூரமாக ஒலித்தது-

''இதென்ன '-----யா' வீடாட்டம். பாட்டும் கூத்தும்!!''

அன்று தாரிணி பாடுவதை நிறுத்தினாள். மனத்தில் அப்படியொரு வைராக்கியம்! மனத்தில் வெகு நாட்கள் இந்தக் காயம் ஆறாமல் வலித்தது. இன்று கல்யாணி அத்தை இல்லை... போய்ச் சேர்ந்து ஒரு வருடமாகி விட்டது. இப்பொழுது இந்த பம்பாய் நகரவாசம். வருடக் கணக்கில் சிறையிலடைக்கப்பட்டு விடு



தலை பெற்ற பறவை போல் மனது படபடத்தது. இனிமேல்... எஞ்சியிருக்கும் சில நாட்கள் எனக்கென்று வாழ வேண்டும்... பாட வேண்டும்...

பெட்டிக்கடியில் கிடந்தப் பாட்டு புத்தகத்தை வெளியிலெடுத்தாள். நாற்பது, ஐம்பது, அறுபதுகளில் பிரபலமாயிருந்த இந்தி திரைப்படப் பாடல்கள். பாடினாள். கேசட்டுகள் வாங்கினாள். இதற்கிடையே அந்த விளம்பரம் கண்ணில் பட்டது.

''சஞ்சீவ் குமார் மெமோரியல் தியேட்டர்' நடத்தும் மூன்றாவது அகில இந்திய இசைப் போட்டி.''

கல்லூரி நாட்களில் பாடியது போல் மேடையில் பாட வேண்டும் என்ற ஆசை தலைதூக்கியது. முகவரியைப் படித்தாள். உடனே ஆட்டோவில் ஏறிக் கொண்டு அந்த இடத்தை அடைந்தாள்.

கிஷோர் ஸாஹினி - இசை வகுப்புகள் நடத்துபவர், இந்தப் போட்டியின் நிர்வாக இயக்குனர்.

''யெஸ் மேடம்?''

''டைம்ஸ் ஆஃப் இந்தியாவில் விளம்பரம் பார்த்தேன். பாட்டுப் போட்டியில் பங்கேற்பதற்காக...''

''ஓ! யெஸ்... மேஜை மீதிருந்த விண்ணப்பத்தாளை நீட்டினார். ''பாடப் போகிற பாட்டின் பெயரை ஒரு வாரத்துக்குள் எங்களுக்குத் தொலைபேசி மூலம் தெரியப்படுத்த வேண்டும். ஏனென்றால் போட்டி ஃபுல் ஃப்ளெஜ்டு ஆர்கெஸ்டிராவுடன் நடைபெறும்.''

அறுபது ரூபாய் நுழைவுக் கட்டணத்தைக் கொடுத்து விட்டு, வெளியே வந்த போது மனசு துள்ளிக் குதித்தது.

'இத்தனை வருஷத்துக்கப்புறம் - இத்தனை வயசுக்கு மேல். இன்னமும் இப்படி ஓர் ஆசையா?...'

'இசைக்கு வயது கிடையாது. இதயத்துக்கும்தான். எனக்கு இன்றைக்கும் இருபத்தியொரு வயதுதான்' என்று கூறிக் கொண்ட போது எதிர்காலம் பிரகாசமாகத் தெரிந்தது...

''இன்று - பிரபல இசைக் குயில் தாரிணி அவர்களின் இசை மழை...'' பிறகு? இந்தக் கற்பனைகள் தொடர்ந்தன... சாதகமும்தான்!

சரியாக இருபத்தியொரு நாட்களுக்குப் பிறகு...

ஹோமியோபதி காலேஜ் ஆடிட்டோரியம். நூற்றி அறுபது போட்டியாளர்கள். எல்லோருமே கல்லூரி மாணவ - மாணவிகள். ஒரு சில யுவதிகள். இவள் மட்டுமே நாற்பதுக்கு மேல்! வாழ்க்கையின் மாலைப் பொழுதில்.

முதல் வரிசையில் இசை டைரக்டர் கய்யாம்; லக்னௌ கரானாவைச் சேர்ந்த மெஹருன்னிஸா பேகம்; அகமதாபாத் இசைக் கல்லூரியின் புரொபசர் பரத்குமார்; நைன்த் சேனல் மியூசிக் ரெகார்டிங் ஸ்டூடியோவின் அதிபர் - இவர்கள்தான் ஜட்ஜ்"கள்.

மனத்தில் லேசான பயம். தயக்கம். கார்த்திகேயன் உற்சாகப்படுத்தினான்.

இருபத்தி ஐந்தாவதாக அவளைப் பாட அழைத்தார்கள். 'லேகின்' திரைப்படத்தில் லதா மங்கேஷ்கர் டிம்பிள் கபாடியாவுக்காகப் பாடிய பாடல். சாஸ்திரீய அடிப்படையில் அருமையான இசைப் பின்னணியுடன்.


கையில் மைக்கை எடுத்தவள், அரங்கைப் பார்த்தாள். நிரம்பி வழிந்தது. கண்களை லேசாக மூடிக் கொண்டாள். பின்னணியில் சிந்தஸைஸர் ஏங்கியது. ஆவி வடிவில் டிம்பிள் தனது காதலனைத் தேடி ஏக்கத்துடன் அலைகிறாள். தாரிணியின் மனத்திலும் வருடக்கணக்கில் தேங்கிக் கிடந்த தாகம், ஆர்வம் எல்லாம் குரலில் ஏக்கமாக மலர்ந்து, குழைந்து, நாத அலைகளாக எழும்பி அரங்கைச் சிறை கொண்டது.

இசைக்குத் தொடக்கம், முடிவு.. இரண்டுமே இல்லை. இந்த அகண்ட பிரபஞ்சத்தில் அது நாத அலைகளாகச் சஞ்சரித்துக் கொண்டேயிருக்கும். இதயத்தில் கருணை வேண்டும். அன்பு வேண்டும். இளமை வேண்டும். இசையின் வடிவம் இதுதான்.

அந்த அகன்ற அரங்கில் முதல் பரிசு பெற்றதாக அவள் பெயர் வாசிக்கப்பட்ட போது - இப்படித்தான் எண்ணத் தோன்றியது. வாழ்வின் மாலைப் பொழுதில் தோன்றிய பூபாள ராகம்...

கையிலிருந்த - வீணையுடன் கூடிய சரசுவதி - விக்கிரகத்தை மறுபடியும் 'ஷோகேஸில்' வைத்தாள். அவள் பெற்ற பரிசு. இந்த உலகில் உள்ள எல்லோரையும், எல்லாவற்றையும் வாரி அணைத்துக் கொள்ள வேண்டும் போலிருந்தது.

உள்ளே சென்று சமையலறை ஜன்னலை மூடும் போது, மிஸஸ் மல்ஹோத்ராவின் கட்டைக் குரல் குருமான் சிங்கின் பாங்க்ராப் பாடலை இசைப்பது கேட்டது. அதிலும் கூட ஓர் இனிமை இருப்பதாகப் பட்டது.



"நேத்து கல்யாணக் கச்சேரியிலே காபி ராகம் எப்படி?"

"கல்யாணக் காபிதான்!"

- ஆர்.பி. சாரதி.

நீதியின் காவலர் இசையின் ஆர்வலர்!

திருக்கோடிகாவல் கிருஷ்ணய்யர் சங்கீத வித்வான்களில் முக்கியமான ஸ்தானம் வகித்தவர். பேச்சில் ஒளிவுமறைவு என்பது அவருக்குக் கிடையாது... அவரை ஒரு பெரிய மிராசுதார் ஒரு கல்யாணத்தில் தனிக் கச்சேரிக்கு வரவழைத்திருந்தார்.

கிருஷ்ணய்யர் கச்சேரி ஆரம்பித்து இரண்டு மூன்று கீர்த்தனங்கள் வாசித்தார். அப்போது மிராசுதார் அவரைப் பார்த்து, "கொஞ்சம் மாளவி ராகம் ஆலாபனம் நடக்கட்டும்!" என்றார்.

"எனக்கு அந்த ராகம் வராது" என்றார் கிருஷ்ணய்யர்.

"மாளவி ராகம் தெரியாத வித்வான் என்ன வித்வானய்யா?" என்றார் மிராசுதார்.



● டி.எல்.வி. : 'சரஸ்வதி'

கிருஷ்ணய்யர் பதில் சொல்லாமலே கச்சேரியை நடத்தி முடித்தார். மிராசுதார் உடனே அவருக்கு உபசார வார்த்தைகள் சொன்னார்.

"கிருஷ்ணய்யரே, பத்து வருடத்திற்கு முன் உம்முடைய கச்சேரியைக் கேட்டிருக்கிறேன். அப்போதைக்கு இப்போது உங்கள் பாட்டு ரொம்பவும் அபிவிருத்தியடைந்திருக்கிறது" என்றார்.

"என் பாட்டு அப்போதும் இப்படித்தான் இருந்தது. இவ்விடத்திற்குப் பத்து வருடத்தில் ஞானம் விருத்தியடைந்திருக்கிறது. இவ்விடம் கல்கத்தா போயிருந்ததுண்டோ?" என்று கேட்டார் கிருஷ்ணய்யர்.

"நான் கல்கத்தா போனதில்லை" என்றார் மிராசுதார்.

"கல்கத்தா போகாத பிரபு என்ன பிரபு!" என்றார் கிருஷ்ணய்யர்.

- இந்தச் சுவையான சம்பவத்தை 1938 ஆம் வருட ஆனந்த விகடன் தீபாவளி மலரில் எழுதியவர் டி.எல். வெங்கடராமய்யர். "சில சங்கீத வித்வான்கள்" என்ற கட்டுரையில்தான் இச் சம்பவத்தைக் குறிப்பிட்டிருந்தார் வெங்கடராமய்யர்.

வழக்கறிஞராகத் தொடங்கி, உச்சநீதிமன்ற நீதிபதியாக உயர்ந்து, பல சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்புக்களை வழங்கியுள்ள டி.எல்.வி., கர்நாடக இசையிலும் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்தார். பல கலைஞர்களிடம் நெருங்கிப் பழகும் வாய்ப்பும் அந்த வட்டாரத்தாருக்கே உரிய தனியானதொரு நகைச்சுவை உணர்வும் அவருக்கு அமைந்திருந்தன.



அவரிடம் நல்ல பேர் வாங்க எல்லா வித்வான்களுக்குமே ஆசைதான். எனினும் ஓர் இளம் பாடகி தன் திறமையை அவர் முன் நிரூபிக்க முயன்ற போது பீறிட்டுக் கிளம்பியது அவர் நகைச்சுவை.

'எந்தரோ மகானுபாவுலு' என்ற கீர்த்தனையைத்தான் வெங்கடராமய்யரின் முன் பாடினாள் அப் பெண். இடையே 'நெரவல்' ஆகி 'எந்தரோ... எந்தரோ...' என்று தடுமாற டி.எல்.வி. பளிச்சென்று அடித்தார்.

" 'எந்த ரோ? எந்த ரோ?'ன்னு என்னைக் கேட்டா.....? நீ முதல்ல



● டி.கே.பி : நெகிழச் செய்யும் நினைவுகள்

ஃபர்ஸ்ட் ரோவில் உட்கார்ந்து நிறையக் கச்சேரியெல்லாம் கேளு.. புரியறதா...''

- இந்த நிகழ்ச்சியை நினைவுகூர்ந்தவர் டி.எல்.வி. குடும்ப நண்பரான கே. சுவாமிநாதன்.

இதே போன்ற வேறு சம்பவங்களை நினைவுகூரும்படி டி.கே. பட்டம்மாளிடம் கேட்டோம். டி.எல்.வி.யிடம் தீக்ஷிதர் கீர்த்தனைகள் பலவற்றைக் கற்றுக் கொண்டவர் டி.கே.பி.

பழைய நினைவுகளில் மூழ்கிய பட்டம்மாளின் கண்கள் குளமாகி விட்டன. ''அவர் சிரிக்கச் சிரிக்கப் பேசுவதிலும் எழுதுவதிலும் வல்லவர். ஆனால் இப்போது எனக்கு நெகிழ்ச்சியான சம்பவங்கள்தான் நினைவுக்கு வருகின்றன. கச்சேரிகள் அதிகம் செய்யாவிட்டாலும் அவர் மகா மேதை. குருவாயூரில் நாராயணீயம் பாடச் சொல்லி என்னை அழைத்த போது அவர்தான் அழகாக, பொறுமையாக, பதம் பிரித்து, அர்த்தம் விளக்கி, திருத்தமாகப் பாடும் வகையில் சொல்லிக் கொடுத்தார்.

''1970இல் அவர் மியூசிக் அகாடமியின் தலைவராக இருந்த போது எனக்கு 'சங்கீத கலாநிதி' பட்டம் கிடைத்தது. அவருக்கு உடம்பு சரியில்லாததால் விழா நிகழ்ச்சிக்கு வரவில்லை. பட்டம் பெற்ற கையோடு அவர் வீட்டுக்குப் போய் ஆசி பெற்று வந்தேன். அன்று நள்ளிரவே அவர் காலமாகி விட்டார். அதை நினைத்தால் இப்போது கூட சங்கடமாக இருக்கிறது...''

- இப்படி நெகிழ்ந்து போய்ச் சொன்ன டி.கே.பி. தம்மைச் சுதாரித்துக் கொண்டு, ''வழக்கறிஞரான டி.எல்.வி.யை நீதிமன்ற வட்டாரங்களில் 'சரஸ்வதி' என்று அழைப்பார்கள். அவ்வளவு சொல் வல்லமை உண்டு அவருக்கு. அந்தப் பட்டம் இசைத் துறையில் அவர் செய்தவற்றுக்கும் பொருந்தும். இன்று தீக்ஷிதர் கீர்த்தனைகள் பிரபலமாகப் பாடப்படுகின்றன என்றால் அதற்கு அவர்தான் காரணம்...'' என்றார்.

முத்துஸ்வாமி தீக்ஷிதர் கீர்த்தனைகளில் தீவிர ஈடுபாடு கொண்டிருந்த டி.எல்.வி., தீக்ஷிதர் நூற்றாண்டு விழாவின் போது மியூசிக் அகாடமியின் செயலாளராக இருந்து விழாவைச் சிறப்பாக நடத்தி வைத்தார். இவ்வாண்டு டி.எல். வெங்கடராமய்யரின் நூற்றாண்டு.

சங்கீதத் துறையுடன் சேர்ந்து நீதித் துறையும் போட்டி போட்டுக் கொண்டு அவரை நினைவுகூர்ந்து பெருமிதம் கொள்கிறது.

- மாலதி சந்திரசேகரன்

நாற்சந்தியிலும் ஒரு நளின நாடகம்



மைக்கேல் ஜாக்ஸனுக்குப் போட்டியாகத் தோன்றியிருக்கிறார், மயிலை போலீஸ் ஸ்டேஷனைச் சேர்ந்த டிராஃபிக் கான்ஸ்டபிள் டி.எம். ராஜகோபால். இவர் வாகனங்களை நாற்சந்திகளில் நிறுத்துவதும் போகச் சொல்வதும் எல்லாமே ஒரு நளின நடனமாகத்தான் இருக்கிறது. அந்த ஆடல் ரசனையில் ஆழ்ந்து, வாகனத்தைக் கிளப்பிச் செல்ல மறக்கும் ஓட்டுனர்களும் உண்டு! ராஜகோபாலின் போக்குவரத்துக் கட்டுப்பாடு நடனத்தால் கவரப்பட்ட கார்ட்டூனிஸ்ட் மதிகுமார், சில நெருக்கடி நிலைகளில் அவர் எப்படி நடனமாடலாம் என்று கற்பனையைக் கட்டவிழ்த்து விடுகிறார்.



பணம், பங்கு மார்க்கெட் வரை பாயும்!

INDIAN RAILWAY FINANCE CORP. LTD.

ரயில்வே இலாக்கா அரசின் ஓர் அங்கம் தான் என்றாலும் அதன் விஸ்தரிப்பு, புதுப்பித்தல், மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்குத் தேவையான பணம் முழுவதையும் அரசு ஒதுக்கீடு செய்ய முடிவதில்லை. எனவே ரயில்வேயின் தேவைகளுக்கு ஏற்ப, ரயில்வே ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் அவ்வப்போது கடன் பத்திரங்களை வழங்குகிறது. தற்போது வெளிவரவிருக்கும் கடன் பத்திரங்கள் இரு வகை.

முதலாவது வகை கடன் பத்திரத்துக்கு 16 சதம் வட்டி கிடைக்கும். ஆனால் வருமான வரி விலக்கு கிடையாது. ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு அசல் திருப்பித் தரப்படும். தனி நபர்கள் எனில், விரும்பினால் மூன்று ஆண்டுகளிலேயே கடன் பத்திரங்களைச் சமர்ப்பித்து, அசலைத் திரும்பப் பெறலாம். இரண்டாவது ரக கடன் பத்திரத்துக்கு வட்டி 10.5 சதம்தான். ஆனால் இதற்கு முற்றிலுமாக வருமான வரி விலக்கு உண்டு. இந்தக் கடன் ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு திருப்பித் தரப்படும்.

குறைந்த வருவாய் உடையவர்கள் முதல் ரகத்தையும் ஏற்கெனவே வருமான வரி செலுத்தி வருபவர்கள் இரண்டாவது ரகத்தையும் தேர்ந்தெடுக்கலாம். குறிப்பிட்ட கால இடைவெளியில் வட்டி வந்து கொண்டேயிருக்கும்.

KIRLOSKAR FERROUS INDUSTRIES

பூனாவில் செழித்தோங்கி வளர்ந்து வரும் கிர்லோஸ்கர் குரூப் நிறுவனங்கள் மிகவும் புகழ்பெற்றவை. குறிப்பாக ஆயில் இஞ்சின்கள் விவசாயிகளிடையே சிறந்த வரவேற்பைப் பெறுகின்றன. தற்போது தொழிலகங்களுக்குத் தேவைப்படும் பல்வேறு இரும்பு வார்ப்படங்களைத் தயாரித்தளிக்கப் புதிய நிறுவனத்தை கிர்லோஸ்கர் குரூப் தொடங்குகிறது. ரெய்ச்சூரில் (கர்நாடகா) நிறுவப்படவிருக்கும் இந்த நிறுவனத்துக்குப் பெருமளவில் முதலீடு தேவை. நிதி நிறுவனங்கள் பல ரூ. 88 கோடி வரை கடன் தந்து உதவுகின்றன. திட்டத்தைத் தொடங்குகிறவர்களே ரூ. 24 கோடி முதலீடு செய்கின்றனர். பொது மக்களுக்கு ரூ. 24 கோடி பெறுமானத்துக்குப் பத்து ரூபாய் பங்குகள் விநியோகிக்கப்படுகின்றன. நிறுவனத்தின் வளர்ச்சி வாய்ப்புக்கள் நன்றாகவே உள்ளதால் பங்குகளின் மதிப்பு ஒரு சில ஆண்டுகளில் கணிசமாக உயரும் என்று எதிர்பார்க்கலாம். நீண்ட கால நோக்கில் சிறந்த முதலீடு.

HOT LINE GLASS LTD.

டெலிவிஷனில் படம் தெரியும் கண்ணாடிக் குடுவைப் பகுதிக்கு, ''பிக்சர் டியூப்'' என்று பெயர். கறுப்பு - வெளுப்பு டீவிக்கு ஏற்ற பிக்சர் டியூப் தயாரிக்க இந்த நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. தாய்வான் நாட்டு நிறுவனம் ஒன்றின் தொழில் நுட்ப ஒத்துழைப்பு கிடைத்துள்ளது. ரூ. 120 கோடி முதலீட்டில் ஐ.டி.பி.ஐ. மற்றும் வங்கிக் கடன்கள் ரூ. 40 கோடி. நிறுவனத்தைத் தொடங்குகிறவர்கள் ரூ. 30 கோடி முதலீடு செய்ய, பாக்கி ரூ. 50 கோடிக்குப் பொது மக்களின் ஆதரவு கோரப்படுகிறது. ஒவ்வொன்றும் ரூ. 10 மதிப்புள்ள 5 கோடி பங்குகள் விநியோகிக்கப்படவுள்ளன. காலப் போக்கில் பங்குகளின் மதிப்பு கணிசமாக உயரும் என்றே கருதலாம்.

BENGAL TEA & FABRICS LTD.

பெயருக்கு ஏற்ப இந்த நிறுவனம் தேயிலை மற்றும் ஜவுளி உற்பத்தியில் ஈடுபட்டுள்ளது. வெற்றிகரமாகச் செயல்பட்டு, அவ்வப்போது போனஸ் ஷேர்கள் வழங்கியுள்ளது. போனஸ் ஷேர்கள் மூலமே மூலதனம் மும்மடங்கு உயர்ந்துள்ளது! அஸ்ஸாமில் எட்டு தேயிலைத் தோட்டங்கள் இந்த நிறுவனத்துக்குச் சொந்தம். தற்போது ரூ. 42 கோடி திட்டத்தில் ஒரு நூற்பாலை நிறுவி, விரிவாக்கம் செய்ய எண்ணுகிறது. ஏற்கெனவே பங்குதாரர்களாக உள்ளவர்களுக்கு உரிமைப் பங்குகள் வழங்குகிறது. நிதி நிறுவனங்கள் பல ரூ. 18 கோடி கடன் தருகின்றன. தவிர, பொது மக்களுக்குப் பத்து ரூபாய் பங்குகள் ரூ. 30 கூடுதல் விலைக்கு வழங்கப்படுகின்றன. இவ்வாறு ரூ. 8.63 கோடி மூலதனம் திரட்ட திட்டம். பத்து ரூபாய் பங்கை ரூ. 40 தந்து பெற வேண்டியிருக்கிறதே என்று யோசிப்பவர்கள் தற்போது இந் நிறுவனத்தின் பங்கு, மார்க்கெட்டில் ரூ. 54க்கு விலைபோகிறது என்பதைக் கவனிக்க வேண்டும். மேலும் உயரவே வாய்ப்பு.

- வி. கோபாலன்




C.D.: இளமை மாறாத இசைத் தட்டு!

எல்லா காஸட், இசைத்தட்டு நிறுவனங்களும் இப்போது விற்பனைக்குக் கொண்டு வந்துள்ள காம்பாக்ட் டிஸ்க், டிஜிடல் யுகத்தின் குழந்தை! ஒலி நாடாவில் பதிவு செய்வதற்குப் பதில் இசையை ஒரு சிறிய பிளாஸ்டிக் தகட்டில் டிஜிடல் முறையில் பதிவு செய்கிறார்கள். ஒரு லேசர் கதிர், டிஜிடல் பதிவை ஊடுருவிப் படித்து, பிடித்து. ஆம்ப்ளிஃபையர் வழியே ஒலி மாற்றித் தருகிறது.

இம் முறையில் ஊசிக் கீறல் இல்லை என்பதால் எத்தனை தடவை பாட்டைப் போட்டுக் கேட்டாலும் தேய்மானம் இல்லை. 'சின்னச் சின்ன ஆசையை' நம் பேரன் பேத்தி காலம் வரை புதுக்கருக்கு மாறாமல் வைத்துக் கொள்ளலாம். கிராமபோன் ரெகார்டின் 'கரகர'ப்ரியாவோ, காஸட்/டேப் ரிகார்டரின் நிழல் போன்ற ஒலித் தொந்தரவோ சி.டி.யில் கிடையாது. நாய்ஸ் ஃப்ரீ மியூசிக். ஆனால் பக்கத்து ஃப்ளாட்டிலிருந்து வரும் எம். டி.வி. இடையூறு சி.டி.யின் பொறுப்பல்ல.

இந்தியாவில் சி.டி. தயாரிக்க ஒரு சிலர் பிள்ளையார் சுழி போட்டிருந்தாலும் இன்னும் உற்பத்தி தொடங்கவில்லை. மாஸ்டர் டேப் மேல் நாடுகளுக்குப் போய் டிஸ்குகளில் பதிவாகி, அவை இங்கு திரும்ப வந்து உள்ளூர்ப் பெயர் சூட்டிக் கொள்கின்றன.



* சி.டியும், பிளேயரும்




இருபத்தைந்து ரூபாய்க்குக் காஸட் வாங்கும் மத்தியதர வர்க்கத்துக்கு முந்நூறு ரூபாய் சி.டி. கட்டி வராதுதான்! என்றாலும் அறுபது ரூபாயிலேயே சி.டி.க்களைத் தர முடியும் என்று இப்போது சிலர் விளம்பரப் படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதால், அப்படித் தயாரித்து வெளிவரும் நாளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

– துளசி.

படங்கள் : கோபிநாத்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.

OWN YOUR CLASSIC APARTMENT AT THE TEMPLE TOWN OF NANGANALLUR



AKSHAYA

16, III Main Road, Nanganallur, Madras-600 061.
(MMDA Sanction No. B/22261/358A/B/92)

- Plot area 12000 Sq. Ft. (approx)
- 6300 Sq. Ft. Open Space for Car & Scooter Park
- 5 Ft. wide Corridors
- 27 Flats on G+2 Floors
- Single and Double bed room Flats from 400 to 850 Sq. Ft. in size
- Aesthetically and Tastefully designed
- Timely possession and Quality Construction
- Common T.V. antenna with Provision for Dish antenna
- Payment linked with Progress at site

CREATORS
NOT JUST BUILDERS

ASSOCIATED BUILDERS

2nd FLOOR, 26, RANGANATHAN STREET,
T. NAGAR, MADRAS - 600 017. INDIA

✆ OFF : 440210, 440224 / Res : 2345244 Fax : (044) 2344333

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka

